# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 79 — 1973 සැප්තැම්බර් 28 වැනි සිකුරාද — 1973.09.28

79 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கஙகள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனதிபதியின் பிரகடனம் .. .. | — | விலேக்கட்டளேகள் .. .. .. | 770 |
| சனதிபதியின் நியமனஙகளும் பிறவும் . .. | 737 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. .. | — |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| அரசாங்க சேவைக் குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும பிறவும் | 738 | அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள் .. | 773 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 739 | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 741 | | |


*கவனிக்க.*—வருமான உச்சவரம்பும் கட்டாயச் சேமிப்பும் (திருத்தம்) சட்டமூலமும் வீடமைப்பு அபிவிருத்தியாளர் (பிறப் பேற்பாடுகள் சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறை நிரப்பிகளாகப் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

## சனதிபதியின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 452

எண் : டி. 368/ஆர்.ஈ.சி.ரி.

**தரைப்படை—நிரந்தரப் படை—அதி உத்தமராம் சனதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர், 1973, ஒற்ரேபர் 1 ஆம் திகதி தொடக்கம் தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுகிருர்.

தற்காலிக மேஜர் ஈ. சி. பர்ணுந்து, சி.எஸ்.ஆர்.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்க,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, செத்தெம்பர் 18 ஆம் திகதி.

9–892—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

1973 இன் இல. 453

எண் : டி. 17/ஆர்.ஈ.சி.ரி.

**தரைப்படை—நிரந்தரப் படை—அதி உத்தமராம் சனதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நியமனந் துறத்தலும் நியமனமும்**

**நியமனந் துறத்தல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர், 1973, ஒகத்து 15 ஆம் திகதிமுதல் (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவின்கீழ் ஆட்சேர்ப்பு அலுவலர் நியமனத்தைத் துறந்தார் :

கப்ரின் எச். பி. ஜயசூரிய, சி.எ.

**நியமனம்**

கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர், 1973, ஒகத்து 15 ஆம் திகதிமுதல் (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவின்கீழ் ஓர் ஆட்சேர்ப்பு அலுவலராகக் கடவர் :

லெஃப்ரினனற் எஸ். எம். மூத்ததம்பி, சி.எ.

அதி உத்தனரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு,
1973, செத்தெம்பர் 11 ஆம் திகதி.

9–872—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரிசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலேக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்த மானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஞு மே மீ 5 ந உ.

எல். டபிளியூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

# நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல 454

**அரசியலமைப்பின் 126 (5) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரவையால் தமக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபைச் செயலாளரினுற் செய்யப்பட்ட பதில் நியமனங்கள்**

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எம். டி. ஜேசுரட்ணம் .. | பதில் இணை நீதவான் முதலியன, பருத்தித்துறை, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதகாக | 1973 செப்ரெம்பர் 25 லிருந்து | பருத்தித்துறை நீதிமன்ற 9281, 7630 7631, 7180 ஆகிய இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு. |
| திரு. ஜே. எல். ருஜபக்ச .. | பதில் இணை நீதவான் முதலியன, சிலாபம் | 1973 செப்ரெம்பர் 6 லிருந்து 9, 11 லிருந்து 13 | திரு. பி. எதுஸ்சூரிய இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. பி. டபிள்யு. அபேசூரிய.. | பதில் இணை நீதவான் முதலியன, மாத்தறை | 1973 செப்ரெம்பர் 8 | திரு. எஸ். ஜே. டி. த எஸ். விஜயரட்ண இல்லாத காலம். |
| திரு. ஆர். குலதுங்க .. | ஷை .. | 1973 செப்ரெம்பர் 9 லிருந்து 12 | ஷை |
| திரு. சேபால சமரசிங்க .. | ஷை .. | 1973 செப்ரெம்பர் 5 லிருந்து 7 | ஷை |
| திரு. ஜி. எஸ். சுரவீர .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கேகாலை | 1973 செப்ரெம்பர் 3 | திரு. டி. எஸ். டி. பி. ஆர். சேனுயக்க இல்லாத காலம். |
| திரு. எச். எஸ். ஏ. பெரேரா .. | பதில் இணை நீதவான் முதலியன, குருணுகல், குளியப்பிட்டியில் | 1973 செப்ரெம்பர் 13 | திரு. ஈ. பி. ரத்வத்த இல்லாத காலம் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, சிலாபம் | 1973 செப்ரெம்பர் 13 லிருந்து 15, 17, ஒக்டோபர் 1, 8 | திரு. கே. சி. ஈ. த அல்விஸ் இல்லாத காலம் |
| திரு. ஜி. எஸ். சுரவீர .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கேகாலை | 1973 செப்ரெம்பர் 8 | திரு. டி. ஈ. தர்மசேகர இல்லாத காலம் |
| திரு. எம். ஜி. எச். த அல்விஸ் .. | பதில் தலைவர், தொழில் முறை மன்று .. | 1973 செப்ரெம்பர் 18 | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/429/69. |
| | | 1973 செப்ரெம்பர் 19 | 11/2209/71, 11/2210/71, 11/2211/71. |
| | | 1973 செப்ரெம்பர் 20 | 11/ஏ/2109. |
| | | 1973 செப்ரெம்பர் 22 | காலி தொழில் முறை மன்றின் 11/எம்/1261 |
| | | 1973 செப்ரெம்பர் 24 | மாத்தறை தொழில் முறை மன்றின் 11/எம்/910. |
| | | 1973 செப்ரெம்பர் 25 | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/ஏ/1061, 11/762/69, ஐடிஎல்ரி/11/எம்/1084 லிருந்து 11/எம்/1089, 11/எம்/1064 லிருந்து 11/எம்/1069. |
| | | 1973 செப்ரெம்பர் 27 | 11/392/68. |
| | | 1973 செப்ரெம்பர் 28 | 11/392/68,11/ ஏ/1544. |
| | | 1973 செப்ரெம்பர் 29 | மாத்தறை தொழில் முறை மன்றின் 11/எம்/1454 ஆகிய இலக்க வழக்குகளை அவ்வத் தேதிகளில் விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு. |
| திரு. ஈ. கனேகொட .. | பதில் தலைவர், தொழில்முறை மன்று .. | 1973 செம்ரெம்பர் 24 | கொழும்பு தொழில் முறை மன்றின் 14/333/71. |
| | | 1973 செப்ரெம்பர் 28 | 14/898/71. |
| | | 1973 செப்ரெம்பர் 29 | 14/293/71 ஆகிய இலக்க வழக்குகளை தேதிவாரியாத விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு. |
| திரு. பி. டி. பெர்னுன்டோ .. | பதில் தலைவர், தொழில்முறைமன்று .. | 1973 செப்ரெம்பர் 21 | கொழும்பு தொழில்முறைமன்றின் 16/1022/71. |
| | | 1973 செப்ரெம்பர் 28 | 16/643/70 ஆகிய இலக்க வழக்குகளை அவ்வத் தேதிகளில் விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு. |
| திருமதி என். ரி. ஹேரத் .. | கல்பொடக் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் இணைத்தலைவர், அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 செப்ரெம்பர் 13 லிருந்து 15 தினங்கள் | பிஞ்வெல ஊர்நீதிமன்ற சிஆர் எம். 3423 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு. |
| செல்வி ஐ. எம். வீரரட்ண .. | அட்டக்களன் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஒகஸ்ட் 23 லிருந்து 25, 27 லிருந்து 29, செப்ரெம்பர் 6, 8, 10, 11 | திரு. பி. எம். செனிவிரட்ன இல்லாத காலங்கள். |
| திரு. டபிள்யு. எல். மலவான .. | ஷை .. | 1973 செப்ரெம்பர் 4 | ஷை |

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. என். வெதசிங்க .. | அட்டக்களன் கோறளே முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஒகஸ்ட் 30, 31, செப்ரெம்பர் 3 | திரு. பி. எம். செனிவிரட்ன இல்லாத காலங்கள் |
| திரு. ஜி. கருணரட்ண .. | தெகிகம்பள்கோறளே முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் .. | 1973 ஒகஸ்ட் 28 லிருந்து 30 | திரு. கே. ஜே. ஜே. பெரேரா இல்லாத காலங்கள். |
| திரு. யு. எல். அப்துல்மஜீத் .. | பாணமைப்பத்து முதலியவற்றின் ஊர்நீதி மன்றப் பதில்தலைவர் .. | 1973 செப்ரெம்பர் 1, 3 லிருந்து 8, 17 லிருந்து 22 | அல்லது மறு அறிவித்தல் வரை |
| திரு. எம். எச். காரியப்பர் .. | ஷை .. .. | 1973 செப்ரெம்பர் 24 லிருந்து 29 | ஷை |
| திரு. எ. சி. ஜபார் .. | ஷை .. .. | 1973 செப்ரெம்பர் 10, 11, 13 லிருந்து 15 | ஷை |
| திரு. எம். கே. செல்வருஜா ... | கொட்டியாரபற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 செப்ரெம்பர் 11 | திரு. கே. கணபதிப்பிள்ளை இல்லாத காலம். |
| செல்வி எம். சி. ஜயராணி பீரிஸ் .. | யற்றிக்கிந்த முதலியவற்றின் ஊர்நீதிமன் றப்பதில் தலைவர் | 1773 செப்ரெம்பர் 10 | திருமதி என். ரி. ஹேரத் இல்லாத காலம் காலம். |
| திரு. எ. ஜே. சாகீத் .. | றெய்கம் கோறளே முதலியவற்றின் ஊர்நீதி மன்றப் பதில் தலைவர் | 1973 செப்ரெம்பர் 18 லிருந்து 22, 24, 25, 27 லிருந்து 29 | அல்லது மறு அறிவித்தல் வரை. |
| செல்வி ரமணி த சில்வா .. | ஷை .. .. | 1973 செப்ரெம்பர் 17 | ஷை |
| செல்வி பி. ஆர். சமரஜீவ .. | வெல்லபோடபற்று முதலியவற்றின் ஊர்நீதி மன்றப் பதில் தலைவர் | 1973 செப்ரெம்பர் 24 | திரு. பி. ஓ. ஆர். விஜயதிலக்க இல்லாத காலம். |

லயனல் சமரதுங்க,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபை.

நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபை அலுவலகம்,
தபாற் பெட்டி 573,
சி/52, கெப்பிட்டிப்போல வீதி,
கொழும்பு 5,
1973 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 20 ந் வ.

9-881—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 455

பின்வரும் நியமனங்கள் இலங்கை நிருவாக சேவையிற் செய்யப் பட்டுள்ளது.

இ. நி. சே. வகுப்பு I தரம் I ஐச் சேர்ந்த திரு. டி. அலுவிகார மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1973.04.02 தொடக்கம் அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சிற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு I தரம் I ஐச் சேர்ந்த திரு. வி. சி. பீ. உனந் தென்ன 1973.04.02 தொடக்கம் பதிற் தாபனப் பணிப்பாளராக வும் 1973.04.09 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை தாபனப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு I தரம் II ஐச் சேர்ந்த திரு. எம். டபிள்யு. எஸ். குணரட்ன 1973.04.02 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மேலதிக உரிமை நிர்ணய உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. டபிள்யு. திலகரட்ன 1973.01.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பிரதி உணவு ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. வி. எல். சி. பீற்றர்ஸ் 1973.01.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பிரதிக் கடற்றொழிற் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. ஆர். மகா இந்திரா 1973.01.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை இறக்குமதி ஏற்றுமதி பிரதிக் கட்டுப்பாட்டாளராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. பி. எ. அபேவிக்கிரம 1973.01.11 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கடற்றொழில் அமைச்சின் உதவிச் செயலாளராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. எம். எ. எல். எஸ். என். முனசிங்க 1973.01.05 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மோட்டார் போக்குவரத்து சிரேட்ட உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த சி. சி. மாணிக்கவாசகர் 1973.02.15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை இரத்தினபுரி நிருவாக மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபராகக் கடமைபுரிய.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. எச். எ. பி. அபேயவர்தன 1973.04.11 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை சுகாதார அமைச்சிற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. கே. எ. கருணரட்ன அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் 1973.03.15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அம் மாவட்டத்து மேலதிக அரசாங்க அதிபராகக் கடமைபுரிய.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. ஜி. டி. உமகிலிய 1973.02.19 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பிரதித் தேயிலைக் கட்டுப் பாட்டாளராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. எம். ஈ. எல். பெர்னாந்து 1973.03.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கடற்றொழில் சிரேட்ட உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. எல். என். ரி. மெண்டிஸ் 1973.03.01 தொடக்கம் 1973.03.31 வரையும் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சிற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. எஸ். டபிள்யு. எ. டீ. சில்வா 1973.05.18 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொதுத் திறைசேரியில் வழங்கல், பதவியணி பிரதிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. திருலிங்கநாதன் 1973.05.18 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொதுத் திறைசேரியில் வழங்கல் பதவியணி பிரதிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. எஸ். எம். தியோபிலஸ் 1973.06.11 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை நீதி அமைச்சிற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. கே. ஜி. பெரேரா 1973.06.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டி. எம். ரி. அட்டிகல 1970.05.31 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை உள்ளூராட்சி உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எம். சி. டீ அல்விஸ் 1971.10.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை வழங்கல் பதவியணி உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஜி. பீ. ராஜபாக்ஸ 1972.06.06 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கடற்றொழில் உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டி. பி. ஏ. ஜெயவர்த்தன 1972.09.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஜி. ஜி. இளையதம்பி 1972.10.25 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை காணி அபிவி ருத்தி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. வீ. சி. வர்ணகுலசூரியா 1972.10.31 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மொனராகலை நிருவாக மாவட்டத்து பிந்தெனே–பத்துவாப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. பி. ஆர். கலகொட 1973.02.06 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மொனராகலை நிருவாக மாவட்டத்தின் மொனராகலைப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஏ. ஆர். கருணரட்ன 1973.01.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஏ. எஸ். வீரரட்ன 1973.01.19 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஜி. கருணரட்ன 1973.01.17 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. கே. எச். சி. பொன்னுந்து 1973.01.23 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அம்பாறை நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அந் நிருவாக மாவட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. பி. கே. ரொட்றிகோ 1973.01.29 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மொனராகலை நிருவாக மாவட்டத்தின் வெல்லவாயப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த செல்வி சி. டி. தசநாயக்க 1973.02.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கைத்தொழில் உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டபிள்யு. பி. எஸ். ஜெயவர்தன 1973.02.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்டத்து உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. பி. வி. மகாதேவா 1973.02.15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டு அமைச்சில் விளையாட்டு (நிருவாகம்) உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எச். ஆர். தாபரே 1973.02.26 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை சிறு கைத் தொழில் உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். அல்கமா 1973.03.10 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை குருநாகல் நிருவாக மாவட்டத் தின் மாகோ பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எம். அந்தோனிமுத்து 1973.03.20 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மட்டக்களப்பு நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம் மாவட்டத்திற்கு உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. கே. மாரிமுத்து 1973.05.02 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை தொழில் உதவி ஆணை யாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. சி. டபிள்யு. டீ சில்வா 1973.02.10 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை இறக்குமதி ஏற்றுமதி உதவிக் கட்டுப்பாட்டாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. சு. சண்முகசுந்தரம் 1973.02.21 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை யாழ்ப்பாண நிருவாக மாவட்டத்தின் தீவுகளுக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. பொ. நடராசா 1973.02.21 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை யாழ்ப்பாணக் கச்சேரிக்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டி. எவ். டீ சில்வா 1973.02.27 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பரீட்சை (நிருவாகம்) உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திருமதி கே. பி. ஆர். குணதிலக 1973.03.08 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. அ. குமாரசிங்க 1973.03.01 தொடக்கம் 1973.03.09 வரை உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச் சிற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. கே. குணராசா வவுனியா நிருவாக மாவட்டத்தின் வெங்கால செட்டிக்குளம் பகுதிக்கு 1973.03.15 தொடக்கம் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை வகுதி இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஏ. பி. விஜேதிலக 1973.03.15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கல்வி அமைச் சிற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. என். எச். டி. சில்வா 1973.03.15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கல்வி வெளி யீட்டுத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். சோமசுந்தரம் 1973.03.15 தொடக்கம் அநுராதபுரக் கச்சேரிக்கு இணைக்கப்பட்டவராக வும், 1973.05.02 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை பகுதி இறைவரி உத்தியோகத்தராக (பொதுத் தொடர்பு).

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. கே. எம். அபேசிங்க 1973.03.15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உதவிச் செயலாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எம். டி. அமரசிங்க 1973.03.23 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் உதவிச் செயலாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டி. எம். பீ. மறப்பண 1973.03.24 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கூட்டுறவு அபிவிருத்தி சிரேட்ட உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டி. பீ. ரணதுங்க 1973.03.24 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கமத்தொழில் அமைச்சின் உதவிச் செயலாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். டி. சந்திரதாச 1973.03.28 தொடக்கம் 1973.05.01 வரையும் திருகோணமலைக் கச்சே ரிக்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டபிள்யு. ஏ. ஜெயசிங்க 1973.03.28 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சில் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளராக (பிரதேச அபிவிருத்திப் பகுதி).

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டி. ஏ. டபிள்யு. ஜெயசேகர 1973.03.30 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். அபேசிங்கா 1973.05.02 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அநுராதபுர நிருவாக மாவட்டத்தின் நுவரகம்பலாத்த தெற்குப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். டி. சந்திரதாச 1973.05.02 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை திருகோணமலை நிருவாக மாவட்டத்தின் சேருவிலைப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தி யோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எச். எஸ். எம். டீ கொஸ்தா 1973.05.02 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கூட்டுறவு பணிசெய்வோர் ஆணைக்குழுவின் உதவிச் செயலாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஜெ. எச். ஈ. பண்டார 1973.04.02 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை குருநாகல் நிருவாக மாவட்டத்தில் பன்னலப் பகுதி இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஈ. பீ. அபேசேகர 1973.04.02 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. பி. வீரசேகர 1973.04.04 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கடற்றொழில் உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ரி. டி. ஜெ. விதாரன 1973.04.24 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டி. சி. ரி. ஜான்ஸ் 1973.05.02 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பெருந்தோட்டத் தொழில் அமைச்சின் உதவிச் செயலாளராக.

இ. நி. சே வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஏ. சோமசுந்தரம் 1973.05.04 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எம். டிசநாயக்க 1973.05.05 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மக்கள் குழுத் திணைக் களத்திற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. கே. மகாதேவா 1973.05.21 தொடக்கம் 1973.06.15 வரையும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. பி. எச். டி. விஜேசூரியா 1973.06.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. என். மாணிக்கநடராசா 1973.06.16 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் கவனிப்புச் சேவைகள் உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டி. எவ். ஏ. ரணசிங்க 1973.05.21 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எச். வி. எஸ். பீ. சொய்சா 1973.05.21 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எச். டபிள்யு. பி. சந்திர சாகர 1973.05.21 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. கே. மகாதேவா 1973.06.16 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அரசகரும மொழி உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டபிள்யு. டபிள்யு. ஈ. எம். டபிள்யு. ஏகநாயக்க 1973.03.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை குருநாகல் நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்டத்திற்கு உதவி அரசாங்க அதிபராகக் கடமைபுரிய.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. அ. குமாரசிங்க மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1973.03.10 தொடக்கம் மக்கள் குழு உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. வி. எஸ். எஸ். ஒகஸ்டீன் 1973.03.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மன்னார் கச்சேரிக்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. வி. டி. எஸ். குணவர்த்தன 1973.05.04 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கண்டி நிருவாக மாவட்டத்தின் உட தும்பரப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஆர். எம். எஸ். பீ. ரலப்பனவ 1973.02.12 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மாவட்ட காணி உத்தியோகத்தராக.

பி. எச். சிறிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7,
1973 ம் ஆடு செப்தெம்பர் மீ 19 ந உ.

9–841—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

இல. ஈபி/ஏ 3

1973 இன் இல. 456

பின்வரும் நியமனங்களைச் செய்வதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார் :—

கொழும்பு நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். ஏ. பி. சமரசேகர அவர்கள் களுத்துறை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் காலத்தில் தமது கடமைகளுடன், களுத்துறை நிருவாக மாவட்டத்திற்கு பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூர் அதிகாரியாக 1973, யூலை 3 ஆம் திகதியிலிருந்து 1973, ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரை கடமைபுரிய.

களுத்துறை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபர், திரு. பி. ஜி. புஞ்சிஹேவ அவர்கள், களுத்துறை நிருவாக மாவட்டத்திற்கு பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூர் அதிகாரியாக 1973, ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமைபுரிய.

பி. எச். சிறிவர்தன,
செயலாளர்.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7.
1973 ம் ஆடு செத்தெம்பர் மீ 10 ந உ.

9–714—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

# அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி.—பி. 73/52.

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1971 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 6 (1) என்னும் பிரிவினால் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

என். எம். பெரேரா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆடு செப்தெம்பர் மீ 15 ந உ.

கட்டளை

(1) (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு ஏற்புடைத்தாகும் வெளிநாட்டுச் செலாவணி, பின்வரும் நாடுகளெதனினதும் நாணயத்தில் கூறப்பட்ட வெளிநாட்டு செலாவணி யென இத்தால் விதிக்கப்படுகின்றது :—

அவுஸ்திரேலியா
அவுத்திரியா
கனடா
சேர்மன் சமஷ்டிக் குடியரசு
பிரான்சு
கொங்கொங்
இத்தாலி
மலேசியா
நெதர்லாந்து
சிங்கப்பூர்
சுவிற்சலாந்து
ஐக்கிய இராச்சியம்
ஐக்கிய அமெரிக்க நாடுகள்
யப்பான்
சுவீடன்

(2) (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 6 (1) என்னும் பிரிவின் கீழினதும் 1972, மார்ச்சு மாதம் 3 ஆந் தேதிய 15,000 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டதுமான கட்டளை, இத்தால் நீக்கப்படுகிறது.

9–843—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

## தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் திருத்தப்பட்டவாறன (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின்கீழ் கப்பற்றெழில், சுற்றுலா அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

பி. பீ. ஜீ. கலுகல்ல,
கப்பற்றெழில், சுற்றுலா அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு செப்தெம்பா 17 ந் வ.

கட்டளை

இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பு 1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் திருத்தப்பட்டவாறன (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பாதுகாப்பிடமொன்ருக இதனுல் வெளிப்படுத்தப் படுகிறது.

அட்டவணை

குடும்பிகல பாதுகாப்பிடம்

கிழக்கு மாகாணம், அம்பாரை மாவட்டம், பாணமைப்பற்றிலுள்ள அண்ணளவாக 17 சதுரமைல் விஸ்தீரணமுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்ட நிலப்பரப்புமுழுவதும் :—

யால கிழக்கு தேசிய பூங்கா எல்லையின் இறுதி வடமுனையாக அமைந்துள்ளதும் குருந்து உல்பொதவிலிருந்து திரிகோணமிதப்படி வரையப்பட்ட கோடானது வடகிழக்கு முகமாக லொனம ஆர ஆரம்பிக்கும் இடத்தை அடையும்வரைக்கும் ; அதிலிருந்து அவ்வரை லொனம ஆரவின் வலதுகரையோரமாக வடகிழக்கு முகமாக ஹெலவ ஆரவைச் சந்திக்கும்வரைக்கும் ; அதிலிருந்து ஹெலவ ஆரவின் வலதுகரை யோரமாக கிழக்கு முகமாகவும் தென்கிழக்கு முகமாகவும் ஹெலவ களபுவவின் மேற்கிலுள்ள ஹெல எலிய–பாணமை வண்டிப்பாதையைச் சந்திக்கும்வரைக்கும் ; அதிலிருந்து தெற்கு முகமாகவும் தென்கிழக்கு முகமாகவும் அது யால–பாணமை வண்டிப்பாதையைச் சந்திக்கும் வரைக்கும் ; வண்டிப்பாதையின் சொல்லப்பட்ட முனையிலிருந்து யால—பாணமை வண்டிப்பாதையோரமாக வடக்கு முகமாகவும் வடகிழக்கு முகமாகவும் ஹெலவ களபுவவை அது சந்திக்கும்வரைக்கும் ; பின் அதிலிருந்து நீரின் கரையோரமாக தென்கிழக்கு முகமாக ஒகந்தவர குடாவின் கடலை அடையும்வரைக்கும் ; அதிலிருந்து கடற்கரையோரமாகத் தெற்குமுகமாக அது யால கிழக்குத் தேசிய பூங்காவின் கிழக்கெல்லையைச் சந்திக்கும் கிரிகல்லக் குடாவரைக்கும் ; பின் அதிலிருந்து எப். ரி. பி. 10 இன் மேற்கெல்லையாக அமைந்துள்ள சொல்லப்பட்ட எல்லையோரமாக வடமேற்குமுகமாகத் தொடக்கப் புள்ளியை அடையும்வரைக்கும்.

9–707—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

இலங்கை அரசியலமைப்பின் 115(1)–ம் பிரிவுடன் சேர்த்து வாசிக் கப்படும் 116 ம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரத் தைக்கொண்டு, தொழிலமைச்சர், மைக்கேல் போல் த சொய்சா சிறிவர்த்தன ஆகிய யான், இத்துடனிணைந்த 1–ம் நிரலிற் குறிக்கப்பட்ட திணைக்களத்திலுள்ள அரசு அலுவலாளர்களின் நியமனத்துக்கான அதிகாரங்களை, 2–ம் நிரலிற் குறிக்கப்பட்ட அரசு அலுவலாளர்களுக்கு இத்தால் வழங்குகின்றேன். நியமனங்கள் பற்றிய வகையில் இவ் வதி காரங்கள், ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்குக் குறைந்த தொகை யினைத் திரட்டிய சம்பள அளவுத் திட்டத் தொடக்கச் சம்பளமாகக் கொண்ட அலுவலாளர்கள் தொடர்பாகமட்டும் அமைவனவன்றி, இணைந்த சேவைகளிலுள்ள அலுவலாளர்கள் பற்றியவகையில் அமை யாதவையாகும். அவ் வகையில், அவற்றின் திணைக்களத் தலைவர், பொது நிருவாகப் பணிப்பாளர் நாயகம் ஆவார்.

இலங்கை அரசியலமைப்பின் 120(2)–ம் பிரிவுடன் சேர்த்து வாசிக் கப்படும் 120(3)–ம் பிரிவின்கீழ் எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதி காரத்தைக் கொண்டு, தொழில் அமைச்சர், மைக்கேல் போல் த சொய்சா சிறிவர்த்தன ஆகிய யான், இத்துடனிணைந்த 1–ம் நிரலிற் குறிக்கப்பட்ட திணைக்களத்திலுள்ள அரசு அலுவலாளர்களின் மாற்றத்துக்கான அதி காரங்களை, 2–ம் நிரலிற் குறிக்கப்பட்ட அரசு அலுவலாளர்களுக்கு இத் தால் வழங்குகின்றேன்.

இக் கையளிப்புக் காரணமான மாற்றம், குறித்த திணைக்களத்துக்குள் ளான மாற்றத்தினையே கருதுவதாகும்.

இலங்கை அரசியலமைப்பின் 118(1)–ம் பிரிவுடன் சேர்த்து வாசிக் கப்படும் 119(1)–ம் பிரிவின்கீழ் எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதி காரத்தைக் கொண்டு, தொழில் அமைச்சர், மைக்கேல் போல் த சொய்சா சிறிவர்த்தன ஆகிய யான், ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்குக் குறைந்த தொகையினைத் திரட்டிய சம்பள அளவுத் திட்டத் தொடக்கச் சம்பளமாகக் கொண்ட அரசு அலுவலாளர்களின் விலக்குதல், ஒழுக லாற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான அதிகாரத்தினை, முன்னதாக அமைந்திருந்த அரசாங்க சேவை ஆணைக் கழகத்தினுல் அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த அலுவலாளர்களுக்கு இத்தால் வழங்குகின்றேன்.

அட்டவணை

| 1 ம் நிரல் | 2 ம் நிரல் |
|---|---|
| தொழில் அமைச்சு தொழிற்றிணைக்களம் | செயலாளர், தொழில் அமைச்சு தொழில் ஆணையாளர் |

எம். பி. த இசட். சிறிவர்தன,
தொழில் அமைச்சர்.

தொழில் அமைச்சு,
கொழும்பு–5,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 15 ந் வ.

9–681—28.09.73 ம் திகதிய வர்த்தமானி இல. 79

---

## 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டம்

கப்பற்றெழில், உல்லாசப்பிரயாண அமைச்சரின் ஒருப்பாட்டுடன் இலங்கை உல்லாசப்பிரயாணச் சபையினுலாக்கப்பட்ட, 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் 78, 96 ஆகிய பிரிவுகளின்கீழான ஒழுங்குவிதிகள்.

தர்மசிறி சேனநாயக்கா,
தவிசாளர்,
இலங்கை உல்லாசப்பிரயாணச் சபை.

கொழும்பு, ஆகத்து 6, 1973.

ஒழுங்குவிதிகள்

சுருக்கப் பெயர்.

1. இவ்வொழுங்குவிதிகள் 1973 ஆம் ஆண்டின் பிரயாண முகவர்கள் விதிப்புக்கோவை என எடுத்துக்காட்டப்படலாம்.

பிரயாண முகவர்கள் பதியப்படவும் உரிமமளிக்கப்படவும் வேண்டும்.

2. (1) இவ்விதிப்புக்கோவையின் நோக்கங்களுக்காகச் சபையினுலதற்கென நியமிக்கப்பட்டுக் கசற்றில் அறிவிக்கப்படக் கூடிய அத்தகைய தேதியிலும் அதன்பின்னரும், ஆள் எவரேனும், பிரயாண முகவர் ஒருவரின் தொழிலை அத்தகைய தொழில் அக்காலத்துக்கென இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளின்கீழ்ப் பதியப்பட்டு உரிமமளிக்கப்பட்டிருந்தாலன்றிக் கொண்டுநடாத்துதலாகாது.

(2) ஒராம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணுகப்பிரயாண முகவர் ஒருவரின் தொழிலுக்கென எவையேனும் வளவுகள் உபயோகிக்கப்படுமிடத்து, அவ்வளவுகளில் குடியிருப்பவர் அல்லது அவற்றின் சொந்தக்காரர் அல்லது அத்தகைய தொழிலுக்கு அக்காலத்துக்குப் பொறுப்பாகவிருக்கும் ஆள் தவறென்றுக்குக் குற்றவாளியாவார்.

## பதிவு

பதிவுக்கான ஆக்குறைந்த தேவைப்பாடுகளும் பிரயாண முகவர்களை வகுப்புகளாகப் பிரித்தலும்.

3. தகுதிவாய்ந்த அதிகாரி அவர் தகுந்தவர்கள் எனக் கருதும் பிரயாண முகவர் தொழிலில் ஈடுபட்டுள்ள அத்தகைய தனியாட்களை அல்லது ஆட்கள் குழுக்களைக் கலந்தாலோசித்தபின்னர், கசற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் பிரயாண முகவர்களின் தொழிலைப் பதிவுசெய்வதற்கவசியமான ஆக்குறைந்த தேவைப்பாடுகளைக் காலத்துக்குக்காலம் விதிக்கலாம். அத்தகைய அதிகாரியினால் தீர்மானிக்கப்படக்கூடிய வெவ்வேறு ஆக்குறைந்த தேவைப்பாடுகள் பிரயாண முகவர்களின் தொழிலைச் சேர்ந்த ஒவ்வொரு வகுப்புத் தொடர்பிலும் அவ்விதம் விதிக்கப்படலாம். அத்தகைய அறிவித்தல் எதுவும், அத்தகைய அதிகாரியினால் அதை ஒத்த பிறிதொரு அறிவித்தல் மூலம் அவ்விதம் திருத்தப்படலாம். நீக்கப்படலாம், அல்லது பதிலீடு செய்யப்படலாம்.

பதிவுக்கான விண்ணப்பம்.

4. (1) பிரயாண முகவர் ஒருவரின் தொழிலைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும்.—

(அ) தகுதிவாய்ந்த அதிகாரிக்கு எழுத்திற் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) அந்த நோக்கத்திற்கென அத்தகைய அதிகாரியினால் ஏற்பாடுசெய்யப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) அப்படிவத்தின்படி தேவையான விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) அத்தொழிலின் சொந்தக்காரராய் இருக்கவேண்டிய விண்ணப்பகாரரால் கையொப்பம் இடப்படலும் வேண்டும்.

(2) ஏற்ற அறிவிக்கப்பட்ட கட்டணம் கொடுபட்டதன்மேலல்லாது பிரயாண முகவரொருவரின் தொழில் எதுவும் பதிவு செய்யப்படுதலாகாது.

பிரயாண முகவர்களின் இடாப்பு.

5. இவ்விதிப்புக்கோவையின் நோக்கங்களுக்கென, " பிரயாண முகவர்களின் இடாப்பு" என இழைக்கப்படவேண்டிய புத்தகமொன்றைத் தகுதிவாய்ந்த அதிகாரி தம்மால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில், தயாரித்துப் பேணிவருதல் வேண்டும் ; அல்லது தயாரிக்கப்பட்டுப் பேணிவரப்படச்செய்தல் வேண்டும் ; பிரயாண முகவர்களின் தொழில் சம்பந்தமான விபரங்கள் இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க அதில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

பதிவுசெய்தலும் வகுப்புப் பிரித்தலும்.

6. (1) எட்டாம் ஒழுங்குவிதியில் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கும் வகையில் தவிர, தகுதிவாய்ந்த அதிகாரி 4 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின்கீழ் விண்ணப்பம் ஒன்றைப் பெற்றதும் அதனை உரியவாறு சீர்தூக்கிப்பார்த்தபின்—

(அ) அந்தப் பிரயாண முகவரின் தொழிலைப் பதிவுசெய்ய வேண்டுமென்பதுடன் 3 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆக்குறைந்த தேவைப்பாடுகளுக்கிணங்க அத்தகைய தொழிலுக்கு எவ்வகுப்பைச் சேர்ந்ததென அதற்கு ஒரு வகுப்பை ஒதுக்குதலும் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பகாரரை அத்தகைய தொழிலின் சொந்தக்காரராகப் பதிவுசெய்தல் வேண்டும் ;

(இ) அந்நோக்கத்துக்கென ஏற்பாடுசெய்யப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் அவ்விண்ணப்பகாரருக்குப் பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் ,

அத்தகைய பதிவுச்சான்றிதழ்—

(i) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகள் இணங்கி ஒழுகப்படுவதனை உறுதியாக்குவதற்கும் ;

(ii) 3 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள ஆக்குறைந்த தேவைப்பாடுகளுக்குக் குறைந்தனவல்லாத தேவைப்பாடுகளுடன் அப்பிரயாண முகவரின் தொழில் இணங்கி ஒழுகுவதனை உறுதிசெய்வதற்கும்,

தகுதிவாய்ந்த அதிகாரி அவசியமானவை எனக் கருதும் நியதிகளை அல்லது நிபந்தனைகளைக் கொண்டிருக்கலாம்.

(2) பிரயாண முகவரொருவரின் தொழிலின் சொந்தக்காரராக இவ்வொழுங்குவிதியின்கீழ்ப் பதிவுசெய்யப்படும் ஆள் ஒருவர், இவ்விதிப்புக்கோவையில் " பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர்" ஒருவர் எனக் குறிப்பிடப்படுகின்றார்.

(3) இவ்வொழுங்குவிதியின்கீழ் பதிவேட்டில் குறிக்கப்படும் ஒவ்வொரு குறிப்பும் " பதிவுக்குறிப்பு " எனக் குறிப்பிடப்படலாம்.

(4) பிரயாண முகவர்த் தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அந்தத் தொழில் சம்பந்தமாக வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழை அவருடைய பதிவுசெய்யப்பட்ட தொழில் நடாத்தப்படுமிடத்தில் துலாம்பரமான ஓரிடத்தில் வைக்கப்பட ஏற்பாடுசெய்தல் அவருடைய கடமையாகும்.

சில சந்தர்ப்பங்களில் தற்காலிகமான பதிவு.

7. தகுதிவாய்ந்த அதிகாரி, பதிவுசெய்யும் நேரத்தில் அவரால் குறிப்பிடக்கூடிய அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது பிரயாண முகவர் ஒருவரின் தொழிலைத் தற்காலிகமாகப் பதிவுசெய்யலாம்.

பதிவுசெய்ய மறுத்தல்.

8. (1) தகுதிவாய்ந்த அதிகாரி பின்வரும் காரணங்களுள் எதற்காகவாயினும் பிரயாண முகவர் ஒருவரின் தொழிலைப் பதிவுசெய்வதனைக் கட்டளைமூலம் மறுக்கலாம் :—

(அ) 3 ஆம் ஒழுங்குவிதியின்கீழ்த் தகுதிவாய்ந்த அதிகாரியினால் விதிக்கப்பட்ட ஆக்குறைந்த தேவைப்பாடுகள் இணங்கி ஒழுகப்படாமை ;

(ஆ) விண்ணப்பகாரராவது அல்லது பிரயாண முகவரின் தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது வேலைக்கமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ள ஆள் எவராவது பதிவுக்கான விண்ணப்பத்தின் தேதிக்கு நேர்முன்னரான 5 ஆண்டுகள் காலத்தின்போது நாணயச் சட்டத்தின், செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின், 1968 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ்ச் சட்டத்தின், சுங்கக் கட்டளைச்சட்டத்தின் அல்லது ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு அல்லது அத்தகைய தொழில் நடைபெறும் வளவுகளைச் சட்டவிரோதமான நோக்கத்துக்காகப் பயன்படுத்தியதனை உட்படுத்திய தவறொன்றுக்கு அல்லது கெட்ட நடத்தையுட்படுத்திய தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டிருத்தல் ;

(இ) பிரயாண முகவரின் தொழில் அமைந்துள்ள இடம், கட்டடம், சுகாதாரசேவை, இடவசதி, பணியாட்டொகுதி அல்லது உபகரணம் என்பன சம்பந்தமான காரணங்கள்.

(2) பதிவுக்கான விண்ணப்பத்தை மறுத்துத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ்ச் செய்யப்படும் ஒவ்வொரு கட்டளையும் அத்தகைய கட்டளையைச் செய்வதற்கான அவரின் காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பிரயாண முகவர் ஒருவரின் தொழிலைப் பதிவதற்கான விண்ணப்பம் ஒன்றை மறுக்கும் கட்டளை ஒன்று செய்யப் படுமிடத்து அதற்கான காரணங்களோடு கூடிய அக்கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட படியொன்று தகுதிவாய்ந்த அதிகாரி யினால் பதிவஞ்சல்மூலம் விண்ணப்பகாரருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(4) விண்ணப்பகாரர் ஒருவர் அத்தகைய தவறானது, தான் அறியாது தனது ஊழியரால் புரியப்பட்டது என அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தேவையான எல்லாக் கவனத்தையும் தாம் பிரயோகித்தார் எனத் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்தியுறும்வகையில் தாபித்தால், விண்ணப்பகாரரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆள் எவரேனும் இவ்வொழுங்குவிதியில் குறிப்பிட்ட ஏதேனும் தவறுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் என்ற காரணத்தின்மீது பிரயாண முகவர் ஒருவரின் தொழிலைப் பதிவுசெய்ய மறுக்கும் கட்டளையெதுவும் செய்யப்படலாகாது.

(5) பிரயாண முகவர் ஒருவரின் ஏதேனும் தொழிலைப் பதிய மறுக்கும் கட்டளை ஒன்றைச் செய்வதன்முன்னர் தகுதி வாய்ந்த அதிகாரி விண்ணப்பகாரர் அவராகவாயினும் அல்லது அதற்கென எழுத்தில் அவரால் அதிகாரம் அளிக்கப்படும் பிரதிநிதி ஒருவர் மூலமாயினும் கேட்கப்படச் சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும்.

பதிவை இடை நிறுத்தல் அல்லது நீக்குதல்.

9. (1) இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமையத் தகுதிவாய்ந்த அதிகாரி—

(அ) ஒழுங்குவிதி 8 (1) (அ), (இ) என்பவற்றில் குறிப்பிடப்பட்ட காரணங்களுள் எதன்மீதாயினும் ;

(ஆ) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளுள் எதனையேனும் மீறியதன் காரணமாக இச்சட்டத்தின்கீழ்ப் புரியப் படும் ஏதேனும் தவறுக்கு அல்லது நாணயச் சட்டம், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1968 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ்ச் சட்டம், சுங்கக் கட்டளைச்சட்டம், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்பவற்றின்கீழான தவறொன்றுக்கு அப்பிரயாண முகவர்த் தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரது ஊழியருள் எவரும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுமிடத்து அல்லது பிரயாண முகவர் தொழிலினைச் சட்டவிரோதமான நோக்கத்திற்காகப் பயன்படுத்தியதற்காக அல்லது கெட்டநடத்தையை உட்படுத்தும் தவறொன்றுக்காக அப்பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரின் ஊழியருள் எவரேனும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுமிடத்து ;

(இ) பிரயாண முகவர்த் தொழிலுக்கெனப் பயன்படுத்தப்படும் வளவுகள் அல்லது அத்தகைய வளவுகளின் ஏதேனும் பகுதி தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்திலான சம்மதமின்றி அத்தகைய பிரயாண முகவரின் தொழில் தவிர்ந்த வேறு ஏதேனும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுமிடத்து அல்லது குடியிருக்கப் படுமிடத்து,

அப்பிரயாண முகவரின் தொழிலின் பதிவினைக் கட்டளைமூலம் இடைநிறுத்தலாம் அல்லது நீக்கஞ்செய்யலாம்.

பிரயாண முகவர் ஒருவரின் தொழிலின் பதிவினை இடைநிறுத்தி அல்லது நீக்கித் தகுதிவாய்ந்த அதிகாரியினால் செய்யப்படும் அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் அத்தகைய கட்டளைக்கான காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தகைய தவறு அவருக்குத் தெரியாமல் அவரது ஊழியரால் புரியப்பட்டது என அல்லது அவ்வித தவறுபுரியப்படுதலைத் தடுப்பதற்குத் தேவையான எல்லாக் கவனத்தையும் அவர் மேற்கொண்டார் எனத் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்தியுறும்வகையில் தாபித்தால், பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் வேலைக்கமர்த்தப் பட்டுள்ள ஆளெவரும் இவ்வொழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள தவறெதற்கும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளார் என்ற காரணத்தின்மீது பிரயாண முகவர்த் தொழிலின் பதிவினை இடைநிறுத்தும் அல்லது நீக்கும் கட்டளை எதுவும் செய்யப்படலாகாது.

(3) ஏதேனும் பிரயாண முகவர்த் தொழிலினது பதிவை இடைநிறுத்தி அல்லது நீக்கிக் கட்டளையைச் செய்வதன்முன்னர் தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய தொழிலின் பதியப்பட்ட சொந்தக்காரர் அவராகவாயினும், அதற்கென எழுத்தில் அவரால் அதிகாரம் அளிக்கப்படும் பிரதிநிதி ஒருவர் மூலமாயினும் கேட்கப்படச் சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும்.

(4) தகுதிவாய்ந்த அதிகாரியினால் அத்தகைய அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள வழிவகைகள் அத்தகைய அறிவித்தலில் காட்டப்பட்ட காலத்தினுள் அத்தகைய சொந்தக்காரரால் மேற்கொள்ளப்படாவிட்டால் அத்தகைய காலங்கழிந்ததன்மேல் பதிவினை நிறுத்தும் அல்லது நீக்கஞ்செய்யும் கட்டளையொன்று இடப்படும் என அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய பிரயாண முகவர்த் தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்குப் பதிவு அஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்படும் எழுத்தி லுள்ள அறிவித்தல்மூலம் அவருக்கு அறிவித்திருந்தும், அவ்விதம் காட்டப்பட்ட காலத்தினுள் அத்தகைய வழிவகைகளை மேற்கொள்ளுவதற்கு அத்தகைய சொந்தக்காரர் தவறியுமிருந்தாலன்றி அத்தகைய தொழிலின் பதிவை நிறுத்தும் அல்லது நீக்கஞ்செய்யும் கட்டளையெதாவது (1) ஆம் பந்தியின்கீழ் இடப்படுதலாகாது.

(5) பிரயாண முகவர் ஒருவரின் தொழிலின் பதிவை இடைநிறுத்தி அல்லது நீக்கிக் கட்டளை ஒன்று செய்யப்படுமிடத்து அத்தகைய கட்டளைக்கான காரணங்களோடுகூடிய அக்கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி தகுதிவாய்ந்த அதிகாரியினால் பதிவஞ்சல்மூலம் அப்பதியப்பட்ட சொந்தக்காரருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பிரயாண முகவர்களின் வகுப்புகளைத் திருத்தியமைத்தல்.

10. (1) தகுதிவாய்ந்த அதிகாரி காலத்திற்குக்காலம் அச்சூழ்நிலைகளில் தகுதியானதென அவர் கருதும் அத்தகைய விசாரணையின் பின்வரும் பதியப்பட்ட சொந்தக்காரருக்கு அவரின் கூற்று கேட்கப்படுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தபின்னரும் அத்தொழிலினால் அக்காலத்துப் பேணப்பட்டுவரும் தரங்களுக்கு இணங்கப் பிரயாண முகவர் ஒருவரின் தொழில் எதற்கேனும் ஒதுக்கப்பட்ட வகுப்பினைக் கட்டளைமூலம் மாற்றலாம் அல்லது மீள ஆயலாம். தகுதிவாய்ந்த அதிகாரியினால் செய்யப்படும் அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் அதற்கான அவரின் காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) காரணங்கள் உட்பட இவ்வொழுங்குவிதியின்கீழ்ச் செய்யப்படும் ஒவ்வொரு கட்டளையினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று பதிவஞ்சல் மூலம் பதியப்பட்ட சொந்தக்காரருக்குத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அனுப்பப்படல் வேண்டும்.

### உரிமமளித்தல்

உரிமமளித்தல்.

11. (1) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க அது பதியப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதம் கழிந்தவன்றும் அதன்பின்னரும், இவ்விதிப்புக்கோவையின்கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட பிரயாண முகவர் எவராவது தகுதிவாய்ந்த அதிகாரியினால் வழங்கப்பட்டதும் அப்போதைக்கு வலுவுடையதாக இருப்பதுமான உரிமம் ஒன்றின் அதிகாரத்தின் கீழும் அதன் நியதிகள் நிபந்தனைகளுக்கிணங்கவுமே தவிரத் தொழிலை நடாத்துதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுவதன் காரணமாக இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்று புரியப்படுமிடத்து, அத்தகைய பிரயாண முகவர்த் தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தவறுக்குக் குற்றவாளியாவார்.

(3) (அ) பதிவுசெய்யப்பட்ட பிரயாண முகவரொருவர்த் தொழிலொன்று சம்பந்தமான உரிமமொன்றுக்கான விண்ணப்பங்களொவ்வொன்றும்—

(i) தகுதிவாய்ந்த அதிகாரிக்கு எழுத்திற் செய்யப்படுதல் வேண்டும் ;

(ii) அந்நோக்கத்துக்கென அவரால் ஏற்படுத்தி வைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திற் செய்யப்படுதல் வேண்டும் ;

(iii) அத்தொழில் சம்பந்தமான பதிவுக் குறிப்பில் அடங்கியுள்ள விபரங்களை அவையடக்கியிருக்க வேண்டியனவான விபரங்களாகவுள்ள அப்படிவத்தின்படி தேவையான விபரங்களை அடக்கியிருத்தல் வேண்டும் ;

(iv) அத்தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் ஆண்டுக்கென உரிமத்தைப் புதுப்பித்தற்கெனச் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் அந்நோக்கத்துக்கென ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள படிவத்திலும், அறிவிக்கப்பட்ட உரிய கட்டணத்துடனும் தகுதிவாய்ந்த அதிகாரிக்குச் செய்யப்படல் வேண்டும். அத்துடன் அது அவ்வுரிமம் முடிவடையும் தேதிக்கு முப்பது நாட்களுக்கு முன்னராவது அவருக்குக் கிடைத்தல் வேண்டும்.

(4) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்று பொது உரிமமொன்றாக அல்லது தற்காலிக உரிமமொன்றாகவிருக்கலாம்.

(5) பொது உரிமமொவ்வொன்றும் அதனைப் புதுப்பித்தல் ஒவ்வொன்றும் அதிற் குறிப்பிடப்படும் தேதியன்று வலுவுடையதாகவரல் வேண்டும். அத்துடன் தகுதிவாய்ந்த அதிகாரியினால் முன்னரே அது நீக்கப்படாவிடின் அத்தேதியிலிருந்து 12 மாதங்களுக்கு வலுவுடையதாக இருந்துவரும்.

தற்காலிக உரிமம் ஒவ்வொன்றும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அத்தகைய உரிமத்திற் குறிப்பிடப்படும் அத்தகைய காலத்துக்கு அதற்கு மேற்படவல்லாது, வலுவுடையதாயிருந்துவரும்.

(6) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அவருடைய தொழில் சம்பந்தமாகத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் வழங்கப்பட்ட உரிமத்தை அவருடைய தொழில் நடைபெறும் வளவில் துலாம்பரமான ஓரிடத்தில் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்.

(7) இவ்விதிப்புக்கோவையின்கீழ் வழங்கப்படும் உரிமம் எதுவும் வேறு ஆள் எவர்க்காயினும் மாற்றப்படற்கூடியதல்ல என்பதுடன் அதற்கிணங்க அத்தகைய மாற்றுதல் எதுவும் வெற்றும் வெறிதானதுமாதலுமாகும்.

12. (1) அத்தொழில் தொடர்பில் உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்ட ஏதேனும் தொழில் இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளின்கீழ்ப் பதியப்படாவிட்டால் ;

(2) அவ்விண்ணப்பம் எந்த ஆண்டு தொடர்பாகச் செய்யப்படுகின்றதோ அவ்வாண்டுக்கு நேர்முந்திய ஆண்டின்போது பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் தகுதிவாய்ந்த அதிகாரியினால், அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தின் நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறியிருந்தால் ;

(3) அவ்விண்ணப்பம் எந்த ஆண்டு தொடர்பாகச் செய்யப்படுகின்றதோ அவ்வாண்டுக்கு நேர்முந்திய ஆண்டின்போது இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளுள் எதனையேனும் மீறியதன் காரணமாக இச்சட்டத்தின்கீழ்ப் புரியப்படும் ஏதேனும் தவறுக்கு அல்லது நாணயச் சட்டம், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம், 1968 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி உரிமைச்சான்றிதழ் சட்டம், சுங்கக் கட்டளைச்சட்டம், அல்லது இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்பவற்றின்கீழான தவறொன்றுக்கு அப்பிரயாண முகவர்த் தொழிலின் பதியப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரின் ஊழியருள் எவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால், அல்லது பிரயாண முகவரின் தொழிலுக்கான வளவுகளைச் சட்டவிரோதமான நோக்கத்திற்காகப் பயன்படுத்தியதற்காக அல்லது கெட்டநடத்தையுட்படுத்திய தவறொன்றுக்காக அப்பதியப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரின் அலுவலருள் எவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால்,

தகுதிவாய்ந்த அதிகாரி உரிமம் ஒன்றை வழங்க மறுத்தல் வேண்டும்.

உரிமத்தின் நியதிகள் அல்லது நிபந்தனைகள்.

13. (1) பதிவுசெய்யப்பட்ட பிரயாண முகவர்த் தொழில் சம்பந்தமான உரிமமொன்று அவ்வுரிமத்திற் காட்டப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்படலாம் ; அவ்விதம் காட்டப்படும் நியதிகள் அல்லது நிபந்தனைகள்—

(அ) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்குதலை வலியுறுத்துவதற்கும் ;

(ஆ) அத்தொழில் எந்த வகுப்பை அல்லது தரத்தைச் சார்ந்ததோ அந்த வகுப்பை அல்லது தரத்தைச் சார்ந்த பிரயாண முகவர்களின் விஷயத்தில் ஏற்புடையனவான தராதரங்களிலும்பார்க்கக் குறையாதவற்றுடன் அத்தகைய தொழில் இணங்குவதை நிச்சயப்படுத்துவதற்கும்,

அவசியமானவையெனத் தகுதிவாய்ந்த அதிகாரி கருதக்கூடிய நியதிகளாக அல்லது நிபந்தனைகளாகவிருக்கலாம்.

(2) பதினொன்காம் ஒழுங்குவிதியின் (6) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய—

(அ) அப்பிரயாண முகவருக்கு இவ்விதிப்புக்கோவை பிரயோகிக்கப்படுகையில் அதன் ஏற்பாடுகளிலெதனையாவது மீறிய காரணத்தால் சட்டத்தின்கீழ்ப் புரியப்பட்ட ஏதேனும் தவறுக்கு அல்லது நாணயச் சட்டத்தின்கீழான அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழான அல்லது 1968 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ்ச் சட்டத்தின்கீழான அல்லது சுங்கக் கட்டளைச்சட்டத்தின்கீழான அல்லது ஏற்றுமதி இறக்குமதிச் சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட சமயத்தில் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரால் வேலைக்கமர்த்தப்பட்ட எவராவது அப்பிரயாண முகவரின் தொழிலுக்கான வளவுகளைச் சட்டவிரோதமான நோக்கத்திற்காகப் பயன்படுத்தியதற்காக அல்லது கெட்டநடத்தையுட்படுத்திய தவறொன்றுக்காக அப்பதியப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரின் ஊழியர்களுள் எவரேனும் குற்றவாளியாகக் காணப்பட்டதும் ;

(ஆ) அவ்வுரிமத்திற் காட்டப்பட்டுள்ள நியதி அல்லது நிபந்தனையெதனையாவது அத்தகைய சொந்தக்காரர் மீறுஞ்சமயத்தில் அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுஞ்சமயத்தில் ;

(இ) பிரயாண முகவரின் தொழிலுக்கெனப் பயன்படுத்தப்படும் வளவுகள் அல்லது அதன் ஏதேனும் பகுதி தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்திலான சம்மதமின்றி அத்தகைய பிரயாண முகவரின் தொழிலல்லாத வேறு நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டால் அல்லது குடியிருக்கப்பட்டால்,

பதிவுசெய்யப்பட்ட பிரயாண முகவர்த் தொழில் சம்பந்தமாகத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் வழங்கப்பட்ட உரிமமொன்று அத்தகைய அதிகாரியினால் நிறுத்திவைக்கப்படலாம் அல்லது நீக்கஞ்செய்யப்படலாம் அல்லது புதுப்பிக்கப்படலாகாது என்பது அத்தகைய உரிமத்தின் ஒரு நியதியாக அல்லது நிபந்தனையாகவிருக்கும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி தாமாக அல்லது அதற்கெனப் பிரயாண முகவர்த் தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் அவருக்குச் செய்யப்படும் முறையீட்டின்பேரில் அந்தப் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் கேட்கப்படச் சந்தர்ப்பமளித்தபின்னர் அந்தத் தொழில் சம்பந்தமான உரிமத்துடன் இணைந்துள்ள நியதி அல்லது நிபந்தனை எதனையாவது திருத்தலாம், வேறுபடுத்தலாம், மாற்றியமைக்கலாம் அல்லது அழிக்கலாம், அல்லது அதற்குப் புதிய நியதி நிபந்தனைகளைச் சேர்க்கலாம்.

உரிமத்தை வழங்க மறுத்தல் அல்லது அதனை நீக்கஞ்செய்தல் அல்லது நிறுத்தி வைத்தல்.

14. (1) பதிவுசெய்யப்பட்ட பிரயாண முகவர்த் தொழில் சம்பந்தமான உரிமமொன்றுக்கான அல்லது உரிமத்தைப் புதுப்பித்தற்கான விண்ணப்பமொன்று கிடைத்ததன்மேல், தகுதிவாய்ந்த அதிகாரி, (6) ஆம் பந்தியினேற்பாடுகளுக்கமைய, அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்து அல்லது மறுத்துக் கட்டளையொன்றையிடலாம்.

ஆனல் உரிமத்துக்கான விண்ணப்பத்தை அவர் மறுக்கும் எச்சந்தர்ப்பத்திலும் தகுதிவாய்ந்த அதிகாரி அதற்கான காரணத்தை அவரது கட்டளையில் தருதல் வேண்டும்.

(2) ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட பிரயாண முகவர்த் தொழில் சம்பந்தமான உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்றை மறுத்து அவரால் இடப்பட்ட கட்டளையொவ்வொன்றினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்குச் சேர்ப்பிக்கப்படத் தகுதிவாய்ந்த அதிகாரி ஏற்பாடுசெய்தல் வேண்டும். அத்தகைய அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒவ்வொன்றும் அத்தகைய மறுத்தற் கட்டளை செய்வதற்கான காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பதிவுசெய்யப்பட்ட பிரயாண முகவர்த் தொழிலேதுமொன்று சம்பந்தமான உரிமத்துக்கான விண்ணப்பமொன்றை அனுமதித்துத் தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளையொன்றையிடுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரியினூற்றீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய விபரங்களையடக்கியுள்ளதுமான உரிமமொன்றை அவர் அப்பதிவுசெய்யப்பட்ட சொந்தக் காரருக்கு வழங்குதல் வேண்டும்.

(4) அத்தகைய உரிமமொன்றின் நியதிகளும் நிபந்தனைகளும் இணங்கியொழுகப்பட்டாலன்றி தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய உரிமத்தைக் கட்டளைமூலம் நிறுத்திவைக்கலாம் அல்லது நீக்கஞ்செய்யலாம். இப்பந்தியின்கீழ்ச் செய்யப்படும் ஒவ்வொரு கட்டளையும் அத்தகைய கட்டளைக்கான காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) தகுதிவாய்ந்த அதிகாரியினலவ்வறிவித்தலிற் காட்டப்பட்டுள்ள வழிவகைகள் அவ்வறிவித்தலிற் காட்டப்பட்ட காலத்தினுள் அவ்வுரிமம் வைத்திருப்பவரினல் மேற்கொள்ளப்படாவிட்டால் அவ்வறிவித்தலிற் காட்டப்பட்ட காலங்கழிந்ததன் மேல் அவ்வுரிமத்தை நிறுத்திவைக்கும், அல்லது நீக்கஞ்செய்யும் கட்டளையான்று இடப்படுமென்று தகுதிவாய்ந்த அதிகாரி அவ்வுரிமம் வைத்திருப்பவருக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் எழுத்திலுள்ள அறிவித்தலினல் அவருக்கு அறிவித்திருந்தும் அவ்விதம் காட்டப்பட்ட காலங்கழியமுன் அத்தகைய வழிவகைகளை மேற்கொள்ளுவதற்கு அவ்வுரிமம் வைத்திருப்பவர் தவறியுமிருந்தாலன்றி உரிமமொன்றை நிறுத்திவைக்கும் அல்லது நீக்கஞ்செய்யுங் கட்டளையெதுவும் இடப்படுதலாகாது.

(6) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரொருவராற் செய்யப்படும் உரிமத்துக்கான விண்ணப்பத்தை மறுக்கும் அல்லது அத்தகைய உரிமத்தை நிறுத்திவைக்கும் அல்லது நீக்கஞ்செய்யும் கட்டளையொன்றை இடமுன் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அவராக நேரே, அல்லது அதற்காக அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலம் விசாரிக்கப்படுவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி அவருக்குச் சந்தர்ப்பமொன்றை அளித்தல் வேண்டும்.

(7) உரிமமொன்றை நிறுத்திவைக்கும் அல்லது நீக்கஞ்செய்யும் கட்டளையொன்று இடப்படுமிடத்து, அக்கட்டளையின் பிரதியொன்று, அத்தகைய கட்டளைக்கான காரணங்களுட்படப் பதியப்பட்ட சொந்தக்காரருக்குப் பதிவஞ்சல் மூலம் தகுதிவாய்ந்த அதிகாரியினல் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(8) அத்தகைய தவறு அவருக்குத் தெரியாமல் அவருடைய வேலையாளரினூற் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுதலைத் தடுப்பதற்கு முறையான எல்லாக் கவனத்தையும் அவர் செலுத்தினரெனத் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்தியடையத்தக்கதாக அத்தகைய தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் நிரூபித்தால், அத்தகைய தொழிலின் வேலைக்கமர்த்தப்பட்ட எவராவது ஏதேனுமொரு தவறுக்குக் குற்றவாளியெனக் காணப்பட்டுள்ள காரணத்தைக்கொண்டு பிரயாண முகவரொருவரின் தொழிலின் உரிமத்தை நிறுத்திவைக்கும் அல்லது நீக்கஞ்செய்யும் கட்டளையெதுவும் இடப்படுதலாகாது.

(9) ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட பிரயாண முகவர்த்தொழிலின் உரிமம் நிறுத்திவைக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது நீக்கஞ்செய்யப்பட்டிருக்குமிடத்து அத்தகைய உரிமம் எல்லா நோக்கங்களுக்கும் நடைமுறையிலிராதொழிந்திருப்பதாகக் கருதப்படும்.

### பொது

பதிவுக்குறிப்பில் அல்லது உரிமத்தில் உள்ள விபரங்களைத் திருத்துதல்.

15. (1) பதிவுசெய்யப்பட்ட பிரயாண முகவர்த் தொழில் சம்பந்தமான ஏதேனுமொரு காரியத்தில் அல்லது விஷயத்தில் அந்தத்தொழில் சம்பந்தமான பதிவுக்குறிப்பின் விபரங்களில் ஏதேனுமொரு திருத்தத்தை அவசியமாக்கும் மாற்ற மேதாவது ஏற்படுமிடத்து, அத்தகைய தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தகைய மாற்றத்தைப் பற்றித் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் ; அத்தகைய அதிகாரியும் அத்தகைய அறிவித்தல் கிடைத்ததும் அச்சூழ்நிலைகளில் தக்கது என அவர் கருதும் விசாரணையின் பின்னர் அத்தகைய விபரங்களில் அவசியமான திருத்தத்தைச் செய்யலாம்.

(2) பதியப்பட்ட பிரயாண முகவர்த் தொழில் சம்பந்தமான பதிவுக்குறிப்பில் அல்லது உரிமத்திலுள்ள விபரங்கள் இவ்விதிப்புக்கோவையின்கீழ்த் தகுதிவாய்ந்த அதிகாரியினல் திருத்தியமைக்கப்படுமிடத்து, அவ்வுரிமத்தில் இசைவான திருத்தங்களைச் செய்வதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இயலுமாகவிருப்பதற்கு அவ்வுரிமத்தைத் தம்மிடம் திருப்பியனுப்புமாறு அத்தகைய அதிகாரி அத்தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரை வேண்டிக்கொள்ளலாம் ; அவ்வேண்டுகோளிற் காட்டப்பட்ட காலத்தினுள் அதற்கு இணங்கியொழுகுதல் அத்தகைய சொந்தக்காரரின் கடமையாதல் வேண்டும்.

உல்லாசப்பிரயாணிகளாற் கொடுப்பனவு செய்யப்படுதல் அத்தகைய கொடுப்பனவு பிரயாண முகவர்களால் ஏற்கப்படுதல் ஆகியவற்றின் மாதிரியும் விதமும் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள்.

16. (1) பதிவுசெய்யப்பட்ட பிரயாண முகவரெவருக்காவது அத்தகைய பிரயாண முகவரால் ஏற்பாடுசெய்யப்பட்ட சேவைகளுக்கும் வசதிகளுக்குமாக உல்லாசப்பிரயாணிகளாற் கொடுப்பனவு செய்யப்படும் மாதிரியும் விதமும் அத்தகைய கொடுப்பனவு அத்தகைய பிரயாண முகவரால் ஏற்றுக்கொள்ளப்படும் மாதிரியும் விதமும் அதற்கெனக் காலத்திற்குக்காலம் தகுதிவாய்ந்த அதிகாரியினல் சபையின் அங்கீகாரத்துடன் விடுக்கப்படக்கூடிய பணிப்புகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ்த் தகுதிவாய்ந்த அதிகாரியினல் விடுக்கப்படும் எந்தப் பணிப்பும், நாணயச் சட்டத்தின் அல்லது/அத்துடன் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1968 இன் 28 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ்ச் சட்டம் சுங்கக் கட்டளைச்சட்டம், ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது மேற்சொல்லப்பட்ட சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் எவையேனுமிருந்தால் அவற்றுக்கு இணங்கியதாயிருத்தல் வேண்டும்.

(3) பதியப்பட்ட பிரயாண முகவர்த் தொழில் சம்பந்தமாகச் சட்டத்தின்கீழான தவறெதாவது புரியப்படுமிடத்து, அத் தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரும் (1) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவை உண்மையிற் கேட்டவரும் அல்லது அத்தகைய கொடுப்பனவை ஏற்றுக்கொண்டவருமான ஒவ்வொருவரும் அத்தவறுக்குக் குற்றவாளியாவர்.

கபடமாகப்பதிவு செய்வதற்கு அல்லது உரிமம் பெறுவதற்கான தண்டனை

17. பொய்யான அல்லது கபடமான பிரதிநிதித்துவம் மூலம் அல்லது எழுத்திலுள்ள வேறு பொருள் காண்பித்தல் மூலம் அல்லது அது செய்யப்பட அல்லது காண்பிக்கப்படச் செய்தல் மூலம் பிரயாண முகவரொருவரின் தொழில் இவ்விதிப்புக் கோவையின்கீழ்ப் பதிவுசெய்யப்படுதலை அல்லது உரிமமளிக்கப்படுதலை எவராவது கபடமாகப் பெற்றுக்கொண்டால் அல்லது பெற்றுக்கொள்ள எத்தனித்தால் அவரும் அவருக்கு உடந்தையாயிருக்கும் அல்லது உதவிசெய்யும் ஒவ்வொருவரும் தவறுக்குக் குற்றவாளியாவர்.

பிரயாண முகவரொருவரின் பெயரை எடுத்தல் அத்தொழில் நடாத்தல் ஒரு தவறுதல்.

18. (1) பிரயாண முகவரொருவரின் தொழிலின் சொந்தக்காரரெவராவது, அத்தகைய தொழில் இவ்விதிப்பு கோவையின் கீழ்ப்பதிவுசெய்யப்பட்டு உரிமமளிக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய தொழில் தொடர்பில் அது பிரயாண முகவரொருவரின் பதிவுசெய்யப்பட்டதும் உரிமமளிக்கப்பட்டதுமான தொழிலொன்றெனக் கருத்தைத் தரும் எந்தப்பெயரை யாவது, தலையங்கத்தையாவது கூடச் சேர்த்தலையாவது அல்லது விவரணத்தையாவது எடுத்தல் அல்லது உபயோகித்தல் அல்லது வெளிக்காட்டலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியினேற்பாடுகளை மீறுமொவ்வொருவரும் ஒரு தவறுக்குக் குற்றவாளியாவர்.

பொதுவாக ஆட்களிடம் தகவலை வேண்டிக்கொள்வதற்கும் விசாரணைகள் நடாத்துவதற்கும் தகுதிவாய்ந்த அதிகாரிக்குள்ள தத்துவம்.

19. (1) தகுதிவாய்ந்த அதிகாரியானவர்—

(அ) பின்வரும் நோக்கங்களுக்கு, அவையாவன இச்சட்டத்தின்கீழ் வேறெவராலாவது செய்யப்பட்ட விண்ணப்ப மெதனையாவது கையாள்வதற்கு, அல்லது அத்தகைய விண்ணப்பத்திற் காட்டப்பட்டுள்ள எவையேனும் விபரங்களினது அல்லது இவ்விதிப்புக்கோவையின்கீழ் அத்தகைய வேறு ஆளினால் செய்யப்பட்ட அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமொரு அறிக்கையினது அல்லது தகவலினது உண்மையை அறிவதற்கு, அல்லது ஏதேனுமொரு பதிவை அல்லது உரிமத்தை நிறுத்திவைப்பதற்கு அல்லது நீக்கஞ்செய்வதற்கு அவசியமான தகவலாகவுள்ளதும் அப்பணிப்பிற் காட்டப்பட்டிருக்க வேண்டியதுமான அவர் அறிந்த அளவினுள்ள தகவலை அவ்விதம் காட்டப்படவேண்டிய காலத்தினுள் அத்தகைய அதிகாரிக்குச் சமர்ப்பிக்குமாறு எவரையும் பணிக்கலாம் ; அத்துடன்.

(ஆ) அத்தகைய நோக்கங்களிலெவற்றுக்காவது அவசியமான அத்தகைய விசாரணைகளெல்லாவற்றையும் காலத்துக்குக் காலம் நடாத்தலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ் ஏதேனும் பணிப்பு விடுக்கப்பட்டுள்ள எவரும் அதன்கண்ணே காட்டப்பட்டுள்ள காலத்தினுள், அத்தகைய பணிப்புக்கிணங்குதல் வேண்டும் :

ஆயினும், அப்பணிப்பு எவ்வாளுக்கு விடுக்கப்பட்டதோ அவ்வாளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் அப்பணிப்பு இணங்கி ஒழுகப்படமுடியாதுபோயிற்று எனத் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்திப்படுமிடத்து, அத்தகைய பணிப்புடன் இணங்கியொழுகுவதற்கு அத்தகைய ஆளுக்கு அவர் மேலதிக காலத்தை அனுமதிக்கலாம்.

தவறுகள்.

20. (1) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளிலெதனையாவது மீறிச் செயலாற்றும் எவரும் சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாவர்.

(2) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடு எதனையும் மீறுவதன் காரணமாக, பிரயாண முகவர்த் தொழிலொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் எவரேனும் சேவையாளரால் அல்லது முகவரால் இச்சட்டத்தின்கீழ்ப் புரியப்பட்ட எந்தத் தவறும், அத்தகைய தவறு அவருக்குத் தெரியாமற் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுதலைத் தடுப்பதற்கு நியாயமான எல்லாக் கவனத்தையும் அவர் செலுத்தினாரெனத் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்திப்படக்கூடியதாக அத்தகைய பதியப்பட்ட சொந்தக்காரர் நிரூபித்தாலன்றி, அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரராற் புரியப்பட்ட தவறொன்றாகக் கருதப்படும்.

பதிவுசெய்யப்பட்டு உரிமம் பெற்ற பிரயாண முகவரின் தொழிலின் சொந்தக்காரர் புத்தகங்களும் இடாப்புகளும் வைத்திருந்து அறிக்கைகளும் சமர்ப்பித்தல் வேண்டும்.

21. (1) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளின்கீழ்ப் பதிவுசெய்யப்பட்டு உரிமம்பெற்றுள்ள பிரயாண முகவர்த் தொழிலின் சொந்தக்காரரொவ்வொருவரும்—

(அ) அத்தகைய பிரயாண முகவரின் சேவைகளைப் பயன்படுத்திய ஆட்களின் பெயர்களும், அத்தகைய ஆட்களுக்குப் புரியப்பட்ட சேவைகளின் தன்மையும், அத்தகைய சேவை புரியப்பட்ட காலமும் அல்லது தேதிகளும் ;

(ஆ) அப்பிரயாண முகவரின் சேவையைப் பயன்படுத்திய ஆள் ஆதியில் அங்கிருந்து புறப்பட்ட தேசமும் அவருடைய விலாசமும் ;

(இ) இடவசதி, உணவு பானங்கள், போக்குவரத்து, வாடகை அல்லது ஏனைய சேவைகள் சம்பந்தமாக அத்தகைய ஆளினாற் செய்யப்பட்ட கொடுப்பனவும் அக்கொடுப்பனவு என்ன நாணயத்திற் கொடுக்கப்பட்டது என்பதும்;

(ஈ) தகுதிவாய்ந்த அதிகாரியினாற் குறித்துக்காட்டப்படக்கூடிய ஏனைய தகவல்,

ஆகியவற்றின் விபரங்களையடக்கியுள்ள புத்தகங்களையும் இடாப்புக்களையும் வைத்துப் பராமரித்தல் வேண்டும்.

(2) பிரயாண முகவர்த் தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரொவ்வொருவரும், காலத்துக்குக்காலமும், சபையின் தவிசாளரால் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியின் சார்பாகச் செயலாற்றும் சபையினுத்தியோகத்தரொருவரால் வேண்டப்படும்போதெல்லாமும், அத்தகைய (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ்ப் பேணப்பட்டு வரும் புத்தகங்களிலும் இடாப்புக்களிலுமிருந்து அத்தாட்சிப்படுத்தப்பட்ட பகுதிகளை அல்லது அறிக்கைகளைத் தகுதிவாய்ந்த அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரவேசித்தல், சோதனைசெய்தல் முதலியவற்றுக்கான தத்துவம்.

22. (1) சபைத் தவிசாளர் அல்லது சபைத் தவிசாளரின் அதிகாரத்தின்கீழ்ச் செயலாற்றும் சபையின் எவரேனுமொரு அங்கத்தவர், தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது சபையின் உதவிப் பணிப்பாளர் பதவிக்குக் குறையாத பதவிவகிப்பவரும் சபைத் தவிசாளரின் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்திலுள்ள அதிகாரத்தின்மீது செயலாற்றுபவருமான ஆள் எவரும் இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகள் இணங்கி ஒழுகப்படுகின்றனவா என்பதனைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்கென—

(அ) தொழில் நடைபெறும் வேளைகளில் எந்நேரத்திலாவது முன்னறிவித்தல் கொடாமல், பிரயாண முகவரொருவரின் தொழிலுக்கு உபயோகிக்கப்படும் அல்லது இருப்பாட்சி பண்ணப்படும் அல்லது அவ்விதமாக உபயோகிக்கப்படுவதாக அல்லது இருப்பாட்சிபண்ணப்படுவதாகக் கூறப்படும் எந்த வளவுக்குள்ளும் பிரவேசித்தலும், அத்தகைய பிரயாண முகவரின் தொழில் சட்டத்திற்கும் இந்த விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் இணங்கப் பரிபாலிக்கப்படுகின்றதோ என்பதை அறிவதன் நோக்கத்துக்காக அந்த வளவைச் சோதனையிடுதலும் ;

(ஆ) பிரயாண முகவரொருவரின் தொழிலுக்குப் பொறுப்பாகவுள்ள எந்த ஆளினதும் அல்லது அவர் சார்பாக வேறெவரேனுமொருவரினது உடைமையில், பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள புத்தகம், அறிவித்தல், பதிவேடு, நிரல் அல்லது வேறு பத்திரம் எதனையுங் காண்பிக்குமாறு அந்த ஆளை எந்த நேரத்திலும் பணித்தலும் ;

(இ) அத்தகைய எந்தப் புத்தகத்தையும், அறிவித்தலையும், பதிவேட்டையும், நிரலையும் அல்லது வேறு பத்திரத்தையும் சோதனையிடுதலும், அத்தகைய புத்தகம், அறிவித்தல், பதிவேடு, நிரல் அல்லது பத்திரம் ஆகியவற்றிலிருந்து பிரதிகளை அல்லது பகுதிகளை எடுத்தலும், அவற்றின்கண்ணேயுள்ள எவையேனும் பதிவுகள் பற்றி விளக்கமொன்றை அத்தகைய பிரயாண முகவரின் தொழிலுடன் தொடர்புடைய எவரிடமாவது வேண்டிக்கொள்ளுதலும், அவரின் கருத்தின்படி சட்டத்தின்கீழான அல்லது இவ்விதிப்புக்கோவையின்கீழாகப் புரியப்பட்ட ஏதேனுமொரு தவற்றிற்குச் சான்றாகவிருக்கக் கூடிய அத்தகைய எந்தப் புத்தகத்தையும், அறிவித்தலையும், பதிவேட்டையும், நிரலையும் அல்லது பத்திரத்தையும் கைப்பற்றுதலும் ;

(ஈ) அவரால் பிரவேசிக்கப்பட்ட வளவில் அவர் காணும் அல்லது அத்தகைய வளவில் வேலைக்கமர்ந்திருக்கிறாரென அல்லது வேலைக்கமர்த்தப்பட்டிருக்கிறாரென, அல்லது இவ்வொழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்டுள்ள எதனையாவது அவருடைய உடைமையில், பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறாரென நம்புவதற்கு அவருக்கு நியாயமான காரணமுள்ள ஒவ்வொருவரையும், அவரால் விசாரிக்கப்படும் ஏதேனுமொரு காரியஞ் சம்பந்தமாகத் தனியே அல்லது தகுந்தவரென அவர் கருதும் வேறெவரேனுமொருவரின் முன்னிலையில் விசாரித்தலும் ;

(உ) முற்போந்த உப பந்தி (ஈ) என்பதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஆளையும் தம்மால் நியமிக்கப்பட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் தமக்குமுன் தோன்றுமாறு வேண்டிக்கொள்ளுதலும் தம்மால் விசாரணை செய்யப்படும் ஏதேனுமொரு காரியஞ் சம்பந்தமாக அந்த ஆளை விசாரணைசெய்தலும்,

அவருக்குச் சட்டமுறையானதாகும்.

(2) முதலாம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு வளவுக்குப் பொறுப்பாகவுள்ள எவரும், அத்தகைய தவிசாளரால், அங்கத்தவரால், தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது ஆளினால் இவ்வொழுங்குவிதியின்கீழ் அவருடைய தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனத் தேவைப்படும் வசதிகளெல்லாவற்றையும் எல்லா நேரங்களிலும் ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

(3) முதலாம் பந்தியினால் அவருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் எவரும், தமது அடையாளத்தைப் பற்றிய சான்றை அல்லது அதன்கண்ணே குறிப்பிடப்பட்டுள்ள எழுத்திலுள்ள அதிகாரத்தைக் கேட்ட நேரமே காண்பித்தல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளினால் வழங்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில் தகுதிவாய்ந்த அதிகாரியை அத்தகைய தவிசாளரை, அங்கத்தவரை, அல்லது ஆளை எதிர்க்கும் அல்லது அவருக்குத் தடைவிளைக்கும் எவரும் தவறொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

(5) முதலாம் பந்தியின்கீழ்ச் செயலாற்றும் ஆள் எவரும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் அரச அலுவலரொருவராகக் கருதப்படுவார்.

*இரகசியச் சத்தியம்.*

23. 21 (2), 22 (1) ஆகிய ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் எல்லா ஆட்களும், சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கடமைகளைப் புரியும்பொழுதும் அல்லது அவற்றைப் புரிவதிலும் அவரது அறிவுக்கு எட்டி அல்லது எட்டி வரக்கூடிய ஏதேனும் நிகழ்வு காரியம் அல்லது விடயம் சம்பந்தமாகக் கடும் இரகசியம் பேணுவார் எனச் சத்தியம்செய்து அல்லது வெளிப்படுத்தி, உறுதிப்படுத்திச் சபையினால் விதிக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திற்கிணங்கவும், அத்தகைய சம்பிரதாயத்துடனும், உத்தியோகமுறையான சத்தியத்தை அல்லது உறுதிமொழியைச் செய்தல் வேண்டும்.

*தகுதிவாய்ந்த அதிகாரி பிரயான முகவர்களின்மீது நிர்வாகக் கட்டுப் பாட்டைப் பிரயோகித்தல்.*

24. பிரயாண முகவர்த் தொழிலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், தகுதிவாய்ந்த அதிகாரியினால் அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமொரு அறிவித்தலிலுள்ள சட்டமுறையான பணிப்புகளுக்கு அல்லது அதில் வேண்டப்பட்டுள்ளவற்றுக்கு அத்தகைய அறிவித்தலிற் கூறப்பட்டுள்ள காலத்தினுள் அல்லது அத்தகைய அறிவித்தலில் அத்தகையகாலம் எதாவது கூறப்பட்டிராவிட்டால் அத்தகைய அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் இணங்கியொழுகுதல் வேண்டும்.

*ஏற்ற அறிவிக்கப் பட்ட கட்டணம்.*

25. பதிவுசெய்தற்கு அல்லது உரிமங்களுக்கு அல்லது பதிவுக்குறிப்புகளின் அல்லது உரிமங்களின் இணைப்பிரதிகளுக்கு அல்லது பிரதிகளுக்குக் கொடுபடற்பாலனவான கட்டணங்களைத் தகுதிவாய்ந்த அதிகாரி கசெற்றிற் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் மூலம் காலத்துக்குக்காலம் நியமிக்கலாம். அத்தகைய எந்த அறிவித்தலும் அதேபோன்ற அறிவித்தல்மூலம் அத்தகைய அதிகாரியினால் திருத்தப்படலாம், நீக்கஞ் செய்யப்படலாம் அல்லது அதற்குப் பதிலாக வேறொன்று சேர்க்கப்படலாம்.

*பத்திரங்கள் சேர்ப்பிக்கப்படுதல்.*

26. (1) எவரேனுமொருவருக்குச் சேர்ப்பிக்கப்பட அல்லது விடுக்கப்பட இவ்விதிப்புக்கோவையினால் வேண்டப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எந்தப் பத்திரமும் அத்தகைய ஆளுக்கு நேரே சேர்ப்பிக்கப்படாவிட்டால் அல்லது வழங்கப்படாவிட்டால், கடைசியாக அறியப்பட்ட அவருடைய வசிப்பிடத்துக்கு அல்லது தொழில் செய்யுமிடத்துக்கு விலாசமிடப்பட்ட பதிவுசெய்யப்பட்ட கடிதமொன்றில் அஞ்சல் மூலம் அது அவருக்கு அனுப்பப்பட்டால் அது முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அல்லது விடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(2) இவ்வொழுங்குவிதியில் " பத்திரம் " என்பது ஏதேனுமொரு கட்டளையின், ஏதேனுமொரு உரிமத்தின், ஏதேனுமொரு பணிப்பின், அல்லது எந்தப் பெயரை அல்லது விவரணத்தைக்கொண்டு அழைக்கப்பட்டாலுஞ்சரி வேறேதேனுமொரு பத்திரத்தின் ஏதேனுமொரு பிரதி எனப் பொருள்படும்.

*பொருள்கோடல்.*

27. இவ்விதிப்புக்கோவையில், சந்தர்ப்பத்துக்கேற்ப வேறுவிதமாகப் பொருள்கொள்ளவேண்டியிருந்தாலன்றி—

" ஏற்ற அறிவிக்கப்பட்ட கட்டணம் " என்பது ஏதேனுமொரு பதிவின், ஏதேனுமொரு உரிமத்தின், அல்லது ஒரு பதிவுக்குறிப்பின் அல்லது உரிமத்தின் ஏதேனுமொரு இணைப்பிரதியின் அல்லது பிரதியின் நோக்கங்களுக்காக, 27 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் கசெற்றில் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் மூலம் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அத்தகைய நோக்கத்துக்கென நியமிக்கப்பட்ட கட்டணம் எனப் பொருள்படும் ;

" சபை " என்பது 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை உல்லாசப்பிரயாணச் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட இலங்கை உல்லாசப்பிரயாணச் சபை எனப் பொருள்படும் ;

" சபையின் தவிசாளர் " என்பது 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாணச் சபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் நியமனஞ்செய்யப்பட்ட இலங்கை உல்லாசப்பிரயாணச் சபையின் தவிசாளர் எனப் பொருள்படும் ;

" சபை அங்கத்தவர் " என்பது 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை உல்லாசப்பிரயாணச் சபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட உல்லாசப்பிரயாணச் சபையின் அங்கத்தவர் எனப் பொருள்படும் ;

" வகுப்பு அல்லது வகுப்புப்பிரிவு " என்பது பிரயாண முகவரொருவரின் தொழில் சம்பந்தமாக, தகுதிவாய்ந்த அதிகாரியினால் அத்தொழிலுக்குக் குறித்தொதுக்கப்பட்ட வகுப்பு அல்லது வகுப்புப்பிரிவு எனப் பொருள்படும் ;

" தகுதிவாய்ந்த அதிகாரி " என்பது சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாகும் ;

" உரிமம் " என்பது இவ்விதிப்புக்கோவையின்கீழ்த் தகுதியாய்ந்த அதிகாரியினால் வழங்கப்படும் ஓர் உரிமம் எனப் பொருள்படும் ;

" பதிவுசெய்யப்பட்ட " என்பது பிரயாண முகவர்களின் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட எனப் பொருள்படும் ;

" சட்டம் " என்பது 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டம் எனப் பொருள்படும் ;

" பிரயாண முகவர் " என்பது சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாகும்.

9-730/1—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

எல்.டி.—பி.26/68

**1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டம்**

கப்பற்றொழில், உல்லசப்பிரயாண அமைச்சரின் ஒருப்பாட்டுடன் இலங்கை உல்லாசப்பிரயாணச் சபையினாலாக்கப்பட்ட, 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் 77, 96 ஆகிய பிரிவுகளின்கீழான ஒழுங்குவிதிகள்.

தர்மசிறி சேனநாயக்கா,
தவிசாளர்,
இலங்கை உல்லாசப்பிரயாணச் சபை.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகத்து மீ 6 ந் உ.

ஒழுங்குவிதிகள்

சுருக்கப் பெயர்.

1. இவ்வொழுங்குவிதிகள் 1973 ஆம் ஆண்டின் உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் விதிப்புக்கோவை என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களைக் வகுப்புப்படுத்தல்

உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களை வகுப்புப்படுத்தல்.

2. இவ்விதிப்புக்கோவையின் நோக்கங்களுக்காக உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் பின்வருவனவற்றை யடக்கும் நட்சத்திர வகுப்பு உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களாக வகுப்புப்படுத்தப்படும் :—

(அ) ஒரு–நட்சத்திர வகுப்பைச் சேர்ந்த உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களின் அறிவிக்கப்பட்ட குறைந்த பட்சத் தேவைகளிலும்பார்க்கக் குறையாதவற்றுடன் இணங்கும், ஆனால் அதிலும்பார்க்க உயர்ந்த நட்சத்திர வகுப்பு உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் எவற்றினதும் அறிவிக்கப்பட்ட குறைந்த பட்சத் தேவைகளுடன் இணங்காத, உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களாகவுள்ள ஒரு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் ;

(ஆ) இரு–நட்சத்திர வகுப்பைச் சேர்ந்த உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களின் அறிவிக்கப்பட்ட குறைந்த பட்சத் தேவைகளிலும்பார்க்கக் குறையாதவற்றுடன் இணங்கும், ஆனால் அதிலும்பார்க்க உயர்ந்த நட்சத்திர வகுப்பு உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் எவற்றினதும் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளுடன் இணங்காத உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களாகவுள்ள இரு–நட்சத்திர ஹொற்றேல்கள் ;

(இ) மூன்று–நட்சத்திர வகுப்பைச் சேர்ந்த உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களின் அறிவிக்கப்பட்ட குறைந்த பட்சத் தேவைகளிலும்பார்க்கக் குறையாதவற்றுடன் இணங்கும், ஆனால் அதிலும்பார்க்க உயர்ந்த நட்சத்திர வகுப்பு உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் எவற்றினதும் அறிவிக்கப்பட்ட குறைந்த பட்சத் தேவைகளுடன் இணங்காத, உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களாகவுள்ள மூன்று–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் ;

(ஈ) நான்கு–நட்சவ்த்திர வகுப்பைச் சேர்ந்த உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களின் அறிவிக்கப்பட்ட குறைந்த பட்சத் தேவைகளிலும்பார்க்க குறையாதவற்றுடன் இணங்கும், ஆனால் அதிலும்பார்க்க உயர்ந்த நட்சத்திர வகுப்பு உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் எவற்றினதும் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளுடன் இணங்காத, உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களாகவுள்ள நான்கு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் ;

(உ) ஐந்து–நட்சத்திர வகுப்பைச் சேர்ந்த உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களின் அறிவிக்கப்பட்ட குறைந்த பட்சத் தேவைகளிலும்பார்க்கக் குறையாதவற்றுடன் இணங்கும் உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களாக வுள்ள ஐந்து–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள்.

உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களின் குறைந்தபட்சத் தேவைகளை விதிப்பதற்குள்ள தத்துவம்.

3. தகுதிவாய்ந்த அதிகாரி, அவர் தக்கதெனக் கருதக்கூடிய ஹொற்றேல் தொழிலில் ஈடுபட்டுள்ள அத்தகைய குழுக்களை அல்லது தனிப்பட்டவர்களைக் கலந்தாலோசித்துக் காலத்துக்குக்காலம், கசற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம், நட்சத்திர வகுப்பு உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களினால் இணங்கியொழுகப்படவேண்டிய (இவ்விதிப்புக் கோவையில் " அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகள் " எனக் குறிப்பிடப்படும்) குறைந்தபட்சத் தேவைகளை விதிக்கலாம். வெவ்வேறு நட்சத்திர வகுப்புகளைச் சேர்ந்த உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் சம்பந்தமாக வெவ்வேறு குறைந்தபட்சத் தேவைகள் அவ்விதம் விதிக்கப்படலாம்.

குறித்த சில அடையாளங்களை உபயோகிப்பதற்குப் பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களுக் குள்ள உரிமை.

4. (1) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் ஒன்று—

(அ) ஒரு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக அவ்விதம் அது பதிவுசெய்யப்பட்டால், ஒரு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களைக் குறிப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட அடையாளத்தை அதன் பெயருடன் உபயோகிப்பதற்கு அல்லது வெளிக்காட்டுவதற்கு அது உரிமையுடையதாகும் ;

(ஆ) இரு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக அவ்விதம் அது பதிவுசெய்யப்பட்டால், இரு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களைக் குறிப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட அடையாளத்தை அதன் பெயருடன் உபயோகிப்பதற்கு அல்லது வெளிக்காட்டுவதற்கு அது உரிமையுடையதாகும் ;

(இ) மூன்று–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக அவ்விதம் அது பதிவுசெய்யப்பட்டால், மூன்று–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களைக் குறிப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட அடையாளத்தை அதன் பெயருடன் உபயோகிப்பதற்கு அல்லது வெளிக்காட்டுவதற்கு அது உரிமையுடையதாகும் ;

(ஈ) நான்கு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக அவ்விதம் அது பதிவுசெய்யப்பட்டால், நான்கு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களைக் குறிப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட அடையாளத்தை அதன் பெயருடன் உபயோகிப்பதற்கு அல்லது வெளிக்காட்டுவதற்கு அது உரிமையுடையதாகும் ;

(உ) ஐந்து–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக அவ்விதம் அது பதிவுசெய்யப்பட்டால், ஐந்து–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களைக் குறிப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட அடையாளத்தை அதன் பெயருடன் உபயோகிப்பதற்கு அல்லது வெளிக்காட்டுவதற்கு அது உரிமையுடையதாகும்.

(2) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலெதாவது இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ் அவ்விதஞ்செய்வதற்கு அதற்கு உரிமையிருந்தாலன்றி அப்பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள மெதனையாவது உபயோகித்தல் அல்லது வெளிக்காட்டுதல் ஆகாது.

(3) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலெதாவது, கபடமான அடையாளமெதனையாவது அல்லது (1) ஆம் பந்தியினிற் குறிப்பிடப்பட்ட அடையாளமெதாவதன் வெளிப்படையான போலியொன்றை உபயோகித்தல் அல்லது வெளிக்காட்டுதல் அல்லது உபயோகிக்கப்பட அல்லது வெளிக்காட்டப்பட ஏற்பாடுசெய்தல் ஆகாது.

(4) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலெதாவது, தகுதிவாய்ந்த அதிகாரியினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள நட்சத்திர வகுப்பை வெளிக்காட்டாமல் " பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் " என்னும் எழுத்துக்களை அல்லது " உல்லாசப்பிரயாண ஹொற்றேல் " என்னும் எழுத்துக்களையடக்கும் எந்தப் பெயரையாவது, அல்லது விவரணத்தையாவது உபயோகித்தல் அல்லது வெளிக்காட்டுதல் ஆகாது.

(5) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக, ஏதேனுமொரு துண்டுப்பிரசுரம், அட்டை, விளம்பரம் அறிவித்தல், குறி, சின்னம் அல்லது எப்பெயரை அல்லது விவரணத்தையாவது கொண்டு அழைக்கப்படும் வேறேதேனும் சாதனம், அமைப்பு அல்லது பத்திரம் ஆகியவற்றின் அல்லது அவற்றின்மீது இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளமெதாவது பதிவுசெய்யப்பட்ட உல்லாப்பிரயாண ஹொற்றேலொன்றின் பெயருடன் தோன்றினால் அத்தகைய ஹோற்றேல் அத்தகைய அடையாளத்தை அதன் பெயருடன் அல்லது விவரணத்துடன் உபயோகிப்பதாகக் கருதப்படும்.

(6) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளிலெதனையாவது மீறுதலொன்றின் காரணமாக ஏதேனுமொரு பதிவு செய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் சம்பந்தமாகச் சட்டத்தின்கீழான தவறேதாவது புரியப்படுமிடத்து, அதன் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தவற்றைப் புரிந்தவராதல் வேண்டும்.

## பாகம் II

### உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களை உபயோகித்தலை அல்லது அவற்றில் வசித்தலை ஒழுங்குபடுத்தல்

பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களை உபயோகித்தலை அல்லது அவற்றில் வசித்தலை ஒழுங்கு படுத்தல்.

5. (1) தகுதிவாய்ந்த அதிகாரியினால் வழங்கப்படும் (இவ்விதிப்புக்கோவையில் " உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டு" எனக் குறிப்பிடப்படும்) ஓர் அனுமதிச்சீட்டின் அதிகாரத்தின்கீழும், அதன் நியதிகளின் அல்லது நிபந்தனைகளின்கீழும் அவற்றுக்கிணங்கவும் அல்லாது பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலெதாவது அல்லது அதன் பாகமெதாவது, உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்தைத் தவிர்ந்த ஏனைய நோக்கமெதற்காவது உபயோகிக்கப்படுதல் ஆகாது அல்லது வாசஞ்செய்வதற்குரியதாதல் ஆகாது.

(2) ஏதேனுமொரு நட்சத்திர வகுப்பைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலெதனையாவது அவ்விதம் உபயோகித்தல் அல்லது அதில் வாசஞ்செய்தல், அந்த நட்சத்திர வகுப்பைச் சேர்ந்த உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களின் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளுடன் அத்தகைய ஹொற்றேல் இணங்காதுபோவதனை ஏற்படுத்தாதெனத் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்தியடைந்தாலன்றி, அத்தகைய ஹொற்றேல் சம்பந்தமாக அல்லது ஹொற்றேல் ஒன்றின் ஏதேனும் பாகம் சம்பந்தமாக உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டொன்றுக்கான விண்ணப்பமெதாவது அத்தகைய அதிகாரியினால் அனுமதிக்கப்படுதலாகாது.

(3) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றை அல்லது அதன் எந்தப் பாகத்தையாவது உபயோகித்தல் அல்லது அதில் வாசஞ்செய்தல் சம்பந்தமான இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளிலெதனையாவது மீறுதல் காரணமாகச் சட்டத்தின்கீழ் ஒரு தவறு புரியப்படுமிடத்து அத்தகைய ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரும் அத்தகைய ஹொற்றேலை அல்லது அதன் பாகத்தை அவ்விதம் உபயோகித்த அல்லது அதில் வசித்த ஆளும் ஆகிய ஒவ்வொருவரும் அத்தவற்றைப் புரிந்தவராவர்.

அனுமதிச்சீட்டுக்கான விண்ணப்பங்கள்.

6. (1) உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டொன்றுக்கான விண்ணப்பமொன்று—

(அ) தகுதிவாய்ந்த அதிகாரியினல் அந்த நோக்கத்துக்கென ஏற்படுத்திவைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் அவருக்கு எழுத்திற் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய படிவத்தினல் தேவைப்படுத்தப்படும் விபரங்களையடக்கியிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) விண்ணப்பகாரராற் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(2) உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டொன்றுக்கான விண்ணப்பமொன்று கிடைத்ததும், தகுதிவாய்ந்த அதிகாரி, 9 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்குமைய, அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்து அல்லது நிராகரித்துக் கட்டளையிடலாம் :

எவ்வாருயினும், உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டொன்றுக்கான விண்ணப்பம் ஒன்றைத் தகுதிவாய்ந்த அதிகாரி நிராகரிக்கும் எவ்விடயத்திலும், அவ்விதம் அவர் நிராகரிப்பதற்கான காரணங்களை அக்கட்டளையில் தருதல் வேண்டும்.

(3) உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டொன்றுக்கான விண்ணப்பமொன்றை அனுமதித்துத் தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளையிடுமிடத்து, அவர் அத்தகைய அனுமதிச்சீட்டை அவரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.

(4) உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டொன்று, சட்டத்தினதும் இவ்விதிப்புக்கோவையினதும் ஏற்பாடுகளுடன் அது இணங்குவதை நிச்சயப்படுத்துவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி அவசியமானவையெனக் கருதக்கூடியனவும் அத்தகைய அனுமதிச்சீட்டில் குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டியனவுமான நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமையவும் 49 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமையவும் அத்தகைய அதிகாரியினல் வழங்கப்படலாம்.

(5) அனுமதிச்சீட்டிற் காட்டப்பட்டுள்ள ஏதேனுமொரு நியதியை அல்லது நிபந்தனையை மீறும் அல்லது அதற்கிணங்கத் தவறும் ஒரு சமயத்தில், தகுதிவாய்ந்த அதிகாரி, 9 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய அனுமதிச்சீட்டைக் கட்டளைமூலம் நீக்கஞ்செய்யலாம் என்பது உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டொவ்வொன்றினதும் நிபந்தனையொன்ருகும் :

எவ்வாருயினும், அனுமதிச்சீட்டு ஒன்றைத் தகுதிவாய்ந்த அதிகாரி நீக்கஞ்செய்யும் எவ்விடயத்திலும் அவ்விதம் அவர் நீக்குவதற்கான காரணங்களை அக்கட்டளையில் தருதல்வேண்டும்.

இப்பாகத்தின்கீழ்த் தகுதிவாய்ந்த அதிகாரியினல் இடப்படுங் கட்டளைகளின் பிரதிகள் ஆட்களுக்குச் சேர்ப்பிக்கப்படுதல்.

7. (1) உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டொன்றுக்கான விண்ணப்பமொன்றைப் நிராகரித்துத் தகுதிவாய்ந்த அதிகாரியினலிடப்படும் ஒவ்வொரு கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விண்ணப்பகாரருக்குச் சேர்ப்பிக்கப்பட அல்லது உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டொன்றை நீக்கஞ்செய்து தகுதிவாய்ந்த அதிகாரியினல் இடப்படும் கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று அத்தகைய அனுமதிச்சீட்டை வைத்திருப்பவருக்குச் சேர்ப்பிக்கப்பட அவர் ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

(2) அனுமதிச்சீட்டுக்கான விண்ணப்பகாரருக்கு அல்லது அனுமதிச்சீட்டு உடையவருக்குச் சேர்ப்பிக்கப்படும் விடயத்துக்கேற்ப நிராகரித்து அல்லது நீக்கஞ்செய்து இடப்பட்ட கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒவ்வொன்றும், அவ்விதம் நிராகரித்து அல்லது நீக்கஞ்செய்து கட்டளையிடுவதற்கான காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தகுதிவாய்ந்த அதிகாரியின் கட்டளைகள் இறுதியானவையும் முடிவானவையுமாதல்.

8. இப்பாகத்தின்கீழ்த் தகுதிவாய்ந்த அதிகாரியினலிடப்படும் எந்தக் கட்டளையும், இறுதியானதும் முடிவானதுமாகும்.

அனுமதிச்சீட்டுக்களுக்கான விண்ணப்பங்களை நிராகரித்தல் அல்லது அனுமதிச்சீட்டுகளை நீக்கஞ்செய்தல் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள்.

9. உபயோகிப்பவரின் அனுமதிச்சீட்டொன்றுக்கான விண்ணப்பமொன்றை நிராகரித்து அல்லது அத்தகைய அனுமதிச்சீட்டெதனையாதவது நீக்கஞ்செய்து கட்டளையொன்றையிடுவதன்முன், தகுதிவாய்ந்த அதிகாரி, சந்தர்ப்பத்துக்கேற்றவாறு, அவ்விண்ணப்பகாரர் அல்லது அத்தகைய அனுமதிச்சீட்டு எதனையாவது வைத்திருப்பவர் நேர்முகமாக அல்லது அதற்கென அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலம் விசாரிக்கப்பட அவருக்குச் சந்தர்ப்பமொன்றையளித்தல் வேண்டும்.

## பாகம் III

### பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களும் அத்தகைய ஹொற்றேல்களைப் பதிவுசெய்தலும்

பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள்.

10. (1) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளின்கீழும் அவற்றுக்கிணங்கவும் தகுதிவாய்ந்த அதிகாரியினல் வகுப்புப்படுத்துங் குழுவுக்குச் செய்யப்படும் ஏதேனுமொரு ஆற்றுப்படுத்தலின்மீது அதனல் அத்தாற்பரியப்படச் செய்யப்பட்ட தீர்மானமொன்று இருந்தால், ஆனல் அவ்விதமிருந்தால் மாத்திரமே உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று பதியப்படுவதற்கு அமைவானதாகும்.

(2) மூன்றும் ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்ட அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளுக்கிணங்க நட்சத்திர வகுப்பு உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்ருக வகுப்புப்படுத்தப்பட்ட அத்தகைய ஹொற்றேல் தகுதியுடையதாகவிருந்தாலன்றி, அத்தகைய தீர்மானமெதாவது வகுப்புப்படுத்துங் குழுவினுற் செய்யப்படுதலாகாது ; அத்தகைய ஹொற்றேலுக்குக் குறித்தொதுக்கப்படவேண்டிய நட்சத்திர வகுப்பை அத்தகைய தீர்மானம் ஒவ்வொன்றும் குறித்தல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்கப் பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று இதன்பின் இவ்விதிப்புக்கோவையிற் " பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேல் " எனக் குறிப்பிடப்படுகின்றது.

உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடத்தும் நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் வளவுகளுக்கு ஏற்புடையனவான விசேட ஏற்பாடுகள்.

11. உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடத்தும் நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் வளவு எதற்கும் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும் :—

(அ) அத்தகைய ஹொற்றேல் பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றுதல் வேண்டுமோவென்று தீர்மானமொன்றுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரி வகுப்புப்படுத்தும் குழுவுக்குத் தாமாக ஆற்றுப்படுத்தலாம் ; அல்லது அத்தகைய தொழிலின் சொந்தக்காரரின் வேண்டுகோளின்பேரில், ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

(ஆ) அவ்விதம் ஆற்றுப்படுத்தப்படும் விடயத்தில் தமது சொந்த அவதானக்குறிப்புகளையடக்கியுள்ள தகுதி வாய்ந்த அதிகாரியின் எழுத்திலுள்ள அறிக்கையொன்று அத்தகைய ஆற்றுப்படுத்தலுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(இ) (i) உட்பிரவேசிப்பதற்கும், பரிசீலனைசெய்வதற்கும், சோதனையிடுவதற்கும் இவ்விதிப்புக்கோவையில் பின்னேவரும் ஏற்பாடுகளினால் வழங்கப்பட்ட தத்துவங்களைத் தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது அவரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரெவராவது அத்தகைய வளவு சம்பந்தமாகப் பிரயோகித்தபின்னரல்லாதும், அத்துடன்

(ii) அத்தகைய தொழிலின் சொந்தக்காரர் நேரே அல்லது அதற்கென எழுத்தில் அவராலதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலம் விசாரிக்கப்பட ஒரு சந்தர்ப்பத்தை அவர் அத்தகைய சொந்தக்காரருக்கு அளித்திருந்தாலல்லாதும்—

அத்தகைய ஆற்றுப்படுத்தலெதாவது தகுதிவாய்ந்த அதிகாரியினால் அவராலாகவே செய்யப்படுதலாகாது.

உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் இடாப்பு.

12. இவ்விதிப்புக்கோவையின் நோக்கங்களுக்காக " உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் இடாப்பு " என அழைக்கப்படவேண்டியதும், பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடத்தும் நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் வளவுகளும் அத்தகைய தொழிலின் சொந்தக்காரரும் இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளின்கீழும் அவற்றுக்கிணங்கவும் அதில் பதிவுசெய்யப்படவேண்டியதுமான ஒரு புத்தகத்தை, அவராற்றீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் தகுதிவாய்ந்த அதிகாரி திறந்து பராமரித்தல் வேண்டும் அல்லது திறக்கப்பட்டுப் பராமரிக்கப்பட அவர் ஏற்பாடுசெய்தல் வேண்டும் ; அத்தகைய இடாப்பு இவ்விதிப்புக் கோவையில் " இடாப்பு " எனக் குறிப்பிடப்படுகின்றது.

பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் எப்பொழுது பதிவுசெய்யப்பட வேண்டப்படுகின்றன.

13. (1) பத்தாம் ஒழுங்குவிதியின்கீழ்ச் செய்யப்பட்ட தீர்மானமொன்றைப் பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியின்பின் மூன்று மாதகாலமொன்று கழிந்தன்மேலும் அதன்பின்னரும் அத்தகைய வளவும், அத்தகைய தொழிலின் சொந்தக்காரரும் இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பதிவுசெய்யப்பட்டாலன்றி, அத்தீர்மானத்திற் சம்பந்தப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் எந்த வளவாவது அத்தகைய ஹொற்றேல் தொழிலை நடத்தும் நோக்கத்துக்கு உபயோகிக்கப்படுதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு விரோதமாக நடப்பதன் காரணமாகச் சட்டத்தின் கீழான ஏதேனுமொரு தவறு புரியப்படுமிடத்து அத்தகைய தொழிலின் சொந்தக்காரரும் அதற்கு அவ்வக்காலத்தில் பொறுப்பாகவுள்ள ஆளும் ஆகிய ஒவ்வொருவரும் அத்தவற்றைப் புரிந்தவராவர்.

பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள்.

14. (1) பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் எந்த வளவையாவது பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொவ்வொன்றும்—

(அ) எழுத்தில் தகுதிவாய்ந்த அதிகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) அந்த நோக்கத்துக்கென அத்தகைய அதிகாரியினால் ஏற்படுத்திவைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திற் செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) அந்தப் படிவத்தினால் வேண்டப்பட்ட விபரங்களையடக்கியிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) அவ்வுல்லாசப்பிரயாண ஹொற்றேலின் தொழிலின் சொந்தக்காரராக அவர் இருக்கவேண்டிய விண்ணப்பகாரரால் கையொப்பமிடப்படுதலும்வேண்டும்.

(2) அவ்விதம் பதிவுசெய்வதற்கான ஏற்ற அறிவிக்கப்பட்ட கட்டணங் கொடுபட்டதன்மேலல்லாத உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காக எந்த வளவாவது பதிவுசெய்யப்படுதலாகாது.

பதிவுசெய்யப்பட்டதன் மேல் உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களை வகுப்புப்படுத்தல்.

15. (1) எந்த வளவாவது—

(அ) 2 (அ) ஆகிய ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்ட அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளினும்பார்க்கக் குறையாதவற்றுடன் அத்தகைய வளவு இணங்கினாலன்றி, ஒரு-நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாகப் பதிவுசெய்யப்படுதல் அல்லது தொடர்ந்து பதிவுசெய்யப்படுதல் ஆகாது ;

(ஆ) 2 (ஆ) ஆகிய ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்ட அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளினும்பார்க்கக் குறையாதவற்றுடன் அத்தகைய வளவு இணங்கினாலன்றி இரு-நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல் ஒன்றாகப் பதிவுசெய்யப்படுதல் அல்லது தொடர்ந்து பதிவுசெய்யப்படுதல் ஆகாது ;

(இ) 2 (இ) ஆகிய ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்ட அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளினும்பார்க்கக் குறையாதவற்றுடன் அத்தகைய வளவு இணங்கினாலன்றி மூன்று-நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாகப் பதிவுசெய்யப்படுதல் அல்லது தொடர்ந்து பதிவுசெய்யப்படுதல் ஆகாது ;

(ஈ) 2 (ஈ) ஆகிய ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்ட அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளினும்பார்க்கக் குறையாதவற்றுடன் அத்தகைய வளவு இணங்கினாலன்றி நான்கு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாகப் பதிவுசெய்யப்படுதல் அல்லது தொடர்ந்து பதிவுசெய்யப்படுதல் ஆகாது ; அத்துடன்

(உ) 2 (உ) ஆகிய ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்ட அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளினும் பார்க்கக் குறையாதவற்றுடன் அத்தகைய வளவு இணங்கினாலன்றி ஐந்து–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாகப் பதிவுசெய்யப்படுதல் அல்லது தொடர்ந்து பதிவுசெய்யப்படுதல் ஆகாது.

(2) இவ்விதிப்புக்கோவையின்கீழ்ப் பதிவுசெய்யப்படவேண்டிய உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று, வகுப்புப் படுத்தும் குழுவுக்கு இவ்விதிப்புக்கோவையின்கீழ்ச் செய்யப்படும் ஏதேனுமொரு ஆற்றுப்படுத்தலின் மீது அதன் நட்சத்திர வகுப்புச் சம்பந்தமாக அக்குழுவினாற் செய்யப்படும் தீர்மானத்துக்கிணங்க ஒரு நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக, அல்லது இரு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக, அல்லது மூன்று–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக, அல்லது நான்கு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக, அல்லது ஐந்து–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக அவ்விதம் பதிவுசெய்யப்படும்.

பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை முடிவுசெய்தல்.

16. (1) பத்தொன்பதாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப் பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் எந்த வளவையாவது பதிவு செய்வதற்கான விண்ணப்பமொன்று கிடைத்ததன் மேல், தகுதிவாய்ந்த அதிகாரி—

(அ) அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்து ; அல்லது

(ஆ) அத்தகைய விண்ணப்பத்தை நிராகரித்து,

கட்டளையொன்றையிடலாம் :

எனினும், விண்ணப்பம் ஒன்றை அவர் நிராகரிக்கும் எவ்விடயத்திலும், அவர் அதற்கான காரணங்களை அவரின் கட்டளையில் தருதல் வேண்டும்.

(2) அந்த விண்ணப்பகாரராயினுஞ்சரி, அந்த உல்லாசப்பிரயாண ஹொற்றேலின் தொழிலில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ள அல்லது வேலைக்கமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளாயினுஞ்சரி, பதிவுக்கான விண்ணப்பத்தின் தேதிக்கு நேர்முன்னரான ஐந்து ஆண்டுகாலத்துள், நாணயச் சட்டத்தின்கீழான அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழான அல்லது 1968 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலவாணி உரிமைச்சான்றிதழ்ச் சட்டத்தின்கீழான அல்லது சுங்கக் கட்டளைச்சட்டத்தின்கீழான அல்லது இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான ஒரு தவறுக்கு அல்லது அத்தகைய உல்லாசப்பிரயாண ஹொற்றேலைச் சட்டவிரோதமான நோக்கமொன்றுக்காக உபயோகித்ததற்கு அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்திய ஒரு தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பின், அல்லது அத்தகைய விண்ணப்பகாரர் அல்லது ஊழியர் அல்லது ஊழியராகச் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளவர் மேற்குறிப்பிடப்பட்ட காலத்தினுள் வேறு ஏதேனும் நாட்டின் நேரொத்த சட்டங்களின்கீழான இவைபோன்ற தவறுக்கு அல்லது தவறுகளுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பின், பதிவுசெய்யப்படுவதற்கமைவான, உல்லாசப்பிரயாண ஹொற்றேல் ஒன்றின் தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் எவையேனும் வளவுகளைப் பதிவதனைத் தகுதி வாய்ந்த அதிகாரியானவர் கட்டளைமூலமும் நிராகரிக்கலாம் :

எனினும், பதிவுக்கான விண்ணப்பம் ஒன்றை நிராகரிக்கும் கட்டளை எதுவும், விண்ணப்பகாரரால் வேலைக்கமர்த்தப் பட்டுள்ள ஆள் எவரேனும், இப்பந்தியிற் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டார் என்ற காரணத்தின்மீது, செய்யப்படுவதாயின் அத்தகைய தவறு தமது அறிவின்றித் தமது ஊழியராற் புரியப்பட்டது என அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தவிர்ப்பதற்கு வேண்டிய எல்லாக் கவனமும் தாம் செலுத்தினர் எனத் தகுதிவாய்ந்த அதிகாரிக்குத் திருப்தியாகும் வகையில் அவ்விண்ணப்பகாரர் நிரூபித்தால், ஆக்கப்படுதலாகாது.

(3) (அ) பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் எந்த வளவையாவது பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றை நிராகரிக்கும் கட்டளையொன்றைத் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிடத்து, அத்தகைய கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விண்ணப்பகாரருக்குச் சேர்ப்பிக்கப்பட அவர் ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் ஒன்றைச் செய்தவருக்குச் சேர்ப்பிக்கப்படும், நிராகரிப்புக் கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அத்தகைய பிரதி ஒவ்வொன்றும், அவ்விதம் நிராகரித்துக் கட்டளை இடுவதற்கான காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) (அ) பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக் கத்துக்காக உபயோகிக்கப்படும் எந்த வளவையாவது பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றை அனுமதிக்குங் கட்டளை யொன்றைத் தகுதிவாய்ந்த அதிகாரியிடுமிடத்து, இவ்விதிப்புக்கோவையின்கீழ் வகுப்புப்படுத்துங் குழுவுக்குச் செய்யப்பட்ட ஏதேனுமொரு ஆற்றுப்படுத்தலின்மீது அக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டபடியான அதன் நட்சத்திர வகுப்புப் பற்றிய விபரங்களும், பதிவுசெய்யப்படுதல் அவற்றுக்கமையச் செய்யப்படும் நியதிகள் அல்லது நிபந்தனைகள் எவையேனுமிருந்தால், அவைகளும் உட்பட அவரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய விபரங்களை அந்த இடாப்பிற் பதிவதன்மூலம் அவர் அத்தகைய வளவை இடாப்பிற் பதிவுசெய்யவேண்டியதுடன் அவ்விண்ணப்பக்காரரை அதன் சொந்தக்காரராக அந்த இடாப்பிற் பதிவுசெய்தலும்வேண்டும்.

(ஆ) இவ்வொழுங்குவிதியின்கீழ் அந்த இடாப்பிற் செய்யப்படும் ஒவ்வொரு பதிவும் இவ்விதிப்புக்கோவையினில் " பதிவுசெய்தற் குறிப்பு " எனக் குறிப்பிடப்படுகின்றது.

(இ) உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலின் சொந்தக்காரராக இவ்வொழுங்குவிதியின் கீழ்ப் பதிவுசெய்யப்படும் ஆள் ஒருவர் இவ்விதிப்புக்கோவையினில் " பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் " எனக் குறிப்பிடப்படு கின்றார்.

(ஈ) உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று சம்பந்தமான பதிவுசெய்தற் குறிப்பில் அந்த ஹொற்றலே என்ன நட்சத்திர வகுப்பின்கீழ்த் தகுதிவாய்ந்த அதிகாரியினால் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ்ப் பதிவுசெய்யப்படு கிறதோ அந்த நட்சத்திர வகுப்பு இறுதியானதாதல் வேண்டும்.

(5) பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காக உபயோ கிக்கப்படும் ஏதேனுமொரு வளவைப் பதிவுசெய்தலானது 45 (2) ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கும்

அவ்விதம் பதிவுசெய்தலாக அமையும் பதிவுசெய்தற் குறிப்பில் காட்டப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய நியதிகளுக்கும் அல்லது நிபந்தனைகளுக்கும் அமையச் செய்யப்படலாம் ; அவ்விதங் காட்டப்படக்கூடிய நியதிகள் அல்லது நிபந்தனைகள்—

(அ) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்குதலை உறுதிப்படுத்துவதற்கும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஹொற்றேலுக்கு ஒதுக்கப்பட்ட நட்சத்திர வகுப்பின் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளிலும் பார்க்கக் குறையாதவற்றுடன் அத்தகைய ஹொற்றேல் இணங்குமென்பதை நிச்சயப்படுத்துவதற்கும்,

அவசியமானவையெனத் தகுதிவாய்ந்த அதிகாரி கருதக்கூடிய நியதிகளாக அல்லது நிபந்தனைகளாகவிருத்தல் வேண்டும்.

(6) பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் எந்த வளவையாவது பதிவுசெய்வதற்கான ஏதேனுமொரு விண்ணப்பத்தின்பேரில் தகுதி வாய்ந்த அதிகாரியினுற் செய்யப்பட்ட ஏதேனுமொரு கட்டளையின்பயனுக அவர் அத்தகைய வளவைப் பதிவுசெய்திருக்குமிடத்து, அவருடைய கைப்பட அத்தாட்சிப்படுத்தப்பட்ட அத்தகைய ஹொற்றேல் சம்பந்தமான பதிவுசெய்தற் குறிப்பின் பிரதியொன்று, அந்த ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்குச் சேர்ப்பிக்கப்பட அத்தகைய அதிகாரி ஏற்பாடு செய்தல் வேண்டும்.

உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களின் பதிவுசெய்யப்பட்ட நட்சத்திரவகுப்பு வகுப்புப்படுத்தலைத் திருத்தியமைத்தல்.

17. (1) ஏதேனுமொரு நட்சத்திர வகுப்புச் சார்ந்த உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றைப் பதிவுசெய்தபின் எந்தக்காலத்திலாவது அதன் நட்சத்திர வகுப்பை நீக்கஞ்செய்யும் அல்லது திருத்தியமைத்துப்புதிய நட்சத்திர வகுப்பு ஒதுக்கும் பிரச்சினை தீர்மானிக்கப்படவேண்டுமெனத் தகுதிவாய்ந்த அதிகாரி தமது சொந்த எண்ணத்தின்பேரில் அல்லது அதன்சார்பான காரணங்களை எடுத்துக்காட்டியதன்பேரில் முறையான விசாரணையின்பின் திருப்தியடையுமிடத்து, அப்பிரச்சினை சம்பந்தமான தீர்மானமொன்றுக்காக அத்தகைய அதிகாரி அந்தக் காரியத்தை வகுப்புப்படுத்தும் குழுவுக்கு ஆற்றுப் படுத்தலாம்.

அத்தகைய ஆற்றுப்படுத்தலின்பேரிற் செய்யப்பட்ட தீர்மானமானது—

(அ) அதன் நட்சத்திர வகுப்பை நீக்கஞ்செய்தல் வேண்டுமென வேண்டிக்கொண்டால், அத்தகைய தீர்மானத்துக்கிணங்க அத்தகைய ஹொற்றேல் பற்றிய பதிவைத் தகுதிவாய்ந்த அதிகாரி இடாப்பிலிருந்து நீக்கிவிடுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) அதன் நட்சத்திர வகுப்பு திருத்தியமைக்கப்பட்டு அந்த ஹொற்றேலுக்குப் புதிய ஒரு நட்சத்திர வகுப்பு ஒதுக்கப்படவேண்டுமென வேண்டிக்கொண்டால், அத்தகைய தீர்மானத்துக்குப் பயனளிப்பதற்கு அவசியமான திருத்தங்களைத் தகுதிவாய்ந்த அதிகாரி அப்பதிவுக்குறிப்பில் செய்தல் வேண்டும்.

அவ்விதம் செய்யப்படும் நீக்கஞ்செய்தல் அல்லது திருத்தஞ்செய்தல் எதுவும் இறுதியானதாகும்.

(2) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று சம்பந்தமாக இவ்வொழுங்குவிதியின்கீழ்த் தகுதி வாய்ந்த அதிகாரியினுல் செய்யப்பட்ட ஏதேனுமொரு ஆற்றுப்படுத்தலின் பிரதியொன்று அந்த ஹொற்றேலின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்குச் சேர்ப்பிக்கப்பட அவர் ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் பதிவை நிறுத்திவைத்தல் அல்லது நீக்கஞ்செய்தல்.

18. (1) (அ) ஏதேனுமொரு உல்லாசப்பிரயாண ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், அல்லது அவரால் வேலைக்கமர்த்தப்பட்டவர்களிலெவராவது, அத்தகைய ஹொற்றேல் சம்பந்தமாக இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளிலொன்றையாவது மீறுதலொன்றின் காரணமாகச் சட்டத்தின்கீழ்ப் புரியப்படும் தவறொன்றதற்காவது, அல்லது நாணயச் சட்டத்தின்கீழான, அல்லது 1968 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ்ச் சட்டத்தின்கீழான அல்லது செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழான அல்லது சுங்கக் கட்டளைச்சட்டத்தின்கீழான அல்லது இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழான ஒரு தவறுக்கு, அல்லது அத்தகைய ஹொற்றேலைச் சட்டவிரோதமான நோக்கமொன்றுக்கு உபயோகித்தற்கு அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்திய ஒரு தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, அல்லது அத்தகைய பதியப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரால் வேலைக்கமர்த்தப்பட்டவர்களிலெவராவது வேறு ஏதும் நாட்டின் நேரொத்த சட்டங்களின்கீழான இவைபோன்ற தவறுக்கு அல்லது தவறுகளுக்குக் குற்றவாளியாகக் காணப்படின், அல்லது

(ஆ) ஒழுங்குவிதி 16 (4) இன் நியதிகளுக்கிணங்கச் செய்யப்பட்ட பதிவுக்குறிப்பில் குறிப்பில் குறிப்பிடப்பட்ட எவையேனும் நியதிகள் அல்லது நிபந்தனைகள் மீறப்படுமிடத்து,

தகுதிவாய்ந்த அதிகாரி, 19 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய ஹொற்றேலின் பதிவைக் கட்டளைமூலம் நிறுத்திவைக்கலாம் அல்லது நீக்கஞ்செய்யலாம்.

ஏதேனும் உல்லாசப்பிரயாண ஹொற்றேலின் பதிவை நிறுத்திவைத்து அல்லது நீக்கஞ்செய்து தகுதிவாய்ந்த அதிகாரியினுல் ஆக்கப்படும் அத்தகைய ஒவ்வொரு கட்டளையும், அத்தகைய கட்டளைக்கான அவரின் காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) முதலாம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட தவறென்று அவரால் வேலைக்கமர்த்தப்பட்டவரால் அவருக்குத் தெரியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறுபுரியப்படுதலைத் தடுப்பதற்கு முறையான கவனமெல்லாவற்றையும் அவர் செலுத்தினுரென உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், தகுதிவாய்ந்த அதிகாரி திருப்தியடை யத்தக்கதாகத் தாபித்தால், அத்தகைய ஹொற்றேலில் வேலைக்கமர்த்தப்பட்ட எவராவது அத்தவறுக்குக் குற்றவாளியெனக் காணப்பட்ட காரணத்தினுல் அத்தகைய ஹொற்றேலின் பதிவை நிறுத்திவைக்கும் அல்லது நீக்கஞ் செய்யும் கட்டளையெதாவது (1) ஆம் பந்தியின்கீழ் இடப்படுதலாகாது.

(3) உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காகப் பதிவுசெய்யப்பட்ட எந்த வளவாவது அத்தகைய நோக்கத்துக்கு உபயோகிக்கப்படாதொழிந்துவிட்டதெனத் தகுதிவாய்ந்த அதிகாரி தமது சொந்த எண்ணத்தின்பேரில் அல்லது அதன்சார்பான காரணங்களை எடுத்துக்காட்டியதன்பேரில் முறையான விசாரணையின்பின் திருப்தியடைமிடயுத்து, அத்தகைய அதிகாரி, 19 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய பதிவைக் கட்டளையின் மூலம் நீக்கஞ்செய்யலாம். நீக்கஞ்செய்யும் அத்தகைய கட்டளை எதுவும் அவ்விதம் நீக்கஞ்செய்வதற்கான காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் பதிவை நிறுத்திவைத்து அல்லது நீக்கஞ்செய்து தகுதிவாய்ந்த அதிகாரியினுல் இந்தப் பாகத்தின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனுமொரு கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று அத்தகைய ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்குச் சேர்ப்பிக்கப்பட அவர் ஏற்பாடுசெய்தல் வேண்டும். விடயத்துக்கேற்ப நிறுத்திவைத்து அல்லது நீக்கஞ்செய்து ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றின் அத்தகைய அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒவ்வொன்றும் அத்தகைய கட்டளை ஆக்கப்படுவதற்கான காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பதிவுசெய்தல் முதலியவற்றுக்கான விண்ணப்பங்களை நிராகரிக்குங் கட்டளைகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள்.

19. பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் எந்த வளவையாவது பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றை நிராகரித்து அல்லது அத்தகைய பதிவை நிறுத்திவைத்து அல்லது நீக்கஞ்செய்து கட்டளையொன்றையிடுவதன்முன், தகுதிவாய்ந்த அதிகாரி, சந்தர்ப்பத்துக்கேற்ப, அவ்விண்ணப்பகாரர் அல்லது பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் நேர்முகமாக அல்லது அதன்சார்பாக அவரால் எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலம் விசாரணைசெய்யப்படுவதற்குச் சந்தர்ப்பமொன்றையளித்தல் வேண்டும்.

தகுதிவாய்ந்த அதிகாரியினால் இந்தப்பாகத்தின்கீழ் இடப்படுங் கட்டளைகளின் இறுதித்தன்மையும் முடிவான தன்மையும்.

20. பதிவுசெய்யப்படுவதற்கமைவான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் எந்த வளவையாவது பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றை நிராகரித்து அல்லது அத்தகைய பதிவை நிறுத்திவைத்து அல்லது நீக்கஞ்செய்து தகுதிவாய்ந்த அதிகாரியினால் இந்தப் பாகத்தின் கீழ் இடப்படும் எந்தக் கட்டளையும், இறுதியானதும் முடிவானதுமாகும்.

பதிவுசெய்தற் குறிப்பொன்றிலுள்ள விபரங்களைச் சரிப்படுத்தல்.

21. பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று சம்பந்தமான ஏதேனுமொரு காரியத்தில் அல்லது விடயத்தில், அத்தகைய ஹொற்றேல் தொடர்பான பதிவுசெய்தற் குறிப்பிலுள்ள விபரங்களில் ஏதேனுமொரு திருத்தத்தை அவசியமாக்கும் மாற்றமெதாவது ஏற்படுமிடத்து அத்தகைய ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தகைய மாற்றத்தைப் பற்றித் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும் ; அத்தகைய அதிகாரியும், அத்தகைய அறிவித்தல் கிடைத்ததன்மேல், ஆனால் அச்சூழ்நிலைகளில் அவசியமானது என அவர் கருதும் அத்தகைய விசாரணையின் பின்னரும், 17 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமையவும் அத்தகைய விபரங்களில் அவசியமான திருத்தத்தைச் செய்யலாம்.

## பாகம் IV

### பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களுக்கு உரிமமளித்தல்

பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல்களுக்கு உரிமமளித்தல்.

22. (1) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலெதாவது, தகுதிவாய்ந்த அதிகாரியினால் இந்தப் பாகத்தின்கீழ் வழங்கப்பட்டதும் அவ்வக்காலத்தில் நடைமுறையிலுள்ளதுமான உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழும், அதன் நியதிகளில் அல்லது நிபந்தனைகளின்கீழும் அவற்றுக்கிணங்கவும் அல்லாது அது பதிவுசெய்யப்பட்ட தேதியின் பின் ஒரு மாத காலமொன்று முடிவடைந்ததன்மேலும் அதன் பின்னரும் உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாகத் தொழில் நடாத்தலாகாது.

(2) இவ்விதிப்புக்கோவையின் நோக்கங்களுக்காக, பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் வளவு அல்லது அதன் எந்தப் பாகமாவது உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்தும் நோக்கத்துக்கு உபயோகப்படுத்தப்பட்டால், அத்தகைய ஹொற்றேல் உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொழிலை நடாத்துவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றினால் இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகள் மீறப்படுதலெதாவதன் காரணமாகச் சட்டத்தின்கீழ் ஒரு தவறு புரியப்படுமிடத்து, அத்தகைய ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தவற்றை புரிந்தவராதல் வேண்டும்.

உரிமங்களின் விவரணங்கள்.

23. பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று சம்பந்தமாகத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் இந்தப் பாகத்தின்கீழ் வழங்கப்படவுள்ள உரிமமொன்று பின்வரும் விவரணங்களிலொன்றைச் சார்ந்த உரிமமொன்றாக விருத்தல் வேண்டும் ; அவையாவன :—

(அ) ஒரு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல் உரிமம் ;

(ஆ) இரு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல் உரிமம் ;

(இ) மூன்று–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல் உரிமம் ;

(ஈ) நான்கு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல் உரிமம் ; அல்லது

(உ) ஐந்து–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல் உரிமம்,

என்பனவாகும் ; அந்த உரிமமானது பதிவுசெய்தற் குறிப்பிற் காட்டப்பட்டுள்ள நட்சத்திர வகுப்புக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

உரிமங்களுக்கான விண்ணப்பங்கள்.

24. பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று சம்பந்தமான உரிமமொன்றுக்கான விண்ணப்பமொவ்வொன்றும்—

(அ) எழுத்தில் தகுதிவாய்ந்த அதிகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) அவராலந்த நோக்கத்துக்கென ஏற்படுத்திவைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திற் செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) அந்த ஹொற்றேல் தொடர்பான பதிவுசெய்தற் குறிப்பில் அடங்கியுள்ள விபரங்களை அடக்கவேண்டிய விபரங்களாகவுள்ள அப்படிவத்தினால் வேண்டப்பட்ட விபரங்களையடக்கியிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) அந்த ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

*உரிமத்துக்கெனச் செய்யப்படும் விண்ணப்பங்களை நிராகரித்தற்கான தத்துவம் தொடர்பான சிறப்பேற்பாடுகள்.*

25. தகுதிவாய்ந்த அதிகாரியானவர்—

(அ) அந்த விண்ணப்பம் எவ் வளவுகள் சம்பந்தப்பட்டதோ அவ்வளவுகள் பதிவுசெய்யப்பட்ட உல்லாசப் பிரயாண ஹொற்றேல் ஒன்ருகவிராவிடின் ; அல்லது

(ஆ) 17 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வகுப்புப்படுத்துங் குழுவுக்குச் செய்யப்பட்ட எதேனும் ஆற்றுப்படுத்தல் தீர்மானிக்கப்படாதிருப்பின் ; அல்லது

(இ) அவ்விண்ணப்பம் எவ்வாண்டு தொடர்பாகச் செய்யப்பட்டதோ அவ்வாண்டின் நேர்முந்திய ஆண்டிற்கெனத் தகுதிவாய்ந்த அதிகாரியினுல் வழங்கப்பட்ட உரிமத்தின் நியதிகள், நிபந்தனைகள் என்பவற்ருேடு பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், இணங்கி ஒழுகத் தவறியிருப்பின் ; அல்லது

(ஈ) அவ்விண்ணப்பம் எவ்வாண்டு தொடர்பானதோ அவ்வாண்டின் நேர்முந்திய ஆண்டில் அத்தகைய ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரின் ஊழியருள் எவரேனும், இவ் விதிப்புக்கோவையின் ஏற்பாடு எதனையும் அந்த ஹொற்றேலுக்குப் பிரயோகிக்கும் விடயத்திலான எதேனும் மீறுதல் காரணமாக இச்சட்டத்தின் கீழான எதேனும் தவறுக்கு அல்லது நாணயச் சட்டத்தின கீழான அல்லது 1968 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ்ச் சட்டத்தின் கீழான அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழான அல்லது இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான ஒரு தவறுக்கு, அல்லது அத்தகைய ஹொற்றேலைச் சட்டவிரோதமான நோக்கமொன்றுக்கு உபயோகித்தற்கு அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்திய ஒரு தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, அல்லது அத்தகைய பதியப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரால் வேலைக்கமர்த்தப்பட்டவர்களிலெவராவது வேறு எதும் நாட்டின் நேரொத்த சட்டங்களின்கீழான இவை போன்ற தவறுக்கு அல்லது தவறுகளுக்குக் குற்றவாளியாகக் காணப்படின் ; அல்லது

(உ) இவ்விதிப்புக்கோவையின் 5 ஆம் ஒழுங்குவிதியினை மீறும் எச்சந்தர்ப்பத்திலும்,

உரிமம் ஒன்றை மறுத்தல் வேண்டும்.

*ஏற்ற அறிவிக்கப்பட்ட கட்டணம் கொடுபட்ட தன் மேலல்லாது உரிமம் வழங்கப்படலாகாது.*

26. எதேனுமொரு பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் சம்பந்தமான உரிமமொன்றுக்கான ஏற்ற அறிவிக்கப்பட்ட கட்டணம் கொடுபட்டதன்மேலல்லாது தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய உரிமத்தை வழங்குதலாகாது.

*உரிமங்களுக்கான விண்ணப்பங்களை முடிவுசெய்தல்.*

27. (1) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று சம்பந்தமான உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்று கிடைத்ததன்மேல் தகுதிவாய்ந்த அதிகாரி, 25 ஆம், 32 ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்து அல்லது நிராகரித்துக் கட்டளையொன்றையிடலாம் ;

எவ்வாருயினும், அவர் விண்ணப்பம் ஒன்றை நிராகரிக்குமிடத்து, அவர் அவ்விதம் நிராகரிப்பதற்கான காரணங்களை அவரின் கட்டளையில் தருதல் வேண்டும்.

(2) எதேனுமொரு பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் சம்பந்தமான உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்றை நிராகரித்துத் தகுதிவாய்ந்த அதிகாரியினுலிடப்படுங் கட்டளையொவ்வொன்றினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று அத்தகைய உரிமத்துக்கு விண்ணப்பஞ் செய்பவருக்குச் சேர்ப்பிக்கப்பட அத்தகைய அதிகாரி ஏற்பாடுசெய்தல் வேண்டும். விண்ணப்பகாரர் ஒருவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட நிராகரிப்புக் கட்டளை ஒன்றன் அத்தகைய அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒவ்வொன்றும் அத்தகைய கட்டளை இடுவதற்கான காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) எதேனுமொரு பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் சம்பந்தமான உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்றை அனுமதித்துத் தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளையொன்றையிடுமிடத்து, அவர், தம்மால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலுள்ளதும், அதன் நட்சத்திர வகுப்புச் சம்பந்தமானவையும் அத்தகைய உரிமம் அவற்றுக்கமைய வழங்கப்படும் நியதிகள் அல்லது நிபந்தனைகள் எவையேனுமிருந்தால், அவை சம்பந்தமானவையுமான விபரங்கள் உட்பட அவரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய விவரங்களையடக்கியுள்ளதுமான உரிமமொன்றை அவ்விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.

*உரிமங்களின் நியதிகள் அல்லது நிபந்தனைகள்.*

28. (1) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று சம்பந்தமான உரிமமொன்று அத்தகைய உரிமத்திற் காட்டப்படக்கூடிய அத்தகைய நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்படலாம் ; அவ்விதம் காட்டப்படக்கூடிய நியதிகள் அல்லது நிபந்தனைகள்—

(அ) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்குதலை உறுதிப்படுத்துவதற்கும் ;

(ஆ) அந்த ஹொற்றேலுக்கு ஒதுக்கப்பட்ட நட்சத்திர வகுப்புக்கு ஏற்புடையனவான அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைகளிலும்பார்க்கக் குறையாதவற்றுடன் அத்தகைய ஹொற்றேல் இணங்குமென்பதை நிச்சயப்படுத்துவதற்கும் அவசியமானவையெனத் தகுதிவாய்ந்த அதிகாரி கருதக்கூடிய நியதிகளாக அல்லது நிபந்தனைகளாகவும் ; அத்துடன்

(இ) தகுதிவாய்ந்த அதிகாரி தேவையானவையெனக் கருதும் எவையேனும் வேறு நியதிகள், நிபந்தனைகளாகவும்,

இருக்கலாம்.

(2) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று சம்பந்தமாக வழங்கப்படும் உரிமமானது 45 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு விசேடமாக அமையுமென்பது அத்தகைய உரிமத்தின் நியதி அல்லது நிபந்தனையொன்ருகும்.

*உரிமங்களின் காலவெல்லையும் அவற்றை வெளிக் காட்டுதலும்.*

29. (1) எதேனுமொரு பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் சம்பந்தமாகத் தகுதிவாய்ந்த அதிகாரியினுல் இந்தப் பாகத்தின்கீழ் வழங்கப்படும் உரிமமொவ்வொன்றும் அதன்கண்ணே காட்டப்பட்ட தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டியதுடன், அது அத்தகைய அதிகாரியினுல் அதற்குமுன் நீக்கஞ்செய்யப்பட்டாலன்றி, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாதகாலமொன்றுக்குச் செல்லுபடியானதாகவும் இருக்கும்.

(2) உரிமமளிக்கப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொவ்வொன்றும் அத்தகைய ஹொற்றேல் சம்பந்தமாகத் தகுதிவாய்ந்த அதிகாரியினுல் வழங்கப்பட்ட உரிமத்தை அத்தகைய ஹொற்றேலிலுள்ள துலாம்பரமான ஓரிடத்தில் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்.

*உரிமங்களை நிறுத்தி வைத்தல் அல்லது நீக்கஞ்செய்தல்.*

30. (1) ஏதேனுமொரு பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் சம்பந்தமாகத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் இந்தப் பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமமானது—

(அ) அந்த ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரால் வேலைக்கமர்த்தப்பட்டவர்களி லெவராவது, இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடெதாவது அந்த ஹொற்றேலுக்குப் பிரயோகிக்கப்படுகை யில் அவ்வேற்பாட்டை மீறுதலொன்றின் காரணமாகச் சட்டத்தின்கீழான தவறெதற்காவது அல்லது நாணயச் சட்டத்தின் கீழான, அல்லது 1968 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ்ச் சட்டத்தின் கீழான அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அல்லது சுங்கக் கட்டளைச்சட்டத்தின்கீழான அல்லது இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான ஒரு தவறுக்குக் குற்றவாளியெனக் காணப்படுஞ் சமயத்தில், அல்லது அத்தகைய ஹொற்றேலைச் சட்டவிரோதமான நோக்கமொன்றுக்கு உபயோகித்தலையுட்படுத்தும் தவறொன்றுக்கு அல்லது ஒழுக்கக் கேட்டை உட்படுத்திய ஒரு தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து அல்லது அத்தகைய பதியப்பட்ட சொந்தக்காரர் அல்லது அவரால் வேலைக்கமர்த்தப்பட்டவர்களிலெவராவது வேறு ஏதும் நாட்டின் நேரொத்த சட்டங்களின் கீழான இவைபோன்ற தவறுக்கு அல்லது தவறுகளுக்குக் குற்ற வாளியெனக் காணப்படும் சமயத்தில் ; அல்லது

(ஆ) அவ்வுரிமத்தில் காட்டப்பட்ட ஏதேனுமொரு நியதியை அல்லது நிபந்தனையை அத்தகைய சொந்தக்காரர் மீறுஞ் சமயத்தில் அல்லது அதற்கு இணங்கத்தவறும் சமயத்தில் ;

(இ) இவ்விதிப்புக்கோவையின் 5 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுஞ் சமயத்தில்,

32 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்மைய, அத்தகைய அதிகாரியினால் நிறுத்திவைக்கப்படலாம் அல்லது நீக்கஞ்செய்யப் படலாம் என்பது அத்தகைய உரிமத்தின் நியதி அல்லது நிபந்தனையொன்றாகவிருத்தல் வேண்டும் :

எனினும், உரிமம் ஒன்றை நிறுத்திவைக்குமிடத்து அல்லது நீக்கஞ்செய்யுமிடத்து, அவர் அவ்விதம் விடயத்துக் கேற்ப நிறுத்துவதற்கான அல்லது நீக்குவதற்கான தமது காரணங்களைத் தருதல் வேண்டும்.

(2) தவறு அவரால் வேலைக்கமர்த்தப்பட்டவரால் அவருக்குத் தெரியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுதலைத் தடுப்பதற்கு முறையான கவனமெல்லாவற்றையும் அவர் செலுத்தியிருக்கிறாரெனத் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்தியடையத் தக்கதாக, பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் தாபித்தால், அத்தகைய ஹொற்றேலில் வேலைக்கமர்த்தப்பட்ட எவராவது அத்தகவலுக்குக் குற்றவாளி யெனக்காணப்பட்ட காரணத்தினால், அத்தகைய ஹொற்றேலின் உரிமத்தை நிறுத்திவைக்கும் அல்லது நீக்கஞ்செய்யும் எந்தக் கட்டளையாவது (1) ஆம் பந்தியின்கீழ் இடப்படுதலாகாது.

(3) (அ) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் உரிமத்தை நிறுத்திவைத்து அல்லது நீக்கஞ் செய்து தகுதிவாய்ந்த அதிகாரியினால் இப்பாகத்தின்கீழ் இடப்படும் ஏதேனுமொரு கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று அத்தகைய ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்குச் சேர்ப்பிக்கப்பட அவ்வதிகாரி ஏற்பாடு செய்தல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட நிறுத்தற்கட்டளை அல்லது நீக்கற்கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒவ்வொன்றும் அவ்விதம் நிறுத்திவைத்து அல்லது நீக்கஞ்செய்து அவர் கட்டளையிட்டதற்கான அவரின் காரணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் பதிவு நீக்கஞ் செய்யப் படுமிடத்து அல்லது நிறுத்தி வைக்கப்படு மிடத்து விசேட ஏற்பாடுகள்.*

31. (1) ஏதேனுமொரு உல்லாசப்பிரயாண ஹொற்றேலின் பதிவு நீக்கஞ்செய்யப்படுமிடத்து, தகுவாய்ந்த அதிகாரியினால் இந்தப் பாகத்தின்கீழ் அந்த ஹொற்றேல் சம்பந்தமாக வழங்கப்பட்ட உரிமமெதாவது நடைமுறையி லிராதொழிந்திருப்பதாக எல்லா நோக்கங்களுக்கும் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனுமொரு உல்லாசப்பிரயாண ஹொற்றேலின் பதிவானது தகுதிவாய்ந்த அதிகாரியினால் இவ்விதிப்புக் கோவையின்கீழ் நிறுத்திவைக்கப்படுமிடத்து, அந்த ஹொற்றேல் சம்பந்தமாகத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் இந்தப் பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமம், அவ்விதம் நிறுத்திவைக்கப்பட்டிருக்குங்காலத்தில் நடைமுறையிலிராதொழியும்.

*உரிமங்களுக்கான விண்ணப்பங்கள் முதலியவற்றை நிரா கரித்தல் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள்.*

32. பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றுக்குரிய உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்றை நிராகரித்து அல்லது அத்தகைய உரிமத்தை நிறுத்திவைத்து அல்லது நீக்கஞ்செய்து கட்டளையொன்றையிடுவதன்முன் சந்தர்ப்பத்துக்கேற்ப, அவ்விண்ணப்பகாரர் அல்லது அத்தகைய உரிமத்தை வைத்திருப்பவர், நேர்முகமாக அல்லது அதற்கென எழுத்தில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர்மூலம் விசாரிக்கப்படுவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி சந்தர்ப்பமொன்றையளித்தல் வேண்டும்.

*குறித்த சில விடயங் களில் உரிமங்களின் விபரங்களைச் சரியாக்குதல்.*

33. பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்று சம்பந்தமான பதிவுசெய்தற் குறிப்பெதிலாவதி லுள்ள விபரங்கள் தகுதிவாய்ந்த அதிகாரியினால் இவ்விதிப்புக்கோவையின்கீழ்த் திருத்தியமைக்கப்படுமிடத்து, அந்த உரிமத்தில் நேரொத்த திருத்தங்களைச் செய்வதற்கு அவருக்கு இயலுமாகவிருப்பதற்கு அவ்வுரிமத்தை அத்தகைய அதிகாரியிடம் திருப்பிக் கொடுக்குமாறு அந்த ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரை அத்தகைய அதிகாரி எழுத்திலான அறிவித்தல்மூலம் வேண்டிக்கொள்ளலாம் ; அதன்கண்ணே காட்டப்பட்டுள்ள காலத்துனுள் அவ்வேண்டு கோளுக்கிணங்குதல் அத்தகைய சொந்தக்காரரின் கடமையாகும்.

## பாகம் V

### வகுப்புப்படுத்துங் குழு

*வகுப்புப்படுத்துங் குழுக்களை அமைத்தல்.*

34. (1) இந்த விதிப்புக்கோவையின்கீழான ஆற்றுப்படுத்தல்களை, இதனகத்தே பின்னே ஏற்பாடுசெய்யப்படும் விதமாக, தீர்மானிப்பதன் நோக்கத்துக்காகக் காலத்துக்குக்காலம் சபையினால் நியமிக்கப்பட்ட வேண்டிய ஏழு அங்கத்த வர்களைக்கொண்ட (இவ்வொழுங்குவிதிகளில் " குழு " எனக் குறிப்பிடப்படும்) வகுப்புப்படுத்துங் குழுவொன்று இருக்கும்.

(2) குழுவின் அங்கத்தவர்களில் இருவராவது ஹொற்றேல் தொழிலில் ஈடுபட்டுள்ள குழுமங்களுடன் அல்லது தனியார்களுடன் கலந்தாலோசனை செய்தபின் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியின்கீழ் நியமனஞ்செய்யப்பட்ட அங்கத்தவரெவரையுந் தவிர்ந்த அக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களிலொருவரை (இவ்வொழுங்குவிதிகளில் " தலைவர் " எனக் குறிப்பிடப்படும்) அக்குழுவின் தலைவராக விருப்பதற்குச் சபை நியமனஞ்செய்தல் வேண்டும்.

(4) குழுவின் அங்கத்தவரொவ்வொருவரும், அவர் அதற்கு முன் இறத்தல், விலகுதல் அல்லது நீக்கப்படுதல் மூலம் பதவியிலிருந்து நீங்கினாலன்றி, இரண்டு வருடங்களைக்கொண்ட ஒரு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும். காலங்கழிவதன்மூலம் பதவியிலிருந்து நீங்கும் குழுவினங்கத்தவரெவரும் திரும்பவும் நியமனஞ்செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராவர் :

ஆனால், அவருடைய பதவிக்காலம் முடிவடையுமுன் அக்குழுவினங்கத்தவரொருவராகவிராதொழிந்த ஒருவருக்குப் பின்னவராக நியமனஞ்செய்யப்பட்ட அங்கத்தவரொருவர், அதற்குமுன் அவர் பதவியிலிருந்து நீங்கினாலன்றி, எவருக்குப் பின்னராக அவர் வருகிறாரோ அந்த அங்கத்தவரின் பதவிக்காலத்தின் முடிவடையாதுள்ள பாகத்துக்குப் பதவி வகிப்பார்.

செயலாளரை நியமனஞ்செய்தல்.

35. குழுவுக்குச் செயலாளரொருவரைச் சபை நியமனஞ்செய்தல் வேண்டும். (அவர் இதனகத்துப்பின்னே " செயலாளர் " எனக் குறிப்பிடப்படுவார்.)

குழுவின் அங்கத்தவர்களுக்கு வேதனம்.

36. உல்லாசப்பிரயாணம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய வீதங்களில் குழுவினங்கத்தவர்களுக்கு வேதனம் அளிக்கப்படுதல் வேண்டும்.

குழுவின் கூட்டங்கள்.

37. (1) செயலாளரானவர், குழுவின் தலைவரின் பணிப்பின்கீழ், ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்கள் பற்றித் தீர்மானிக்கப்படவேண்டிய அக்குழுவின் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும்.

(2) குழுவின் கூட்டமெதற்குமான நிறைவெண் நான்கு ஆதல் வேண்டும்.

(3) குழுவின் தலைவர் அக்குழுவின் கூட்டமொவ்வொன்றிலும் அக்கிராசனம் வகித்தல் வேண்டும். அக்குழுவின் கூட்டமெதிலாவது தலைவர் இல்லாவிட்டால், அக்கூட்டத்தில் சமுகமாயிருக்கும் அக்குழுவின் அங்கத்தவர்கள் 34 (2) ஆம் ஒழுங்குவிதியின்கீழ் நியமனஞ்செய்யப்பட்ட அங்கத்தவரொருவரைத் தவிர வேறெந்த அங்கத்தவரையும் அக்கூட்டத்தின் தலைவராகத் தங்களுக்குள் தெரிவுசெய்தல் வேண்டும்.

(4) குழுவுக்குச் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்தலெதாவதன் விடயத்தில் அக்கறையுள்ள, அல்லது அந்த விடயஞ் சம்பந்தமாக வழங்குரைஞர் அல்லது வழக்கறிஞர் ஒருவரென்றமுறையில் அவ்வாற்றுப்படுத்தலில் அக்கறையுள்ள திறத்தவரால் அல்லது அவர் சார்பாக ஆலோசனை கேட்கப்பட்ட அக்குழுவினங்கத்தவரொருவர், அந்த ஆற்றுப்படுத்தல் அதில் தீர்மானிக்கப்படும் அக்குழுவின் கூட்டமொன்றில் பங்குபற்றுதலாகாது.

(5) குழுவின் கூட்டமொன்று காலத்துக்குக்காலம் பின்போடப்படலாம் அல்லது தவணைபோடப்படலாம்.

குழுவுக்குச் செய்யப்படும் ஆற்றுப்படுத்தல்கள்.

38. (1) தகுதிவாய்ந்த அதிகாரியினால் அக்குழுவுக்கு இவ்விதிப்புக் கோவையின்கீழ்ச் செய்யப்படும் ஆற்றுப்படுத்தலொவ்வொன்றும்—

(அ) எழுத்திலிருத்தல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய ஆற்றுப்படுத்தலின் விடயத்தைப் பற்றிய தெளிவானதும் சுருக்கமானதுமான ஒரு விவரத்தையும் அதற்கான காரணங்களையும் அடக்கியிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) அத்தகைய ஆற்றுப்படுத்தலின்மீது அக்குழுவிடம் கோரப்படும் தீர்மானத்தைக் கூறுதல் வேண்டும்.

(2) ஆற்றுப்படுத்தலொவ்வொன்றும் அக்குழுவின் தலைவருக்கு விலாசமிடப்படவேண்டியதுடன் அக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படுதலும்வேண்டும் அல்லது அவரிடம் ஒப்படைக்கப்படுதலும்வேண்டும்.

குழுவில் எடுபடும் நடவடிக்கைகள்.

39. (1) அக்குழுவுக்குச் செய்யப்படும் ஆற்றுப்படுத்தலொவ்வொன்றும் அக்குழுவின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்படும்.

(2) அத்தகைய ஆற்றுப்படுத்தல் அக்குழுவினால் தீர்மானிக்கப்படுவதற்கான தேதியொன்றையும், நேரத்தையும், இடத்தையும் அத்தலைவர் நியமிக்கவேண்டியதுடன், தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் அவ்வாற்றுப்படுத்தலினால் பாதிக்கப்படுந் திறத்தவருக்கும் அதனைப் பற்றிப் பத்து முழு நாட்களைக்கொண்ட அறிவித்தல் செயலாளர் மூலம் எழுத்திற் கொடுத்தலும்வேண்டும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரியும் அக்குழுவுக்குச் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்தலெதிலாவது அக்கறையுள்ள திறத்தவரும் அவ்வாற்றுப்படுத்தல் அவற்றில் தீர்மானிக்கப்படும் அக்குழுவின் கூட்டங்களில் நேர்முகமாக அல்லது எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அவருடைய முகவரின் அல்லது முகவர்களின்மூலம் சமுகமாயிருத்தல் வேண்டும். அக்குழுவின் தலைவருக்கு எழுத்தில் அறிவிக்கப்பட்ட நியாயமான காரணத்துக்காக, அத்தகைய அதிகாரி அல்லது திறத்தவர் அத்தகைய கூட்டத்திற் சமுகமாயிருக்க இயலாதவிடத்து அந்நோக்கத்துக்கான கூட்டம் தலைவரால் தீர்மானிக்கப்படவேண்டிய ஒரு தேதிக்கு அவரால் பின்போடப்படலாம்.

(4) கூட்டமொன்றிற் சமுகமாயுள்ள குழு அங்கத்தவர்களிற் கூடுதலான பகுதியினரின் முடிவானது குழுவின் தீர்மானமாகக் கருதப்படும் ; வாக்குகள் சமமாகவுள்ளவிடத்து அக்கூட்டத்தில் அக்கிராசனம் வகிக்கும் அங்கத்தவருக்கு மேலதிகமான அல்லது அறுதியிடும் வாக்கொன்றிருத்தல் வேண்டும்.

(5) செயலாளரானவர், அக்குழுவினால் தீர்மானிக்கப்படும் ஒவ்வொரு ஆற்றுப்படுத்தல் சம்பந்தமாகவும் அவ்வாற்றுப்படுத்தல் தொடர்பாக அக்குழுவின்முன் எடுபடும் நடவடிக்கைகளெல்லாவற்றையும் பற்றிய பதிவுப்புத்தகமொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(6) குழுவின் அங்கத்தவர்களிடையே வெற்றிடமெதாவது இருப்பதன் காரணத்தால் அல்லது அதன் அங்கத்தவரொருவரின் நியமனத்தில் ஏதாவது குறை இருப்பதன் காரணத்தால் மாத்திரம் குழுவின் செயல் அல்லது நடவடிக்கையெதாவது வலிமையற்றதாதலாகாது.

*குழுவின் முன்னுள்ள நடவடிக்கை முறையும் வழக்கமும் பரிசோதனை செய்வதற்குள்ள தத்துவமும்.*

**40.** (1) இவ்விதிப்புக்கோவையின்கீழ்ச் செய்யப்படும் ஆற்றுப்படுத்தலெதனையாவது தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, குழுவானது உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் சொந்தக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அத்தகைய ஹொற்றேலின் வளவைப் பரிசோதனைசெய்யலாம். அத்தகைய பரிசோதனையின்போது அக்குழு அங்குள்ள உணவின் அல்லது பானத்தின் மாதிரியளவை அதற்கான விலையைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) சொந்தக்காரர் அல்லது முதலாம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு வளவுக்குப் பொறுப்பாகவுள்ள ஆள், இவ்வொழுங்குவிதியின்கீழ்த் தன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அக்குழுவினால் வேண்டப்படும் அத்தகைய எல்லா வசதிகளையும் ஏற்படுத்திவைத்தல் வேண்டும்.

(3) இவ்விதிப்புக்கோவையின்கீழ் அக்குழுவுக்குச் செய்யப்படும் ஆற்றுப்படுத்தலெதிலாவது அக்குழுவின்முன் எடுபடும் நடவடிக்கைகளானவை, கூடியவரையில், நீதிமன்றமொன்றுக்குச் சாதாரணமாக அல்லது வழமையாக ஏற்புடையனவான நடவடிக்கைமுறை, சான்று ஆகியவை பற்றிய விதிகளின் சம்பிரதாயங்களிலும் நுட்பங்களிலுமிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்; விசாரணைசெய்யப்படுங் காரியங்களைப் பற்றிய அத்தாட்சியைப் பெறுவதற்கு மிக உகந்தவையெனக் குழுவுக்குத் தோன்றும் இயற்கை நீதியின் நெறிகளுடன் முரணுகவில்லாத எந்த மாதிரியாகவும் அந்நடவடிக்கைகள் அக்குழுவினால் நடத்தப்படலாம்.

*தீர்மானத்தைப் பற்றிய அறிவித்தல் குழுவினாற்சேர்ப்பிக்கப்படுதல்.*

**41.** இவ்விதிப்புக்கோவையின்கீழ் அக்குழுவுக்குச் செய்யப்படும் எந்த ஆற்றுப்படுததலிலும் அதனாற் செய்யப்படும் தீர்மானத்தைப பற்றிய அறிவித்தல் தகுதிவாய்ந்த அதிகாரிக்கும், அவ்வாற்றுப்படுத்தலில் அக்கறையுள்ள திறத்தவருக்குச் சேர்ப்பிக்கப்பட அக்குழு ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

*ஆற்றுப்படுத்தலொன்றிற் குழுவினாற் செய்யப்படுந் தீர்மானத்துக்குப் பயனளிப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரிக்குள்ள கடமை.*

**42.** தகுதிவாய்ந்த அதிகாரியானவர், குழுவுக்குச் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்தலெதிலாவது செய்யப்பட்ட ஏதேனுமொரு தீர்மானத்தைப் பற்றிய அறிவித்தல் கிடைத்ததும், அத்தகைய் தீர்மானத்துக்கு முழு வலிமையும் பயனுமளிப்பதற்கு அவசியமான வழிவகைகளெல்லாவற்றையும் எடுத்தல் வேண்டும்.

*வகுப்புப்படுத்துங் குழுவின் அங்கத்தவர்கள் அரச அலுவலர்களாகக் கருதப்படுதல்*

**43.** குழுவின் அங்கத்தவர்கள் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் அரச அலுவலர்களாகக்கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

### பொதுவானவை

*பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் ஒன்றைப் பரிசோதனை செய்வதற்குள்ள தத்துவம்.*

**44.** (1) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகள் பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் எதனாலாவது இணங்கப்படுகின்றனவா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காகச் சபை, சபையின் தலைவர், சபைத் தலைவரின் அதிகாரத்தின்கீழ்ச் செயலாற்றும் சபையங்கத்தவர் ஒருவர், தகுதிவாய்ந்த அதிகாரி, அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியின் அதிகாரத்தின்கீழ்ச் செயலாற்றும் சபையின் உதவிப்பணிப்பாளர் வரிசைக்குக் குறையாத பதவியை வகிக்கும் எவரேனுமொருவர் அத்தகைய ஹொற்றேலின் சொந்தக்காரருக்கு அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள எவருக்காவது எழுத்திலான அறிவித்தல் கொடுத்தபின் —

(அ) அத்தகைய நோக்கங்களுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களையும் விடயங்களையும் அறிவதன் நோக்கமொன்றுடன் அத்தகைய ஹொற்றேலின் வளவைப் பரிசோதனைசெய்தலும் ;

(ஆ) அத்தகைய ஹொற்றேலுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளை 58 ஆம் ஒழுங்விதியின்கீழ் வைத்திருக்கப்படவேண்டிய இடாப்பைக் காண்பிக்குமாறு வேண்டிக்கொள்ளுதலும் ;

(இ) அத்தகைய இடாப்பைப் பரிசோதனைசெய்து அத்தகைய இடாப்பில் இருந்து பிரதிகள் அல்லது பொழிப்புகள எடுத்தலும்,

சட்டமுறையானவையாகும்.

(2) முதலாம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட ஏதேனுமொருவளவுக்குப் பொறுப்பாகவுள்ள எவரும் சபை, சபைத் தலைவர், சபை அங்கத்தவர் ஒருவர் தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது அப்பந்தியிற்குறிப்பிடப்பட்ட உதவிப் பணிப்பாளர் வரிசைக்குக் குறையாத சபை உத்தியோகத்தர் ஒருவர் அவருக்கு இவ்வொழுங்குவிதியின்கீழுள்ள தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவரால் வேண்டப்பட்ட எல்லா வசதிகளையும் அளித்தல் வேண்டும்.

*அனுமதிச்சீட்டுகளின் அல்லது உரிமங்களின் அல்லது பதிவின் நியதிகளை அல்லது நிபந்தனைகளைத் திருத்தல் முதலியன.*

**45.** (1) தகுதிவாய்ந்த அதிகாரியானவர், தமது சொந்த எண்ணத்தின்பேரில் அல்லது ஏதேனுமொரு அனுமதிச்சீட்டை அல்லது உரிமத்தை வைத்திருப்பவரால் அதன்சார்பாக அவருக்கு எடுத்துக்காட்டப்பட்டதன்பேரில், அதனை வைத்திருப்பவர் விசாரிக்கப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பமளித்தபின் அந்த அனுமதிச்சீட்டுடன் அல்லது உரிமத்துடன் இணைக்கப்பட்ட ஏதேனுமொரு நியதியை அல்லது நிபந்தனையைத் திருத்தலாம், வேறுபடுத்தலாம், மாற்றியமைக்கலாம் அல்லது நீக்கஞ்செய்யலாம், அல்லது அதனுடன் ஏதேனுமொரு புதிய நியதியை அல்லது நிபந்தனையை இணைக்கலாம்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரியானவர், தமது சொந்த எண்ணத்தின்பேரில் அல்லது பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் அதன்சார்பாக அவருக்கு எடுத்துக்காட்டப்பட்டதன்பேரில், பதிவுசெய்யப்பட்ட அந்தச் சொந்தக்காரர் விசாரிக்கப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பமளித்தபின் அந்த ஹொற்றேலின் பதிவுடன் இணைக்கப்பட்ட ஏதேனுமொரு நியதியை அல்லது நிபந்தனையைத் திருத்தலாம், வேறுபடுத்தலாம், மாற்றியமைக்கலாம் அல்லது நீக்கஞ்செய்யலாம் அல்லது அதனுடன் ஏதேனுமொரு புதிய நியதியை அல்லது நிபந்தனையை இணைக்கலாம்.

*அனுமதிச்சீட்டுகள், பதிவுசெய்தல், உரிமம்பெறுதல் ஆகியவற்றுக்கு விண்ணப்பிப்பவர்களைத் தகவல் தருமாறு வேண்டுவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரிக்குள்ள தத்துவம்.*

46. பதிவுசெய்வதற்கு அல்லது அனுமதிச்சீட்டொன்றுக்கு அல்லது உரிமமொன்றுக்கு விண்ணப்பிக்கும் எவரையும் அந்த விண்ணப்பத்தை முடிவுசெய்தல் அத்தகைய அதிகாரிக்கு இயலுமாகவிருக்கும் நோக்கத்துக்கு அவசியமானவையும், அவ்விண்ணப்பத்திற் காட்டப்பட்ட விபரங்கள் சம்பந்தமான அப்பணிப்புகளிற் குறிப்பிடப்பட்டவையுமான அத்தகைய தகவலை அல்லது பத்திரங்களை அப்பணிப்பிற் காட்டப்பட்ட காலத்தினுள் அத்தகைய அதிகாரிக்குச் சமர்ப்பிக்குமாறு தகுதிவாய்ந்த அதிகாரி பணிக்கலாம் ; அவ்விண்ணப்பகாரர் அத்தகைய பணிப்புக்கு இணங்கத்தவறினல் அத்தகைய அதிகாரி அவ்விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

*பொதுவாக ஆட்களிடம் தகவலை வேண்டிக்கொள்வதற்கும் விசாரணைகள் நடாத்துவதற்கும் தகுதிவாய்ந்த அதிகாரிக்குள்ள தத்துவங்கள்.*

47 (1) தகுதிவாய்ந்த அதிகாரியானவர்—

(அ) பின்வரும் நோக்கங்களுக்கு, அவையாவன, இவ்விதிப்புக்கோவையின்கீழ் வேறெவரேனுமோர் ஆளினுற் செய்யப்பட்ட விண்ணப்பமெதனையாவது முடிவுசெய்தல், அல்லது அத்தகைய விண்ணப்பமெதிலாவது காட்டப்பட்ட எவையேனும் விபரங்களின் அல்லது இவ்விதிப்புக்கோவையின்கீழ் அத்தகைய வேறு ஆளினுற் செய்யப்பட்ட அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமோர் அறிக்கையின் அல்லது தகவலின் சரிபிழையைப் பற்றி அறிதல், அல்லது ஏதேனுமொரு பதிவை, அல்லது ஏதேனுமோர் அனுமதிச்சீட்டை அல்லது உரிமத்தை நிறுத்திவைத்தல் அல்லது நீக்கஞ்செய்தல் ஆகியவற்றுக்கு அவசியமான தகவலாகவிருந்து, அப்பணிப்பிற் காட்டப்படவேண்டியதும் அவர் அறிந்ததுமான அத்தகைய தகவலை அப்பணிப்பிற் காட்டப்படவேண்டிய காலத்தினுள் அத்தகைய அதிகாரிக்குச் சமர்ப்பிக்குமாறு எந்த ஆளையும் பணிக்கலாம் ; அத்துடன்

(ஆ) அத்தகைய நோக்கங்களிலெதற்காவது அவசியமாகக் கூடிய அத்தகைய எல்லா விசாரணைகளையும் காலத்துக்குக்காலம் நடாத்தலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ் எந்தப்பணிப்பாவது அவருக்கு விடுக்கப்பட்ட ஒருவர், அதன்கண்ணே காட்டப்பட்ட காலத்தினுள் அப்பணிப்புக்கு இணங்குதல் வேண்டும்.

*சத்தியம் அல்லது உறுதியுரை.*

48. இவ்விதிப்புக்கோவையின் 44 முதல் 47 வரையுள்ள ஒழுங்குவிதிகளினுலும், 58 (2) ஆம் ஒழுங்குவிதியினுலும் வழங்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் ஆட்கள் எல்லோரும், சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளின்போது அல்லது கடமைகளைப் புரிவதில் அவர்களின் அறிவுக்கு வந்துள்ள அல்லது வரக்கூடிய ஏதேனும் நிகழ்வு, விடயம் அல்லது காரியம் தொடர்பாக அவர் அல்லது அவர்கள் கண்டிப்பான இரகசியம் பேணுவார் என விடயத்துக்கேற்ப சத்தியம்செய்து அல்லது எடுத்துக்கூறி உறுதிப்படுத்திச் சபையினுல் விதிக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திற்கிணங்கவும், அத்தகைய சம்பிரதாயங்களுடனும் உத்தியோகமுறையான சத்தியத்தை அல்லது உறுதியுரையைச் செய்தல் வேண்டும்.

*குறித்தசில வதிவுகள், அனுமதிச்சீட்டுகள் அல்லது உரிமங்கள் வலிமையிழத்தலும் கபடமாக எடுத்துக் காட்டுவதற்கான தண்டனையும்.*

49. (1) கபடமான அல்லது பொய்யான எடுத்துக்காட்டுதலொன்றின்மூலம் பெறப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனுமொரு பதிவு அல்லது ஏதேனுமொரு அனுமதிச்சீட்டு அல்லது உரிமம் இவ்விதிப்புக்கோவையின் நோக்கங்களுக்கு வலிமையற்றதென்பதுடன் எவ்வித பயனுமற்றதாகும்.

(2) பொய்யான அல்லது கபடமான எடுத்துரைகளை அல்லது எழுத்திலுள்ள வேறு பொருளைச் செய்தல் அல்லது காண்பித்தல் மூலம் அல்லது செய்யப்பட அல்லது காண்பிக்கப்பட ஏற்பாடுசெய்தல் மூலம் உல்லாசப்பிரயாண ஹொற்றேல் தொழிலொன்று இவ்விதிப்புக்கோவையின்கீழ்ப் பதிவுசெய்யப்படுதலை அல்லது உரிமமளிக்கப்படுதலை எவரேனும் கபடமாகப் பெற்றுக்கொண்டால் அல்லது பெற்றுக்கொள்ள எத்தனித்தால், அவரும் அவருக்கு உடந்தையாகவிருக்கும் அல்லது உதவி செய்யும் ஒவ்வொருவரும் ஒரு தவறுக்குக் குற்றவாளியாவர்.

*பதிவின் அல்லது அனுமதிச்சீட்டின் அல்லது உரிமத்தின் நியதிகளுக்கு இணங்க வேண்டியகடமை.*

50. பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அல்லது ஏதேனுமொரு அனுமதிச்சீட்டை அல்லது உரிமத்தை வைத்திருப்பவர் அத்தகைய பதிவுடன் அல்லது அனுமதிச்சீட்டுடன் அல்லது உரிமத்துடன் இணைக்கப்பட்ட நியதி அல்லது நிபந்தனை ஒவ்வொன்றுக்கும் இணங்குதல் வேண்டும்.

*அனுமதிச்சீட்டுகள் அல்லது உரிமங்கள் மாற்றப்படற்பாலன வல்ல.*

51. அனுமதிச்சீட்டு அல்லது உரிமமொன்றை வைத்திருப்பவர், விடயத்துக்கேற்ப, அத்தகைய அனுமதிச்சீட்டை அல்லது உரிமத்தை வேறெவருக்காவது சாட்டுதல்செய்தலோ மாற்றுதலோ ஆகாது ; இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு முரணுன அத்தகைய ஏதேனும் சாட்டுதல்செய்தல் அல்லது மாற்றுதல் வெற்றும் வெறிதானதுமாகும்.

*பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் ஒன்றுகப் பாசாங்குபண்ணுதல் குற்றமொன்றுதல்.*

52. (1) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றல்லாத ஹொற்றேலெதாவது—

(அ) " உல்லாசப்பிரயாண ஹொற்றேல் ", " பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் " என்னும் சொற்களை அல்லது " உல்லாசப் பிரயாண ஹொற்றேல் " என்னும் சொற்களை அடக்கும் எந்தப் பெயரையாவது விவரணத்தையாவது, தனியேயோ அல்லது வேறெந்தச் சொல்லுடனுவது எழுத்துகளுடனுவது புணர்த்தியோ உபயோகித்தலாகாது ; அல்லது

(ஆ) அது உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றென அல்லது பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றென மறைமுகமாகக் காட்டும் எந்தப் பெயரையாவது, தலையங்கத்தையாவது, கூடச்சேர்த்தலையாவது அல்லது விவரணத்தையாவது உபயோகித்தலாகாது ; அல்லது

(இ) எந்த அடையாளத்தையாவது, கபடமான எந்த அடையாளத்தையாவது அல்லது 4 (1) ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு அடையாளத்தின் வெளிப்படையான போலியொன்றை உபயோகித்தல் அல்லது வெளிக்காட்டுதல் ஆகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக, பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றல்லாத ஹொற்றேலொன்றின் பெயரும் அதில் அல்லது அதன்மீது தோன்றும் ஏதேனுமொரு துண்டுப்பிரசுரம், அட்டை, விளம்பரம், அறிவித்தல், குறி, பட்டயம் அல்லது எப்பெயரை அல்லது விவரணத்தையாவது கொண்டு அழைக்கப்படும் வேறேதேனும் சாதனம் அல்லது உபாயம் அல்லது பத்திரம் ஆகியவற்றில் அல்லது அவற்றின்மீது " உல்லாசப்பிரயாண ஹொற்றேல் ", " பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் ", அல்லது " உல்லாசப்பிரயாண ஹொற்றேல் " என்னும் எழுத்துக்களையடக்கும் ஏதேனுமொரு பெயர் அல்லது விவரணம் அல்லது இதற்குமுந்திய பந்தியிற் குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு அடையாளம் தோன்றினுல் அத்தகைய ஹொற்றேல் அத்தகைய எழுத்துக்களை, பெயரை, விவரணத்தை அல்லது அடையாளத்தை உபயோகிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகள், பதிவு செய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றல்லாத ஏதேனுமொரு ஹொற்றேல் சம்பந்தமாக மீறப்படுதலொன்றின் காரணமாகச்சட்டத்தின்கீழ் ஏதேனுமொரு தவறு புரியப்படுமிடத்து, அந்த ஹொற்றேலின் சொந்தக்காரரும் அந்த ஹொற்றேலுக்கு அவ்வக்காலத்தில் பொறுப்பாகவுள்ள ஆளும் அத்தவறுக்குக் குற்றவாளியாவார்கள்.

*அனுமதிச்சீட்டுகள் முதலியவற்றின் இணைப்பிரதிகள்.*

53. (1) ஏதேனுமொரு பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் சம்பந்தமான பதிவுசெய்தற் குறிப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியை அல்லது அது சம்பந்தமான அவருடைய உரிமத்தை இழந்திருக்கும் அத்தகைய ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அதன் இணைப்பிரதியொன்றுக்கான ஏற்ற அறிவிக்கப்பட்ட கட்டணத்தைக் கொடுத்ததன்மேல் அத்தகைய இணைப்பிரதியைத் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(2) ஏதேனுமொரு அனுமதிச்சீட்டின் தமது பிரதியை இழந்திருக்கும் அவ்வனுமதிச்சீட்டை வைத்திருப்பவர் அதன் இணைப்பிரதியொன்றுக்கான ஏற்ற அறிவிக்கப்பட்ட கட்டணத்தைக் கொடுத்ததன்மேல் அத்தகைய இணைப்பிரதியைத் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

*ஏற்ற அறிவிக்கப்பட்ட கட்டணம்.*

54. கசற்றில் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் மூலம், அனுமதிச்சீட்டுகள், உரிமங்கள், பதிவுசெய்தல் ஆகியவற்றுக்கு, அல்லது அனுமதிச்சீட்டுகள், உரிமங்கள் ஆகியவற்றின் இணைப்பிரதிகளுக்கு, அல்லது பதிவுசெய்தற் குறிப்புகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுக்குக் கொடுபடற்பாலதான கட்டணத்தைத் தகுதிவாய்ந்த அதிகாரி காலத்துக்குக்காலம் நியமிக்கலாம். அத்தகைய எந்த அறிவித்தலும் அதேபோன்ற ஓர் அறிவித்தலின்மூலம் அத்தகைய அதிகாரியினாற்றிருத்தப் படலாம், அல்லது நீக்கஞ்செய்யப்படலாம், அல்லது அதற்குப் பதிலாக வேறொன்று சேர்க்கப்படலாம்.

*பத்திரங்களைச் சேர்ப்பித்தல்.*

55. (1) எவரேனுமொருவருக்குச் சேர்ப்பிக்கப்பட அல்லது வழங்கப்பட இவ்விதிப்புக்கோவையினால் வேண்டப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆவணமெதாவது, அத்தகைய ஆளுக்கு நேர்முகமாகச் சேர்ப்பிக்கப்படாதிருப்பின், அவர் வசிக்கும் அல்லது தொழில்செய்யும் கடைசியாகத் தெரிந்த இடத்துக்கு விலாசமிடப்பட்ட பதிவுசெய்யப்பட்ட கடிதமொன்றில் தபால்மூலம் அது அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டால், முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அல்லது வழங்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியில், " ஆவணம் " என்பது, எவ்வகைப்பட்ட பெயரை அல்லது விவரணத்தைக்கொண்டு அழைக்கப்பட்டாலுஞ்சரி, கட்டளையெதாவதன் ஏதேனுமொரு பிரதி, ஏதேனுமொரு அனுமதிச்சீட்டு அல்லது உரிமம், ஏதேனுமொரு பணிப்பு, ஏதேனுமொரு அறிவித்தல், அல்லது வேறேதேனுமோர் ஆவணம் எனப் பொருள்படும்.

*தவறுகள்.*

56. (1) இவ்விதிப்புக்கோவையின் ஏற்பாடுகளிலெதனையாவது மீறிச் செயலாற்றும் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாவர்.

(2) இவ்விதிப்புக்கோவையின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவரான உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் ஏதேனுமொரு சேவையாளரால் அல்லது முகவரால் புரியப்பட்ட ஏதேனுமொரு தவறு, அவருக்குத் தெரியாமல் புரியப்பட்டதென அல்லது தவறுபுரியப்படுவதைத் தடுப்பதற்கு முறையான தமது எல்லாக் கவனத்தையும் அவர் செலுத்தினாரெனத் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்தியடையத்தக்கதாக அத்தகைய உரிமம் வைத்திருப்பவர் தாபித்தாலன்றி, அத்தகைய உரிமம் வைத்திருப்பவராற் புரியப்பட்ட ஒரு தவறாகக் கருதப்படுதல் வேண்டும்.

*உல்லாசப்பிரயாணிகளாற் செய்யப்படுங் கொடுப்பனவு, அக்கொடுப்பனவைப் பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் ஏற்றல் ஆகியவற்றின் விதமும் மாதிரியும் சம்பந்தமான ஏற்பாடு.*

57. (1) ஏதேனுமொரு பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலினால் ஏற்படுத்திவைக்கப்பட்ட சேவைகளுக்கும் வசதிகளுக்குமாக அத்தகைய ஹொற்றேலுக்கு உல்லாசப்பிரயாணிகளாற் கொடுப்பனவு செய்யப்படும் விதமும் மாதிரியும், அத்தகைய கொடுப்பனவு அத்தகைய ஹொற்றேலினால் ஏற்றுக்கொள்ளப்படும் விதமும் மாதிரியும், தகுதிவாய்ந்த அதிகாரியினால் அதற்கெனக் காலத்துக்குக்காலம் விடுக்கப்படக்கூடிய அத்தகைய பணிப்புகளுக்கிணக்கமாக விருத்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ்த் தகுதிவாய்ந்த அதிகாரியினால் விடுக்கப்படும் எந்தப் பணிப்பும், நாணயச்சட்டத்தினது அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினது அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனுமொரு துணைச் சட்டவாக்கத்தினது ஏற்பாடுகளெவையேனுமிருப்பின், அவற்றுக்கு இணங்கியதாகவேயிருத்தல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளெவற்றையாவது மீறுதலொன்றின் காரணமான ஏதேனுமொரு பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல் சம்பந்தமாகச் சட்டத்தின்கீழ் ஏதேனுமொரு தவறு புரியப்படுமிடத்து, அந்த ஹொற்றேலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவை உண்மையில் கேட்ட அல்லது அத்தகைய கொடுப்பனவை ஏற்றுக்கொண்ட ஆளும் ஆகிய ஒவ்வொருவரும் அத்தவற்றைப் புரிந்தவராவர்.

*சொந்தக்காரர் இடாப்புகளையும் புத்தகங்களையும் வைத்திருந்து அறிக்கைகள் சமர்ப்பித்தல்.*

58. (1) பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் சொந்தக்காரர், பின்வரும் விபரங்களையடக்கியுள்ள இடாப்பொன்றைப் பரிபாலித்தல் வேண்டும் ; அவையாவன :—

(அ) வந்துதங்குபவர் வந்த தேதியும் நேரமும் ;
(ஆ) வந்துதங்குபவரின் பெயர் ;
(இ) கடவுச்சீட்டு இலக்கம் ;
(ஈ) எத்தேசத்தவர் என்பது ;
(உ) அறையின் இலக்கம் ;
(ஊ) வந்துதங்குபவரின் நிரந்தர விலாசம் ;
(எ) கடிதம் முதலியன அனுப்பிவைக்கப்படவேண்டிய அடுத்த விலாசம் ;
(ஏ) புறப்பட்ட தேதியும் நேரமும் ;
(ஐ) பட்டியலின் தொகையும் என்ன நாணயத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டது என்பதும் ;
(ஒ) வந்துதங்குபவரின் ஒப்பம் ;
(ஓ) தகுதிவாய்ந்த அதிகாரியினால் குறிப்பிடப்படக்கூடிய வேறேதேனும் தகவல் ;

ஆகியனவாம்.

(2) ஏதேனுமொரு பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலின் சொந்தக்காரர், காலந்தோறும், அத்துடன் சபையினால், சபைத் தலைவரால் அல்லது சபைத் தலைவரின் அதிகாரத்தின் கீழ்ச் செயலாற்றும் சபையங்கத்தவரால் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது அத்தகைய அதிகாரியின் சார்பாகச் செயலாற்றும் சபையின் பணிப்பாளர் அல்லது உதவிப் பணிப்பாளர் ஒருவரால் வேண்டப்படும் போதெல்லாமும், அத்தகைய சொந்தக்காரரால் பரிபாலிக்கப்படும் புத்தகங்களிலும், இடாப்புகளிலுமிருந்து அத்தகைய தகவலின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பொழிப்புகளை அல்லது அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பொருள்கோடல்.

59. இவ்விதிப்புக்கோவையில், சந்தர்ப்பம் வேறுவிதமாக வேண்டினாலன்றி—

"ஏற்ற அறிவிக்கப்பட்ட கட்டணம்" என்பது ஏதேனுமொரு பதிவின், ஏதேனுமோர் அனுமதிச்சீட்டின், ஏதேனுமோர் உரிமத்தின் அல்லது பதிவுசெய்தற் குறிப்பொன்றின் பிரதியெதாவதன் அல்லது அனுமதிச்சீட்டெதாவதன், அல்லது உரிமமெதாவதன் ஏதேனுமொர் இணைப்பிரதியின் நோக்கங் களுக்கு, அத்தகைய நோக்கங்களுக்கெனத் தகுதிவாய்ந்த அதிகாரியினாற் கசற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்மூலம் 54 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் நியமிக்கப்பட்ட கட்டணம் எனப் பொருள்படும்;

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது சட்டத்திலுள்ள அதே கருத்தையுடையதாகும்;

"உரிமம்" என்பது தகுதிவாய்ந்த அதிகாரியினால் இவ்விதிப்புக் கோவையின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமம் எனப் பொருள்படும்;

"அனுமதிச்சீட்டு" என்பது தகுதிவாய்ந்த அதிகாரியினால் இவ்விதிப்புக்கோவையின்கீழ் வழங்கப்பட்ட ஓர் அனுமதிச்சீட்டு எனப் பொருள்படும்;

"பதிவுசெய்யப்பட்ட" என்பது இடாப்பிற் பதிவுசெய்யப்பட்ட எனப் பொருள்படும்;

"பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேல்" என்பது ஒரு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற் றேலொன்றாக அல்லது இரு–நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக அல்லது மூன்று—நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக அல்லது நான்கு—நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக அல்லது ஐந்து—நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றாக அவ்விதம் பதிவுசெய்யப்பட்ட ஓர் உல்லாசப்பிரயாண ஹொற்றேல் எனப் பொருள்படும்; பதிவுசெய்யப்பட்ட ஒரு—நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல், பதிவுசெய்யப்பட்ட இரு—நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல், பதிவுசெய்யப்பட்ட மூன்று—நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல், பதிவுசெய்யப் பட்ட நான்கு—நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல், பதிவுசெய்யப்பட்ட ஐந்து—நட்சத்திர உல்லாசப்பிரயாண ஹொற்றேல் ஆகிய வாக்கியங்களும் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

"ஒழுங்குவிதி" என்பது இவ்விதிப்புக்கோவையில் உள்ள ஓர் ஒழுங்குவிதி எனப் பொருள்படும்;

"நட்சத்திர வகுப்பு" என்பது பதிவுசெய்யப்பட்ட உல்லாசப்பிரயாண ஹொற்றேலொன்றின் தொடர்பாக அந்த ஹொற்றேலின் பதிவுசெய்தற் குறிப்பில் அதற்கு ஒதுக்கப்பட்ட நட்சத்திர வகுப்பு எனப் பொருள்படும்;

"சட்டம்" என்பது 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டம் எனப் பொருள்படும்;

"சபை" என்பது 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாணச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டு அமைக்கப்பட்ட இலங்கை உல்லாசப்பிரயாணச் சபை எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது உல்லாசப்பிரயாணம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் எனப் பொருள்படும்.

நீக்கங்கள்.

60. இலங்கை உல்லாசப்பிரயாணச் சபையினாலாக்கப்பட்டு 1970 மார்ச்சு 10 ஆந் தேதிய 14,896/2 ஆம் இலக்க அதிவிசேட கசற்றில் வெளியிடப்பட்ட 1970 ஆம் ஆண்டின் உல்லாசப்பிரயாண ஹொற்றேல்கள் விதிப்புக்கோவை இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

9–730/2—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

**1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டம்**

49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, வீடமைப்பு, நிர்மாண அமைச்சர் பீற்றர் ஜெரல்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாகக் கீழ்க்காணப்படும் அட்டவணைகளில் விபரிக்கப் பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

பீ. ஜீ. பீ. கெனமன்,
வீடமைப்பு, நிர்மாண அமைச்சர்.

மஹா 4/அத./226,
கொழும்பு,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 07 ந உ.

**1 ம் இல. அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு நான்கு கோறளைஸ் கண்டி, கெத்தம்பே 42 உ கிராமசேவகர் பிரிவுக்குள்ளே அமைந்துள்ளதும், ஏ. 4. ரூ. 1. பே. 0, விஸ்தீரணமுள்ளதும் பிறிம்றோஸ் ஹில் ஆதனம் என்று அழைக்கப்படுவதுமான காணிக்குள்ளே ஒரு காணித்துண்டு. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி ;

கிழக்கு : அதே காணியின் எஞ்சிய பகுதியின் றோட்டு ;

தெற்கு : அதே காணியின் எஞ்சிய பகுதியின் றோட்டு ;

மேற்கு : அஞ்சல் திணைக்களத்துக்குச் சொந்தமான காணி.

**2 ம் இல. அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டிமாவட்டம், நாலுகோறளைஸின் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கெத்தம்பே 42 உ கிராமசேவகர் பிரிவுக்குள்ளே அமைந்துள்ளதும், பிறிம்றோஸ் ஹில் ஆதனம் என்று அழைக்கப்படும் காணிக்குள்ளே 20 அடி அகலமுள்ளதும், (0 ஏ. 1 று. 0 பே.) விஸ்தீரணமுள்ளதுமான ஒரு காணித்துண்டு. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : மாபெல் கூறே மாவத்தை ;

கிழக்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி ;

தெற்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி ;

மேற்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி.

9–728—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

## பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டம்

5 ம் பிரிவின் கீழான அறிவித்தல்

(110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் 5 ம் பிரிவின்படி எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினேல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் 1935 ம் ஆண்டு செப்தெம்பர் 20 ந் தேதிய 8,146 ம் இலக்க கசெற்றின் அனுபந்தத்திற் பிரசுரிக்கப்பட்டு, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டபடியான அறிவித்தலை, அதற்குள்ள அட்டவணையில் "வடமேற்கு மாகாணம் குருணாகல் மாவட்டம்" என்னும் தலைப்பின் கீழ் ;

1. கந்திகே கோறளை பிரிவு சம்பந்தமான 23 ம் விடயத்திற்குப் பதிலாக இதற்குள்ள "அ" என்னும் அட்டவணையிற் தரப்பட்டுள்ள விடயத்தை இடுவதன் மூலமும்,

2. 23 ம் விடயத்தை உடனடுத்து இதற்குள்ள "ஆ" என்னும் அட்டவணையிற் தரப்பட்டுள்ள 23 அ என்னும் புதிய விடயத்தை சேர்ப்பதன் மூலமும்,

1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ந் திகதியிலிருந்து இவ்வறிவித்தல் மூலம் திருத்துகிறேன்.

பீலிக்ஸ். ஆர். டயஸ் பண்டாரநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஓகத்து மீ 27 ந் த.

### அட்டவணை "அ"

23. பின்வரும் கிராமங்களையடக்கிய கிரிமெற்றியாவ பிரிவு :—

அம்பகொலவவ
அமுனுகம
படல்கம
போகொடகெதற
தாத்நவ
எகொடயாகம
கல்ரன்வத்த
கினுக்கல
கிரிகொல்லேகம
ஜயலத்கம
கடகத்தகம
கைறக்கம
கிரிமெற்றியாவ
டும்புக்வவ
பகல அமுனுகம
பகலவத்த
பானுசியம்பலாவ
பண்ணலயாகம
வலமிரியாகெதற

### அட்டவணை "ஆ"

23. அ. பின்வரும் கிராமங்களையடக்கிய அம்பன்பொல பிரிவு :—

அம்பகம்மன
அம்பன்பொல
அமுத்வெவ
அத்தப்பத்து சியம்பலேவ
அட்டவறல
அட்டவறல
படபெத்தாவ
பமுனுகம
பமுனுகம
பம்பற மித்தோகம
பேறுவெவ
பொறலெவ
டெமட்டாவ
தெமட்டகொல்ல
திக்கான
தொடன்கொல்லாவ
தும்புலுவவ
எல்லேபடகம
எறுபுவெவ
கலவெவ
கனேகம
கவறகானே
கெற்றாடியுள்ள
கெற்றாடியுள்ள
கெற்றிலாவ
கோனகம
கோனமடித்த
ஹம்மில்ல கடவல
ஹம்மில்ல கொட்டுலா
ஹெலபேவ
ஹெற்றிகம
ஹேலன் பொலகம
ஹித்தோகடவல
ஹிரியாலயாகம
இகல பக்மீவல
இகலகுடவவ
இகல றனேறேவ
இகல உடன்காவ
இகல வல்பலுவ
இப்பலோகம
களுபெறுமாவ
கமுவிலபொட்டான
கறன்தகலவெவ
காறம்பே
கறுவலகஸ்வவ
காசிகோட்டே
கட்டுபிற்றிகம
கிரிமெற்றிவத்தை
கிவுலேகம
கிவுல்லேவ
கொடிகாட்டுவ
கொக்காட்டியாவ
கோன்கடவல
கோன்வவ
கொறகஹாகம
கொறல்லேகம
கொஸட்டாவ
கோட்டகிம்புலேவ
குடபெலுனகல
குடபானுகஸ்வவ
குருலேவ
கும்புக்கலெவ
கும்புக்கெட்ட
குருந்தேகம
மட்டெனிகம
மஹாடிவில்லேவ
மாம்பிற்றிகம
மமுனுகம
மானின்கமுவ
மெடகம
மூனமலேகம
நாதேவ
நாவகத்த
நெக்கத்தி கும்புக்வவ
நெக்கத்தி தறனகஸ்வவ
நெக்கத்தி வண்டுறெஸ்ஸ
நெலுன்பட்டேவா
நிக்கபிற்றிகம
நிக்குன்னேவ
பகலபக்மீவவ
பகலகுடவத்த
பகலகுடவவ
பகலமானின்கமுவ
பகலவல்பலுவ
பகலபெலுன்கல
பாலபட்டால
பானடறகம
பானேகம
பறப்பேகம
பறசங்கிலிகம
பத்தினிகம
பிதுறுவெல்லாவ
பில்ல
பொல்பிட்டிகம
போட்டான
புசெல்லேகம
றலகேவவ
றம்பாவ
றன்தெனிகம
றனருவ
றேலாவ
தம்மன்னவ
தம்மிட்டாகம
தம்பாற
தந்திரியாவ
உடடிவுள்ளாவ
உடன்காவ
உடதம்மன்னவ
உடவலலிய
உன்கொன்டால
யும்வாவ
உசேவா
வடுறெஸ்ஸ
வலலிய
வல்பலுவ
வறகம்மன
வெறகறயாகம
வீரகந்தவவ
வீறசோல
யக்கபலுகஸ்வவ
யாலுவவ
யந்தம்பலகம

9–785—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

## 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர்நட்ட உத்தரவாதச் சட்டம்

பிரிவு 11 (2) ன் கீழ் அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர்நட்ட உத்தரவாதச் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில், கீழ்வரும் ஏதேனுமொரு காரணத்திற்காக நெற்பயிர் நட்டமாயின் கட்டாய பயிர் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட காரணங்கள் :

(1) போதிய நீரின்மை
(2) வரட்சி
(3) நீர்த்தேக்கம்
(4) வெள்ளப்பெருக்கு
(5) பயிர்நோய்
(6) பயிர்ப்பூச்சி அரித்தல்
(7) காட்டுப்பன்றி
(8) காட்டு யானை
(9) அங்கீகரிக்கப்பட்ட பயிர்ச்செய்கை முறைகள்.

பயிர்நட்ட உத்தரவாதப் பகுதி,
4, புள்ளேர்ஸ் லேன்,
கொழும்பு 7,
13, செப்டெம்பர் 1973.

கே. வீரவர்தன,
கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

9–810/1—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

## 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்க பயிர்நட்ட உத்தரவாதச் சட்டம்

*பிரிவு 14 (3) ன் கீழ் அறிவித்தல்*

1961 ம் ஆண்டின் பயிர்நட்ட உத்தரவாதச் சட்டத்தின் பிரிவு 14 (3) ஆல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கமத்தொழிற் சேவை சிரேட்ட உதவி ஆணையாளர் நாகமுத்து புலேந்திரன் ஆகிய நான், பெரும்போக காலத்தில், தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பகுதிக்குமுரிய பயிர்ச் செய்கைக் காலங்கள் கீழ்வரும் உப அட்டவணையிற் காட்டியுள்ளபடியெனத் தீர்மானிக்கிறேன்.

கமத்தொழிற் சேவைத் திணைக்களம்,
4, புல்லர்ஸ் ஒழுங்கை,
கொழும்பு 7,
1973, செப்ரெம்பர் 13 ந் திகதி.

நா. புலேந்திரன்,
கமத்தொழிற் சேவை இலாகா,
சிரேட்ட உதவி ஆணையாளர்.

### உப அட்டவணை

| மாவட்டம் | பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவு | பெரும்போகம் | |
|---|---|---|---|
| | | விதைக்கத் தொடங்கும் திகதி | அறுவடைசெய்யும் கடைசித் திகதி |
| 1. கொழும்பு | 1. கிழக்கு கேவாகம் கோறளை | யூலை 1 | மார்ச்சு 30 |
| | 2. மேற்கு கேவாகம் கோறளை | ஆகஸ்ட் 10 | மே 31 |
| | 3. மேற்கு சியனு கோறளை மதபத்துவ | யூலை 1 | மார்ச்சு 10 |
| | 4. வடக்கு அளுத்குறுகோறளை | யூலை 1 | மார்ச்சு 20 |
| | 5. திவுலுபிடிய | யூலை 1 | மார்ச்சு 20 |
| | 6. வடக்கு அளுத்குறுகோறளை | யூலை 1 | மார்ச்சு 20 |
| | 7. முத்தல் பிரதேசம் | — | — |
| 2. களுத்துறை | 1. மேற்கு பஸ்துன் கோறளை | யூலை 10 | மார்ச்சு 31 |
| | 2. களுத்துறை தோட்டமுனை வடக்கு | யூலை 15 | மார்ச்சு 31 |
| | 3. களுத்துறை தொட்டமுனை தெற்கு | யூலை 15 | மார்ச்சு 31 |
| 3. கண்டி | 1. உடபலாத ப. செ. குழு 80 | ஆகஸ்ட் 1 | ஏப்ரல் 15 |
| | உடபலாத ப. செ. குழு 81 | ஆகஸ்ட் 5 | சனவரி 1 |
| | உடபலாத ப. செ. குழு 83, 84, 85, 86 | செப்டம்பர் 15 | ஏப்ரல் 15 |
| | உடபலாத ப. செ. குழு 82, 87, 88, 89 | ஆகஸ்ட் 1 | மார்ச்சு 31 |
| | உடபலாத ப. செ. குழு 90, 95, 96, 97, 98 | செப்டம்பர் 15 | ஏப்ரல் 15 |
| | உடபலாத ப. செ. குழு 91, 92, 93, 94 | யூலை 15 | ஏப்ரல் 15 |
| | உடபலாத ப. செ. குழு 99, 100, 101 | யூலை 1 | மார்ச்சு 31 |
| | 2. மததும்பறை | ஒக்டோபர் 5 | ஏப்ரல் 15 |
| 4. காலி | 1. கங்கபடபத்துவ வடக்கு | ஒக்டோபர் 1 | மார்ச்சு 31 |
| | 2. கங்கபடபத்துவ தெற்கு | ஒக்டோபர் 1 | மார்ச்சு 31 |
| 5. மாத்தறை | 1. வலிகன் கோறளை | யூலை 1 | பெப்பிரவரி 28 |
| | 2. கங்கபடபத்துவ | யூன் 1 | மார்ச்சு 15 |
| 6. அம்பாந்தோட்டை | 1. மாகம்பத்துவ | ஒக்டோபர் 15 | ஏப்ரல் 15 |
| | 2. கிழக்கு கிறவப்பத்துவ | ஒக்டோபர் 15 | ஏப்ரல் 15 |
| | 3. தெற்கு கிறவப்பத்துவ | யூலை 1 | ஏப்ரல் 15 |
| | 4. வடக்கு கிறவப்பத்துவ | யூலை 1 | மார்ச்சு 31 |
| 7. யாழ்ப்பாணம் | 1. கராச்சி | செப்டம்பர் 25 | ஏப்ரல் 10 |
| 8. வவுனியா | 1. வவுனியா வடக்கு | செப்டம்பர் 1 | ஏப்ரல் 30 |
| | 2. வவுனியா தெற்கு (தமிழ்ப்பிரிவு) | செப்டம்பர் 1 | ஏப்ரல் 15 |
| | 3. வெங்கலச் செட்டிகுளம் | செப்டம்பர் 1 | ஏப்ரல் 15 |
| 9. மட்டக்களப்பு | 1. வடக்கு மண்முனை | ஒக்டோபர் 1 | ஏப்ரல் 15 |
| | 2. மேற்கு மண்முனை—ப. செ. குழு 82 | ஒக்டோபர் 1 | ஏப்ரல் 15 |
| | மேற்கு மண்முனை 35, 37, ; ப. சே. குழு 43, 67 | ஒக்டோபர் 1 | ஏப்ரல் 15 |
| | 3. தெற்கு மண்முனையும் எறிவில் போறதீவும் | ஒக்டோபர் 1 | ஏப்ரல் 15 |
| | 4. கோறளைப்பத்து | ஒக்டோபர் 1 | மார்ச்சு 31 |
| 10. அம்பாறை | 1. சம்மாந்துறைப்பத்து | ஒக்டோபர் 15 | மே 15 |
| 11. திருகோணமலை | 1. கிண்ணியா | செப்டம்பர் 15 | மார்ச்சு 31 |
| | 2. தம்பலகாமம் | செப்டம்பர் 15 | மார்ச்சு 31 |
| | 3. கந்தளாய் | செப்டம்பர் 15 | மார்ச்சு 31 |
| 12. குருணகல் | 1. கிரியாலகத்பத்துவ | ஆகஸ்ட் 15 | ஏப்ரல் 30 |
| | 2. பன்னல | யூன் 15 | மார்ச்சு 31 |
| | 3. குளியாபிடிய | யூன் 15 | மார்ச்சு 31 |
| | 4. பிங்கிரிய | யூன் 15 | மார்ச்சு 31 |
| | 5. வாரியபொல | யூலை 15 | ஏப்ரல் 15 |
| | 6. கெட்டிப்பொள | யூலை 15 | ஏப்ரல் 15 |

| மாவட்டம் | பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவு | பெரும் போகம் விறைகுத் தொடங்கும் திகதி | பெரும் போகம் அறுவடை செய்யும் கடைசித் திகதி |
|---|---|---|---|
| 13. அனுராதபுரம் | 1. குறுனுபலாத மத்தி (புழுதி விதைப்பு) | ஒக்டோபர் 15 | ஏப்ரல் 30 |
| | குறுனுபலாத (சேற்று விதைப்பு) | நவம்பர் 15 | ஏப்ரல் 30 |
| | 2. குறுனுபலாத வடக்கு | ஒக்டோபர் 15 | ஏப்ரல் 30 |
| | 3. கலாகம்பலாத வடக்கு | ஒக்டோபர் 15 | மே 15 |
| | 4. கலாகம்பலாத தெற்கு | ஒக்டோபர் 15 | மே 15 |
| | 5. நுவரகம்பலாத மேற்கு | நவம்பர் 15 | ஏப்ரல் 30 |
| | 6. நுவரகம்பலாத கிழக்கு | நவம்பர் 15 | ஏப்ரல் 30 |
| | 7. நுவரகம்பலாத தெற்கு | ஒக்டோபர் 15 | யூன் 15 |
| 14. பதுளை | 1. யடகிந்த | ஒக்டோபர் 1 | யூலை 31 |
| | 2. பசறை | திசம்பர் 1 | செப்டம்பர் 30 |
| | 3. மதகிந்த | சனவரி 10 | ஆகஸ்ட் 31 |
| 15. இரத்தினபுரி | 1. நவதுன்கோறளை ப. செ. கு. 2, 4, 12, 24, 16, 17 | ஆகஸ்ட் 15 | பெப்பிரவரி 28 |
| | நவதுன்கோறளை ப. செ. கு. 5, 6, 13, 14, 15, 19, 21, 23, 25, 28, 29, 31 | ஒக்டோபர் 1 | ஏப்ரல் 30 |
| | 2. அட்டகளன்கோறளை | செப்டம்பர் 1 | மே 15 |
| 16. கேகாலை | 1. தெகிம்பலும் பகத புளத்கம் கோறளை | ஆகஸ்ட் 1 | ஏப்ரல் 30 |
| | 2. பெலிகல் கோறளை | ஆகஸ்ட் 1 | ஏப்ரல் 15 |

9-810/2—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

## 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டம்

பிரிவு 8 (4) ன் கீழ் அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர்நட்ட உத்தரவாதச் சட்டத்தின் பிரிவு 8 (1) ல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கமத்தொழிற் சேவை சிரேட்ட உதவி ஆணையாளர் நாகமுத்து புலேந்திரன் ஆகிய நான் இத்தால் தீர்மானிக்கிறேன்.

(அ) 1971 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ந் திகதி பிரசுரிக்கப்பட்ட 14,979 ம் இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானியில் 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் உத்தரவாதச் சட்டத்தின் பகுதி 8 (4) ன் கீழ் அறிவிக்கப்பட்ட அட்டவணையின்படியும் 1972 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ம் திகதியின் 29 ம் இலக்க (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்ட அட்டவணை 1 க்கு அமைவாகவும்,

(ஆ) இந்த நட்ட உத்தரவாதியினால் பாதிக்கப்படும் மேலே (அ) ல் நிர்ணயிக்கப்பட்ட விஸ்தீரணத்திலுள்ள நெற்பயிர் முழுவதற்கும் அல்லது ஏதாவது ஒரு பகுதிக்கும் உரிமையுடையோரும், அப்பயிர்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள பகுதிகளும் கீழ் வரும் அட்டவணை 2 ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கமத்தொழிற் சேவைப் பகுதி,
4, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு 7,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ந் திகதி.

நா. புலேந்திரன்,
கமத்தொழிற் சேவை சிரேட்ட உதவி
ஆணையாளர்.

### அட்டவணை

| நபரின் விபரம் (நெற்காணிச் சட்டத்தில் விபரிக்கப்பட்டபடி) | பயிரின் பங்கு |
|---|---|
| 1. சொந்தப் பயிர் செய்பவர் | 100 |
| 2. சொந்தப்பயிர் செய்யாது விவசாயக் கூலியாட்கள் மூலம் பயிர் செய்பவர் | 100 |
| 3. விவசாயக் கூலியாட்கள் மூலம் பயிர் செய்யும் குத்தகைக்காரர் | 100 |
| 4. வாரத்திற்குப் பயிர் செய்பவர் (ஆகக் குறைந்ததில்) | 75 |
| 5. வாரத்திற்குப் பயிர் செய்பவரால் பயிரிடப்படும் காணிச் சொந்தக்காரர் (ஆகக் கூடியதில்) | 25 |
| 6. வாரத்திற்கு பயிர் செய்பவரால் பயிரிடப்படும் குத்தகைக்காரர் (ஆகக் கூடியதில்) | 25 |

9-810/3—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

---

## 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர்நட்ட உத்தரவாதச்சட்டம்

பிரிவு 13 (3) (அ) வின் கீழ் அறிவித்தல்

1961 ம் ஆண்டின் பயிர்நட்ட உத்தரவாதச் சட்டத்தின் பிரிவு 13 ன் உப பிரிவு (3) (அ) ஆல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கமத் தொழிற் சேவை ஆணையாளர் கருணதாச வீரவர்தன ஆகிய நான், நட்ட உத்தரவாதம் செய்யப்பட்டவர்கள் பின்பற்றவேண்டிய ஆகக் குறைந்த பயிர்ச் செய்கை முறைகளும், அங்கீகரிக்கப்பட்ட விசேட பயிர்ச்செய்கை முறைகளும் கீழ்வரும் அட்டவணையிற் காட்டியபடியென இத்தால் தீர்மானிக் கிறேன்.

பயிர்நட்ட உத்தரவாதப் பகுதி,
4, புள்ளேர்ஸ் லேன்,
கொழும்பு 7,
13, செப்டெம்பர் 1973.

கே. வீரவர்தன,
கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

### அட்டவணை

ஆகக்குறைந்த பயிர்ச்செய்கை முறைகள்

1. வரம்புகளைத் திருத்துதலும் பராமரித்தலும்
2. மூலம் பெயர்த்தல் அல்லது உழுதல் அல்லது சேறு மிதித்தல் அல்லது மட்டுப்படுத்தல்.
3. தூவி விதைத்தல்.
4. பயிரைப் பாதுகாத்தலும் கவனித்தலும்.
5. நட்டம் ஏற்படுவதைத்தவிர்த்தல் அல்லது குறைத்தல்.
6. அறுவடை செய்தல்.

அங்கீகரிக்கப்பட்ட விசேட பயிர்ச் செய்கைமுறைகள்

1. வரிசையில் விதைத்தல், நாற்றுநடுதல், அல்லது வரிசையாக நாற்று நடுதல்.
2. அங்கீகரிக்கப்பட்ட உரம் பாவித்தல்.
3. களை பிடுங்கல், பூச்சிநாசினி பாவித்தல் அல்லது பரம்படித்தல்.

9-810/4—28.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 79

**கூலி நிர்ணய சபைக் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

மெத்தைத்தும்பு, சிலிர்த்தும்பு ஏற்றுமதித் தொழிலுக்கான கூலி நிருணய சபை, (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயமான) கூலி நிருணய சபைக் கட்டளைச்சட்டத்தின் 30 ம் பிரிவு வாயிலாகத் தமக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டிருக்கும் வகையாகத் தீர்மானங்களை மாற்றிக் கொள்ளவிருக்கும் தமது கருத்தினை அக்கட்டளைச் சட்டத்தின் 28 ம் பிரிவில் அமைந்துள்ள ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கெதிரான ஆட்சேபனைகள், 1973 ம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 16 ந் தேதி நண்பகல் 12 மணி வரையும் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவனவாகும்.

அப்படிப்பட்ட ஆட்சேபனை ஒவ்வொன்றும், அவ்வண்ணம் ஆட்சேபிப்பதற்கான நியாயங்களைக் காட்டும் கூற்றுடன், எழுத்துவாயிலாக அனுப்பப்படுதல் வேண்டும்.

டபிள்யு. எல். பி. த மெல்,
தலைவர்.
மெத்தைத்தும்பு, சிலிர்த்தும்பு ஏற்றுமதித்
தொழிலுக்கான கூலி நிருணய சபை.

கொழும்பு,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 18 ந் வ.

**அட்டவணை**

மெத்தைத்தும்பு, சிலிர்த்தும்பு ஏற்றுமதித் தொழிலுக்கான கூலி நிருணய சபையினால் ஆக்கப்பட்டு, 1962 ம் ஆண்டு யூன் மாதம் 29 ந் தேதிய 13,197 ம் இலக்கச் செய்திமடலிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டதும், காலத்துக்குக்காலம் மாற்றப்பட்டதுமான முடிபானது, அவ்வட்டவணையின் 1 ம் பாகத்தில் " அரசாங்க விடுமுறைகள் " என்னும் தலைப்பின் கீழ் 9(அ) ம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும்—

" அரசாங்க விடுமுறைகள்

9(அ) இப்பந்தியினதும் 10 ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, வேலைக்கமர்த்துபவர் ஒவ்வொருவரும் தம்மிடம் தொழில்புரியும் தொழிலாளர்கள் யாவருக்கும் 1971 ம் ஆண்டின் 29 ம் இலக்க விடுமுறை அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கியையப் பின்வரும் அரசாங்க விடுமுறைகளை ஊதியத்துடன் கூடிய விடுமுறைகளாக, வழங்குதல் வேண்டும் :—

(1) தமிழ்த் தைப்பொங்கற் திருநாள் ;
(2) தமிழ், சிங்களப் புத்தாண்டு திருநாளுக்கு நேரடுத்து முந்திய நாள் ;
(3) தமிழ், சிங்களப் புத்தாண்டுத் திருநாள் ;
